ஸ்ரீ ஸாயி பாபாவுடைய பக்தர் அனுபவம்

முதற் பாகம்

இங்கிலத்தில் பி. வி. நரசிம்மஸ்வாமியால் வரையப்பட்டு
ஸ்ரீ T. துரைசாமி பிள்ளையவர்களாலும்;
ஸ்ரீ விஸ்வனாதய்யரவர்களாலும்
தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

புத்தகத்தில் யாதொரு சுதந்திரமும் இயற்றினவர்களுக்காவது
மொழி பெயர்த்தியவர்களுக்காவது வெளியிட்டவருக்காவது.
ரிசர்வ் செய்யப்படவில்லை எல்லோரும் பிரசுரிக்கலாம்.

Vol. I

முன்னுரை

-:-

திவான்பகதூர் K. சுந்தரம் செட்டியார் ரிடையர்ட், ஹைகோர்ட் ஜட்ஜ் எழுதியது:—

இவ்வுலகில் பலர் நவீன ஆராய்ச்சியால் அங்கீகரிக்கப் படாதவை உண்மையல்ல என்று தப்பு எண்ணங் கொண்டு உலகாயதத் திரையினுல் பார்வை யிழந்தனர். அத்தகைய மாந்தர் பலருக்கும் எனது நண்பர் ஸ்ரீ பி. வி. நரசிம்ம சுவாமி வெளியிட்டுள்ள இந்நூல் கண்ணைத் திறந்துவிடும். ஸ்ரீ ஸாயி பாபாவின் மஹிமை அவர்களுடைய பக்தர்களின் அத்யத்புதமான அனுபவங்களில் வெளியாகும். இதனை யியற்றியவர் அவற்றை மிக்கக் கவலையுடன் சேகரித்தது பொதுமக்களுக்குச் செய்த ஓர் பேருதவி. மஹா யோகியும், மகாசித்த புருஷருமான பாபா வுடைய ஆச்சரியகரமான செயல்களைக் கண்கூடாகக் கண்ட பல பக்தர்களின் சொந்த அனுபவம் இவற்றில் காணலாம். அவற்றைப் படித்தால் மனதிலுள்ள அறியாமையும் சம்சயமும் நீங்கும். நம்பிக்கை யும் பக்தியும் உதிக்கும். ஸ்ரீ ஸாயி பாபா ஆத்மீகரசாயனத் தில் நிபுணர். பக்தர்களுடைய இழிவான இச்சைகளையும் ஆசைகளையும் ஒழித்து மனதை அத்புதமாய் புநிதப் படுத்தி அவர்களைத் தூய்மை நிலையில் சேர்த்திடுவர். பாபா ஜனங்க ளுடைய சரீரப் பிணிகளையும் ஜீவர்களைப் பீடிக்கும் பிறவிப் பிணிகளையும் கருணை கூர்ந்து தீர்க்கும் வைத்யர்.

இந்நூலைப் படிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் இந்நூ லாசியருக்கு மிக்க நன்றி செலுத்த வேண்டுமென்பது கூற

வேண்டுமோ! பாபா உலகத்தை உய்விக்கவந்தவர். நம்பிக்கை வைத்து பக்தி செய்தவர்களிடம் அவர் தம் கருணை பொழிந்துவந்தார். இப்பொழுதும்கூட அவரருளைத் தேட வேண்டிய முறையில் தேடும் ஜனங்களுக்கு, இவ்வாசிரியர் கூறியபடி, அவ்வருள் கைகூடும்.

17—1—'39

கையொப்பம்

K. சுந்தரம் செட்டியார்.

பூர்வ பீடிகை

—:—

ஸாயி பாபா விஷயமான பூர்வ பீடிகை (Introduction to Sai Baba) என்ற நூலின் சித்தாந்தங்களுக்கு ஆதாரங்களின் ஒரு பாகம் இந்நூலில் வரையப்படுமென்று அதில் இருக்கிறது. அந்த சித்தாந்தங்களிலும் ஸ்ரீ பாபாவின் குணங்களிலும் முறைகளிலும் நம்பிக்கையை உறுதிப் படுத்துவதுடன் இந்நூல் அக்கரையுடன் வாசிப்போருக்கு மற்றும் சில விஷயங்களிலும் உதவிபுரியும். உதாரணமாக, இதிலுள்ள முதல் அனுபவம் மதிப்பிற்குறிய நண்பரும் இப்பொழுதும் வேலையிலமர்ந்திருக்கும் ஹைகோர்ட்டு ஜட்ஜுமான ஒருவருடையது. அதனால் முன்னிட்ட பரிசயமில்லாதவர் கூட பாபாவை யணுகவும் நெருங்கிப் பழகவும் அவ்விதமாய் பூரண நன்மையை அடையவும் முடியும். அந்த ஜட்ஜ் அடைந்ததைவிட அதிகமாக நன்மை பெறலாம். அந்த ஜட்ஜின் உண்மைப் பெயரை வெளியிடாமல் போலிப்பெயர் ஒன்றை வெளியிடவேண்டி யிருக்கிறதேயென்று இந்நூலியியற்றினவருக்கு வருத்தம். ஆனால் அந்தக் கனவான் தன்னுடைய அனுபவங்களைத் தன்பெயர் போட்டுப் பகிரங்கமாகக் கூடாதென்றனர். அதற்கிணங்கி பெயர் மாற்றப் பட்டது. அதைத்தவிற இந்நூலில் வேரே ஒரு பெயர்தான் போலிப் பெயர் "அது மானேஜர் அம்மை" என்பது. இந்தியமாதர் தங்கள் பெயரைப் பயிரங்கப் படுத்துவதைப் பற்றிக் கூசுவது மாதர் நாணமென்று இந்தியர் மெச்சுவர். இதில்கண்ட புணைப்பெயர் அவர் அவர் பர்த்தா ஆகிய இருவருடைய நிலை

* இத் தமிழ் நூலில் போலிப் பெயர் அச்சிடவில்லை.

மையை நன்கு வெளியிடுகின்றது. அவர்களை யறிந்த பலரும் அவர்கள் பக்தர்களென்றும் அவரிட வார்த்தை நம்பத் தகு மென்றும் கருதுகின்றார்கள். இதற் பக்தர்களது அனுப வங்களில் அவர்களுடைய யோக்யதாம்சம் வெளிப்படுவதால் அவற்றைப் பற்றி விவரிக்க வேண்டுவதில்லை. புரொபஸர் நார்கே கூறியதனைத்தும் தெளிவாகவும் அழுத்தமாகவும் நிதா னித்துச் சொன்னதாகவும் இருக்கிறது. ராவ்பகதூர் S. B. துமால், புரந்தரே, நாச்சனே ஆகிய இவர்களும் ஷே ஜட் ஜூம் பாபாவிடம் அதிக ஆர்வமும், பக்தியும் கொண்டவர் களாவர். அவர்கள், பாபாவின் அருளுக்குப் பாத்திரானது முதல் அவரிட மிருந்து இடைவிடாது உதவி பெற்றுக் கொண்டிருக்கும் உண்மையை வெளிப்படுத்துகின்றனர் உற் சாகத்துடன் இதனை வாசிப்பவருக்கு அவ்வித உதவி கிடைக் காமற் போகாது. மதராஸிலுள்ள பக்தர்கள் இரண்டு வரு ஷங்களுக்கு முன் 'Sunday Times' இல் இவ்வாசிரியர் பாபாவைப்பற்றி எழுதியபிறகு பாபாவை யறிந்தனர். அவர் கள் இப்பொழுது ஸ்ரீ ஸாயி பாபா விடம் நெருங்கிப் பழகி அவருடைய பிரேரணையையும் உதவியையும் தினமும் ஒவ் வொரு நாழிகையும், அடைகின்றனர். ஸ்வாமி நாராயண தீர்த்தர், பேதம் என்பது உண்மையில் கிடையாது, வஸ்துக்க ளனைத்தும் ஆன்மாதான், என்ற உண்மையை உணர்ந்து நாவினால் நவில முடியாவானந்தத்தை அடைந்த தாக வெளியிட்டிருக்கிறார். பாபாவை ஊனுடம்பில் காணும் பாக்கியம் பெற்ற முற்கால பக்தர்களுக்கே அந்த அத்வை தானுப வானந்தம் கிடைப்பது என சொல்லமுடியாது. பாபாவின் பேரில் பொங்கும் பிரேமை வைக்கும் தற்கால பக் தனும் அத்தகையதும் அதற்கு மேலானதுமான நன்மையை யும் அடையலாம். பாபா மகாசமாதி யடைவதற்கு முன்

நடந்த அற்புதங்களைவிட பெரிய அற்புதங்களை இப்பொழுது அவர் நடத்துகிறார் என்பது ஸாயி யுடைய பக்தர்களால் வேறோரிடத்தில் எடுத்துக் காட்டியுள்ள சம்பவத்தால் விளங்கும். டாக்டர் ராணே என்பவர் இங்கிலாந்து சென்று வைத்தியப் பயிற்சியும் பட்டமும் பெற்றவர். பாபா மறைந்தபின் அவர் மனைவிக்குக் குஷ்ட நோயுண்டாய் அதனை யவர்தீர்க்க முடியவில்லை. ஆகையால் அவரும் அவர் மனைவியும் சீர்டி சென்று ஆறுமாதகாலம் தங்கினர் அந்தம்மை பாபாவின் அபிஷேக நீரில் தினமும் நீராடி அவருடைய உதியையும் உபயோகித்தார். கொஞ்சம் சுகமுண்டாயிற்று. பின்னர் பம்பாய்க்குச் சென்று பாபாவின் உதியையும் அபிஷேக தீர்த்தத்தையும் ரயிலில் தருவழைத்து உபயேகித்து வந்தார். இரண்டு வருஷகாலத்தில் அந்தம்மை தோல் சுயநிறமடைந்து பூரண சுகமடைந்தாள். பாபா மகாசமாதியாய் பல வருஷங்களான பின்னர் இது சம்பவித்தது.

இந்தப் பகுதியிலுள்ள மற்ற அனுபவங்கள் வெளிப்படையாக இருக்கின்றன. அவற்றி லிருந்து பாபா இந்தியாவின் இருபெரு மதத்தினற்கும் துரதிர்ஷ்ட வசமாக ஏற்பட்டுள்ள வித்யாஸ விரோதங்களை ஒழிப்பதற்கு எவ்வளவு உதவி யிருக்கிறாரெனக் காட்டும். அப்துல்லா ஜான் என்பவர் இமயகிரிக்கு அப்பாலிருந்து வந்தவர். விசேஷமாக வடக்கிலிருந்து வருகிற வலிமை மிக்க பொருந்திய ஜாதியினருக்கு இயற்கையாகவே பலமற்ற இந்தியர்கள் அதிலும் இந்துக்கள் பகைவரென்றும், இரையென்றும் எண்ணினர். அவர் ஸாயி பாபாவுடன் சேர்ந்ததும் புத்தியும் ஸ்வபாவமும் மாறி, இந்துக்களைத் தமது சகோதர ரென்றெண்ணி, வகுப்புச் சண்டை தேசத்தின் ஒற்றுமையைக் குலைப்பதெனவும் கருதுகிறார். அவர் மட்டுமேயில்லை. பலர் இவ்வாறு மாறி

யிருக்கின்றனர். சீர்டியில் இவ்வகுப்புக்குச் சண்டை கிடையாது. அங்கு இந்துக்கள் பாபாவின் சமாதியையும் மசூதியையும் கட்டினர். அதில் இருவரும் தியானஞ்செய்து பூஜை செய்கின்றனர். ஸாகோரி என்னுமிடத்தில் (சீர்டியிலிருந்து 3 மைல்) பாபாவுடைய ஓர் பிராமண பக்தர் அங்கு தம்மிடம் வருகிறமுஸல்மான் சகோதரருக்கென்று ஒரு மசூதிகட்டியிருக்கிறார். அது அங்குள்ள தத்தர், மாருதிகோயில்களுக்கு நெருங்கியிருக்கிறது. அதனால் கலகம், அமரிக்கைக்கேடு ஒன்றுமில்லை, உண்டாகும் என்கிற பயமும் கிடையாது. இந்துமதத்திலும் இஸ்லாமிலும் சிறந்தவைகளை தம்மிடத்தில் ஒருங்கே வைத்திருக்கும் பாபா இரு மதத்தினராலும் நன்கு மதிக்கப்பட்டு இருப்பதால் இவ் விரண்டைச் சேர்த்துக் கட்டும் சங்கிலியாக விருக்கிறார். இது வெறும் லௌகீக இணைப்பல்ல. பரமார்த்த விஷயத்தா லேற்படும் பலமான இணைப்பிது.

கடைசியிலுள்ள அனுபவங்கள் பாபாவின் சகோதர பாவத்தை விளக்கும். பக்தர்களும் இவரைப் பின்பற்றி அந்த பாவத்துடன் இருப்பதைபு மிதில் காணலாம். கிருஸ்தவம் முதலிய இதர மதஸ்தர்களிடத்திலும் பாபாவின் இந்த சகோதர பாவம் இருப்பதை காணலாம். பாபா சீர்டியில் அதிக காலம் தங்கியிருந்திருக்கிறார். அக்காலங்களில் முழுவதும் ஒற்றுமை சீரடியில் வழங்கிவருவதை, 1, 9 வாக்குமூலங்களில் கண்ட சச்சரவுகள் மாற்றவில்லை. இந்த சச்சரவுகள் வெகு அபூர்வம். வழக்கமாயுள்ள ஒற்றுமை இதனால் ருஜுவாகும். இதுவும் மற்ற முக்கிய அம்சங்களும் பக்தர்களின் அனுபவங்களாகஇனி வெளியிடப்படும் பாகங்களில் இன்னும் எடுத்துக் காட்டப்படும்.

முன்னுரையை முடிக்கு முன், இதனை இயற்றியவர் தங்கள் தங்கள் அனுபவங்களை அன்புடன் வெளிப்படுத்திய பலபக்தர்களுக்கு நன்றி செலுத்துகிறார். அத்தகைய பக்தர்களில் ஒருவரைப் பற்றி விசேஷமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர் தான் P. R. அவஸ்தீ. B. A. L. L. B.. அவர்கள். குவாலியரில் செஷன்ஸ் ஜட்ஜாயிருந்தவர் அவர் அதிக அன்புடன் அதிக அலைச்சல் பட்டு பலபக்தர்களிடம் இவ்வாசிரியரை அழைத்துச் சென்றார். அந்நாட்டுப் பாஷையில் அவர்கள் சொல்லும் அனுபவங்களை மொழிபெயர்த்துதவினார். ஸ்ரீ ஸாயியைக் குறித்து அப் பாஷைகளிலுள்ள புத்தகங்களையும் பத்திரங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவருடைய உதவிக ளில்லாவிடில் ஸாயியைப் பற்றிப் இந்நூலையும் மற்ற நூல்களையும் இவ்வாசிரியர் வரையமுடியாது.

பி. வி. நரசிம்மஸ்வாமி.

இப் புத்தகத்தை தமிழில் எழுதவேண்டுமென்று ஸ்ரீமான் A. S. கோபால கிருஷ்ணய்யர் தீர்மானித்தார். அவர் தீவிர பக்திக் கிணங்கி ஸ்ரீமான் T. துரைசாமி பிள்ளை, முதல் இரண்டு வாக்குமூலங்களையும் மற்றவைகளை ஸ்ரீமான் விஸ்வனாதய்யரும் மொழிபெயர்த்தார்கள். இவர்களுக்கெல்லாம் என் மனமார்ந்த வந்தனத்தை நான் செலுத்துகின்றேன்.

B. V. N. B.

ஸ்ரீ ஸாயி பாபா

1936ஹு ஜூன்மீ 11-ந்தேதியில்

மத்திய இந்தியாவிலுள்ள ஸாரஸ்வத குலத்திய சுமார் 50 வயதுள்ள, இப்பொழுது ஹைகோர்ட் ஜட்ஜு ஆக யிருக்கும் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்:—

நான் ஸ்ரீ ஸாயி பாபா அவர்களைப் பிரம்ம விஷ்ணு ருத்ர அம்சமாகவே கருதுகின்றேன். 1918-ம் வருடத்தில் அவர் சமாதியடையு முன்னர் அவ்வாறே கருதி வந்தேன். அவர் மறைந்த பிறகும் அவ்வாறே கருதி வருகின்றேன். எனக்கு அவர் மறையவில்லை. இப்போதும் என்னுடனே இருக்கிறார். அவர் சமாதி யடைந்ததும் அவரது ஸ்தூல சரீரம் மறைந்ததே தவிர அவர் மறையவில்லை.

ஸாயி பாபா அவர்கள் அடிக்கடி நமக்குத் தெளிவாக விளங்காத மொழியில் பேசுவார். பல கதைகளையும் கூறு வார். இதைக் கேட்போர் அவரவரிஷ்டப்படி பலவித அர்த்தம் செய்து கொள்வர். ஒரு முறை அவர் என்னிடம் இவ்வாறு பேசிவிட்டு, தான் கூறியதின் பொருள் விளங்கு கிறதாவெனக் கேட்டார். எனக் கொன்றும் புரியவில்லை யென்று கூறினேன். அப்போது பலர் என்னுடன் இருந் தனர். அவர்களெல்லோரும் போய்விட்ட பிறகு, கூறு வதின் பொருள் எனக்கு விளங்கவில்லை என்னிடம் சாதாரண

மொழியில் பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அது முதல் எனக்குத் தெளிவாக விளங்கும்படி பேசினர்.

எனக்கு பாபா எவ்வாறு குருவானர் என்பதை விளக்க எனது வாழ்க்கையின் வரலாற்றைச் சிறிது கூற வேண்டியது அவசியம். எங்களது குலதெய்வம் துர்காதேவி. நான் துர்காதேவியைப் பூசித்து வழிபடுவது வழக்கம். எனது எட்டாவது வயதில் உபநயனம் நடந்தது. காயத்ரி, சந்தியா மந்திரங்களைக் கற்றுக் கொண்ட பிறகு துர்கா பூசையை விட்டு நாராயணனைப் பூசிக்க ஆரம்பித்தேன். விஷ்ணுவுடைய படங்களில் துருவ நாராயணனுடைய படமே என் மனதைக் கவர்ந்தது. அப்படத்தை தியானம் செய்து நான் பூசிக்க ஆரம்பித்தேன். அவ்வாறு தியானம் செய்கையில் எனக்கும் நாராயணனுக்கு மிடையே துருவனுடைய படம் இடைஞ்சலாயிருந்தது. நான் அப்படத்திலுள்ள துருவனை அருத்தெடுத்து விட்டேன். அன்று முதல், அப்படத்தில் துருவனது இடத்தில் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மனதாரப் பிரார்த்தனை செய்து வந்தேன்.

நான் சிறு பிராயமுதல் ஆசனம் பிராணயாமம் அப்பியாசம் செய்து வந்தேன். ஒரு மணி அல்லது இரண்டு மணிநேரம் பத்மாசனம் அல்லது சித்தாசனத்தில் உட்கார்ந்து துருவ நாராயணனுடைய படத்தில் மனதைச் செலுத்தி தியானம் செய்வேன். சுமார் பதினைந்து நிமிஷம் மனம் அசைவற்று ஒரே லக்ஷ்யத்தில் நிற்கும். சுவாஸ பந்தனத்திலும் ஸாதனம் சற்று பலித்தது. இவைகளை ஓர் குருவின் உபதேசமில்லாமலே செய்து வந்தேன். இவ்வாறு 21-வது வயது வரையில் நாராயணனைத் தியானித்து வந்தேன்.

1910-ம் வருடத்தில் ஒரு நாள் இரவு நான் ஒரு கனவு கண்டேன். அக்கனவில் மூன்று விஷயங்களைக் கண்டேன்.

படுக்கையில் படுத்திருக்கும்போது என் தேகத்தினின்று நான் பிரிக்கப்பட்டு தனியே நிற்பதையும், என்முன் நாராயணனுடைய உருவம் தோன்றுவதையும் பார்த்தேன். சுமார் ஒரு மணிநேரங் கழித்து அதே கனவை மறுமுறையுங் கண்டேன். ஆனால் அப்போது நாராயணனுடைய உருவத்தினருகில் வேறொரு உருவமிருப்பதைக் கண்டேன். நாராயணனவர் அவ்வுருவத்தைச் சுட்டிக்காட்டி "இவர் தான் உனக்கு ஏற்றவர். இவர் சீர்டியிலிருக்கும் ஸாயி பாபா. இவரிடம் போய் சேர்" என்று கூறினார். சிறிது நேரங்கழித்து நான் அவ்விடத்தை விட்டு ஆகாயத்தில் அந்தரமாக வேறொரு இடத்திற்குப் போவதாக கனவு கண்டேன். வழியில் ஒரு மனிதனைக் கண்டேன். அவனை அவ்வூரின் பெயரென்னவென்று கேட்டேன். 'சீர்டி' யென்றான் அவ்வூரில் ஸாயி பாபா என்று ஒருவர் இருக்கிறாரா என்றேன். "ஆம்", இருக்கிறார் என்றான். என்னை அழைத்துக் கொண்டு ஒரு மசூதிக்குச் சென்றான். மசூதியில் நான் ஸாயி பாபாவைக் கண்டேன். கால்களை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். பயபக்தியுடன் அவரருகில் சென்று அவர் பாதங்களில் என் சிரசை வைத்து நமஸ்கரித்தேன். அவர் உடனே எழுந்து "நீ என்னுடைய தரிசனத்துக்கா வந்தாய்? நானல்லவோ உன்னை தரிசனம் செய்யவேண்டும்" என்று கூறி என் பாதங்களில் தன் சிரசைவைத்து வணங்கினார். பிறகு நான் அவரை விட்டுப் பிரிந்து விட்டதாகக் கண்டேன்.

இக்கனவில் கண்ட விஷயங்கள் என்மனதில் ஆழ்ந்து பதிந்து விட்டன. இதற்கு முன் ஸாயி பாபா படத்தைப் பார்த்திருக்கிறேனே யொழிய அவரைப் பார்த்ததேயில்லை. அவர் காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பார் என்பது எனக்கு அப்போது தெரியாது.

சில நாட்கள் கழித்து என் கனவில் கண்ட விஷயங்கள் உண்மைதானு என்றறியவும் எனது குருவைக் கண்டு தரிசிக்கவும் சீர்டிக்குப் புறப்பட்டுச் சென்றேன். நான் பாபா இருந்த மசூதிக்குள் போன போது அவரைச் சுற்றி அநேகர் உட்கார்ந்திருந்தனர். அவர் அருகில் சென்று அவர் பாதங்களில் என் சிரசை வைத்து வணங்கினேன். அவர் "என்ன! மனிதனையா நீ வணங்குகிருய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். உடனே நான் துக்கித்து சிறிது தூரத்தில் உட்கார்ந்து கொண்டேன். ஒரு மனிதன் மற்ருெரு மனிதனை வணங்கக் கூடாதென்று நான் பள்ளியில் படித்தது என் ஞாபகத்திற்கு வந்தது. இக்கருத்து என் மூளையில் இருந்ததால் இவ்வாறு கூறினுரோவென்று நினைத்தேன். அப்போதே அவ்வெண்ணம் என் மூளையை விட்டகன்றது. என் கனவில் கண்டபடி என்குருவாகிய அவர் என்னைப்பக்தனுக அங்கீகரிக்காததற்கு என்மனம் மிகவும் கஷ்டப்பட்டது. மனவருத்தத்துடன் சில மணி நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தேன்.

எல்லா ஜனங்களும் போய் விட்டார்கள். ஸாயி பாபா மாத்திரம் தனியே உட்கார்ந்திருந்தார். அப்போது பகல் பன்னிரண்டு மணிக்குமேலாய் விட்டது. அந்த வேளையில் ஒருவரும் பாபா அருகில் போவதில்லை. அருகே போனுல் அவர் கோபித்துக் கொள்வாரென்ற பயம். ஆனுல் என் மனதில் அவ்வித பயம் தோன்றவில்லை. நான் சீர்டிக்கு வந்ததின் முக்கிய நோக்கம் கடவுள் ஆக்ஞைபடி அவரைக் குருவாயடைவதற்காகவே. அதுவே நஷ்டமானதுபோல் இருந்தது. ஆகையால் மற்ற என்ன நஷ்டம் அல்லது கெடுதி வந்தாலென்ன? அவர் என்மீது கோபித்து என்ன செய்தாலும் செய்யட்டும் என்ற தைரியத்துடன் கொஞ்சம்

கொஞ்சமாக நகர்ந்து பாபா அருகில் சென்றேன். சிறிது தூரத்திலிருக்கும் போது பாபா ஜாடைசெய்து என்னை அருகே அழைத்தார். இது எனக்கு தைரியமளித்தது. உடனே அவர் அருகில் சென்று அவர் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தேன். அவர் என்னை தழுவி அருகில் உட்காரும் படி ஆக்ஞாபித்தார். "நீ என்னுடைய குழந்தை. அந்நியர் அருகிலிருக்கும்போது நாம் குழந்தைகளை அருகில் சேர்ப்பதில்லை" என்று கூறினர். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அன்று காலை என் மனதில் ஏற்பட்ட கவலை நீங்கிற்று. அவர் என்னிடத்தில் வைத்த பேரன்பின் பிரவாஹபலத்தை அனுபவித்தறிந்தேன். அந்த பிரவாஹத்தால் என்னுள்ளத்தில் அன்பு கசிந்தது. கண்டேன் குருவை, எனக்கு விதி வாய்த்த பரமகுரு கிடைத்தார், கிடைத்து விட்டார் என மகிழ்ச்சி யடைந்தேன்.

பிறகு பாபா என்னை ஆயி அல்லது இராமகிருஷ்ணி என்ற அம்மையாருடன் இருக்கும்படி கட்டளையிட்டார். அவர் கட்டளைப்படி நான் அந்த அம்மாள் வீட்டில் தங்கியிருந்தேன். அன்றுமுதல் ஆயி இறக்கும்வரையில் நான் அவ்வூருக்குப் போனபோதெல்லாம், ஆயி வீட்டில் தான் தங்குவது வழக்கம். ஆயி என்னும் அம்மையார் அன்பே உருவெடுத்தவர். அவரை என் தாயைப்போல் எண்ணி நேசித்தேன். அவரும் என்னைத் தம் குமாரன்போல் நேசித்து வந்தார். பாபா அந்த அம்மையாருக்குப் பிரசாதமாக ஒரு ரொட்டி தினந்தோறும் அனுப்புவது வழக்கம். நான் வந்த தினம் இரண்டு ரொட்டி அனுப்புவார். நானில்லாத சில நாட்களில் அவர் அந்த அம்மையாருக்கு இரண்டு ரொட்டி அனுப்புவார். அப்போது அந்த அம்மையார் நான் ஊரி

விருந்து புறப்பட்டு அன்று அங்குவந்து சேருவேனெனத் தெரிந்து கொள்வார்.

ஆயிக்கு பாபாவினிடத்தில் உள்ள பக்தி அளவு கடந்தது. அவர் பாபாவுக்காகவே உயிர்வாழ்ந்திருந்தார் என்று கூறலாம். அவர் கட்டளைப்படி அவ்வம்மையார் எல்லாக்காரியங்களையும் செய்துவந்தார். அவருக்கு வேண்டிய பணிவிடைகள் யாவையும் அவ்வம்மை செய்துவந்தார்.

என்குருவாகிய ஸாயி பாபாவின் உபதேசமும் உதவியும் எனக்கு ஆயி மூலமாகவே கிடைத்தது. நான் என் எண்ணங்கள் முழுமையும் ஆயியிடம் தெரிவித்தேன். ஆயியும் தன் கருத்து முழுமையும் என்னிடம் அறிவித்தார். மத சம்பந்தமான விஷயங்களில், நாம் என்னசெய்கிறோ மென்பதைப்பிறர் அறியாமல் செய்யவேண்டு மென்று கூறுவார். இவ்விஷயங்களில் பலனடைய வேண்டுமானால் இரகசியம் அவசியமென்பது அவருடைய கருத்து. இதுவே ஸாயி பாபா பிறருக்குக் கூறிவந்ததோடு தாமும் அனுசரித்த கொள்கை.

ஆயி மிகவும் நன்றாகப் பாடுவார். அவருடைய குரல் மிகவும் இனிமையா யிருக்கும். அவருடைய சங்கீத ஞானமும் அபரிமிதமானது. மேலும் அவர் சித்தார் வாத்யம் வாசிப்பார். ஸங்கீதம் கேட்கும்போது என்மனம் லயித்துவிடும். நாங்கள் ஒருநாள் பேசிக் கொண்டிருக்கும்போது தியானம் செய்வதற்கு எற்றமார்க்கம் எதுவென்று யோசித்தோம். பாட்டுக்களைப் பாடி ஸ்தோத்திரம் செய்வது சிறந்த மார்க்கமென்றாலும், இம்முறை வெளியாருடைய கவனத்தைக் கவரக் கூடியதாயிருப்பதால் அதை நாங்கள் விரும்பவில்லை. மனதுக்குள் ஜபம் செய்வதே சிறந்த முறையென்ற முடிவுக்கு வந்தோம். பிறகு எந்த நாமத்தை, ஜெபிப்ப



பி. வி. நரசிம்மஸ்வாமி

P. R. அவஸ்தீ B.A.L.L.B.

தென்று ஆலோசித்தோம். அநேகர் 'விட்டல், ராம்' என்ற நாமங்களை ஜெபித்தாலும் தமக்குக் கடவுளாயிருக்கும் ஸாயி பாபா திருநாமத்தை தாம் ஜெபிக்கப் போவதாகவும், நான் விட்டல் ராம் என்ற நாமத்தை ஜெபிக்கலாமென்றும் ஆயி கூறினர். நானும் ஆயியைப்போல ஸாயி பாபாவின் நாமத்தையே ஜெபிக்கப் போவதாகக் கூறினேன். பிறகு நாங்கள் இருவரும் எதிரெதிரே உட்கார்ந்து கொண்டு ஸாயி பாபாவின் திருநாமத்தை சுமார் ஒரு மணிநேரம் ஜெபித்தோம். அன்றுமாலை பாபாவைக் கண்டபோது அவர் காலையில் என்ன செய்துகொண்டிருந்தாய் என்று கேட்டார். "ஜெபம் செய்து கொண்டிருந்தேன் என்று பதில் உரைத்தேன். "எந்த நாமத்தை?" என்று கேட்டார். "என்னுடைய கடவுள் பெயரை," என்று கூறினேன். "உன் கடவுள் யார்?" என்று கேட்டார். "தங்களுக்குத் தெரியும்" என்று கூறினேன். இதைக் கேட்டதும் அவர் புன்னகை புரிந்து சரிதான் என்றார். ஜெபம் செய்வதே சிறந்த மார்க்கமென்பதை அவர் ஆயிமூலமாக அவள் அறியாமலே எனக்குப் போதித்தார்.

ஜெபம் சிறந்த சாதனமென்பதாக ஒத்துக் கொண்ட ஸாயி பாபா 'சாத்யம்' அதாவது நமது வாழ்க்கையின் பயன் என்னவென்று கூறினரென நீங்கள் கேட்கலாம். மனிதன் எந்த நோக்கத்துடன் ஜெபம் செய்யவேண்டும்? ஜெபம் செய்வதே சிறந்தமார்க்க மென்பதை மறை முகமாகப் போதித்த என்குரு சாத்யம் இன்ன தென்பதையும் அவ் வண்ணமே போதித்தார். அவர் சொற்களாலும் செய்கைகளாலும் மானிடவாழ்க்கையின் லக்ஷ்யம் யாதென்று வெளியிட்டார். பிரேமையால் ஈசுவரனை அடைவதே அது. சாதனத்திற்கு ஏதாவது ஒரு மூர்த்திவேண்டும். ஆயினும்

குருவையே அம்மூர்த்தியாக பாவனைசெய்து வழிபடுவது மிகவும் சிறந்தது. குரு கடவுளைக் காட்டிலும் வேறல்ல. கடவுள் குருவைக் காட்டிலும் வேறல்ல. இரண்டும் ஒன்றே என்னும் பாவனை உத்தமம். அந்த குருதெய்வத்தின்மீது வைத்த அன்பின் பிரவாகத்தில் மூழ்கியிருப்பதே மார்க்கம். இதை பாபா வெளிபிட்டு எங்கள் பேரில் வைத்த அளவற்ற அன்பால் எங்களைத் தூண்டிவிட்டதில் எங்கள் உள்ளம் அவர் மீது கசிந்துருகியது.

சிலர் எக்கடவுளைக் குறித்து ஜெபம் செய்கிறார்களோ அக்கடவுளின் பிரத்தியட்ச தரிசனத்தைக் காண்பதே ஜெபம் செய்வதின் நோக்கமெனக் கருதுகின்றனர். நான் அவ்வாறு கருதவில்லை. நான் தியானம் செய்யும்போது ஸாயி பாபா வின் ரூபம் என்முன் நிற்பதை பலமுறை கண்டிருக்கிறேன். ஆனால் இதை நான் முக்கியமானதாகக் கருதவில்லை. பாபா எனக்கு வெளியில் இருப்பதை நான் விரும்பவில்லை. அவர் என்னுள்ளத்தில் நானாகவே நிற்கவேண்டுமென்பதே என் கருத்து. இந்த நோக்கத்துடனே நான் ஜெபம் செய்து வந்தேன். நான் என்பது என்னுடைய ஸ்தூல சரீரமும் சூட்சும சரீரமும் சேர்ந்ததாகும். என்னுடைய சூட்சும சரீரமும், விட்டல், நாராயணன், ஸாயி என்ற தேவதைகளும் கடவுளின் வடிவமேயாகும். ஆகையால் நான் விட்டலாகவே ஸாயியாகவே உயரவேண்டுமென்றும், விட்டலும் ஸாயி என்னோடு கலக்கவேண்டுமென்றும் விரும்பினேன். ஆகை யால் நான் தியானம் செய்யும்போது பாபாவின் தரிசனத் தைக் கண்டும் திருப்தி யடையவில்லை. நான் அதுவரையில் பகவத்கீதையைப் படிக்கவில்லை. என் இளமையில் வேதாந்த புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்ற எண்ணமேயில்லை.

ஆகையால் கடவுளைத் தியானம் செய்யும் முறையில் மேல்படி களைக் குறித்து அதிகக் கவனம் செலுத்தவில்லை.

ஒரு குருபௌர்ணமியன்று அநேக பக்தர்கள் ஸாயி பாபாவைக்காண வந்தார்கள். வழக்கம்போல் ஒவ்வொரு வரும் ஒரு புத்தகத்தைக் கொண்டுவந்து பாபா முன் வைத்து, அதைப் படித்து பலனடையுமாறு ஆசீர்வதிக்க வேண்டு மென்று பிரார்த்தித்தனர். பாபா ஒருவர் கொண்டு வந்த புத்தகத்தை மற்றொருவருக்கு மாற்றிக் கொடுத்தார். அப் போது என்னைத் தவிர மற்ற எல்லோரும் ஒவ்வொரு புத்த கம் வைத்திருந்தனர். பாபா என்னைப் பார்த்து அப்புத்தகங் களைச் சுட்டிக் காட்டி, இவர்களெல்லாம் இப்புத்தகங்களில் கடவுளை அதாவது பிரம்மத்தைக்காண விரும்புகின்றனர். ஆனால் இப்புத்தகங்களில் பிரமைதான் (Bhrama) இருக்கின் றது. அதாவது சுழலும் மயக்கமும் ஏமாற்றமுந்தான் இருக் கிறது. உன் மார்க்கமே சிறந்தது. நீ ஒரு புத்தகத்தையும் படிக்க வேண்டாம். என்னை எப்போதும் தியானித்திரு. மனமும் இருதயமும் எப்போதும் ஒத்திருந்தால் அதுவே போதுமானது'' என்றார்.

ஆகையால் நான் வேதாந்த புத்தகங்களைப் படிப்பதே யில்லை. அவர் எனக்குப் போதித்த விஷயங்களைக் கொண்டு திருப்தி யடைந்தேன். நான் பாபாவை அதிகமாக நேசித்து வந்த போதிலும், மற்றவர்களைப்போல் அவருக்கு அதிக நன்மை செய்ய முடியவில்லை.

1912-ம் வருடத்தில் குருபூர்ணிமாதினத் தன்று நான் சீர்டிக்குப் போனேன். அப்போது பக்தர்கள் ஒவ்வொரு வரும் ரோஜா மாலைகொண்டு வந்தனர். எனக்கு அகிலமுமான என் குருவுக்கு ஒரு மாலைகூட இல்லாமல் வந்தேனேயென்று மனம் வருந்தினேன். எல்லோரும் ஸாயி பாபாவுக்கு மாலை

யிட்டு வணங்கி நின்றனர். நான் மாத்திரம் மனக்கஷ்டத்துடன் நின்றேன். அவர் என்னை நோக்கி "இந்த மாலைகளெல்லாம் உன்னுடையதே" என்றார். என்ன அன்பு! என் பிழைகளைப் பொறுத்து என் மீது அவர் காட்டிய கருணை என்னே!

அதே வருடத்தில் இன்னொரு முறை நான் நூறு ரூபா எடுத்துக் கொண்டு சீர்டிக்குப் போனேன். ஸாயி பாபா தட்சணையாக நாற்பது ரூபா கேட்டார். நான் சந்தோஷத்துடன் கொடுத்து விட்டேன். சிறிது நேரங் கழித்து தட்சணையாக நாற்பது ரூபா கேட்டார். அதையும் உடனே கொடுத்து விட்டேன். கடைசிமுறையாக இருபது ரூபா தட்சணை கேட்டார். நான் செலவுக்குப் பணம் இல்லையென்று சிறிதும் கவலைப்படாமல் அதையும் கொடுத்து விட்டேன். பிறகு ஸாயி பாபா என்னைக் கூப்பிட்டு மறுபடியும் தட்சணை கேட்டார். என்னிடம் பணமில்லையேயென்று தெரிவித்தேன். அவர் யாரிடமாவது சென்று பணம் வாங்கி வந்து கொடுக்கும்படி கூறினார். அதற்கு நான் சம்மதித்து: யாரிடம் போய் பணம் வாங்கி வரவேண்டுமென்று கூறினால் அவ்வாறே செய்கிறேன் என்று கூறினேன். அவர் உடனே "சாமாவிடம் சென்று பணம் வாங்கி வா" என்றார். நான் சாமாவிடம் சென்று ஸாயி பாபாவின் உத்திரவைக் கூறினேன். அவர் நான் பாபாவின் கருத்தைச் சரியாக அறியவில்லையென்று கூறினார். "உமது தட்சணைக்கா அவர் காத்திருக்கிறார்? உம்முடைய மனமும் எண்ணமும் ஆத்மாவும் அவரிடம் லயிக்கவேண்டுமென்பதே அவருடைய கருத்தாகும்" என்றார்.

நான் ஸாயி பாபாவிடம் திரும்பிச் சென்று சாமா சொன்னதைச் சொன்னேன். அவர் புன்னகைபுரிந்து "(காகா)

தீக்ஷதரிடம் சென்று கேள்" என்று உத்தரவிட்டார். நான் தீக்ஷதரிடம் சென்று ஸாயி பாபா கட்டளையைக் கூறினேன். அவர் "உம்மை என்னிடம் அனுப்பியதின் அர்த்தம் தெரிகிறதா? பணமில்லாக்குறைக்காக நீர் கவலைப்படக்கூடாதென்றும், பணத்திற்காகப் பிறரிடம் பிச்சை எடுப்பதைக் கேவலமாகக் கருதக்கூடாதென்றும், பிச்சை எடுக்கும் நிலைக்கு மேலான நிலையில் இருக்கிறேமென்று கருதக்கூடாதென்றும் புத்திபோதிக்கவே அவர் உம்மை என்னிடம் அனுப்பியிருக்கிறார்" என்றார். நான் இதையும் பாபாவிடம் கூறினேன். அவர் சிரித்து நானுசாயப் சந்தோர்கரிடம் சென்று கடன் கேட்கும்படி கூறினார். அவர் கட்டளைப்படி நானுசாயபைக் காண கண்டோபா கோயிலுக்குச் சென்றேன். அவர் அப்போது உபாசனீ சாஸ்திரியுடன் புத்தகங்கள் படித்துக் கொண்டிருந்தார். நான் அவரிடம் நடந்த விஷயங்களை எல்லாம் ஒன்று விடாமல் கூறி கடன் கேட்டேன். அவர் "பாபா தட்சணை கேட்கும் போது நம்மிடம் பணமில்லாவிட்டால் இல்லை என்று சொல்வது மிகவும் கஷ்டமாகவேயிருக்கிறது. நான் சீர்டிக்குப்போகும் போதெல்லாம் தட்சணைக்காகக் கொண்டு போகும் பணத்தில் பாதியை கோபர்காம் என்னுமிடத்தில் வைத்து விட்டுப்போவேன். அவர் தட்சணை கேட்கும்போது கையிலிருக்கும் வரையில் கொடுத்துக் கொண்டே போவேன். பணமெல்லாம் ஆய்விட்டதும் மேலும் கேட்பாரானால் கோபர்கானில் வைத்து விட்டு வந்த பணத்தை தருவித்துக் கொடுப்பேன். நீயும் இதைப் போல் செய்யவேண்டும்" என்று கூறினார். நான் பாபாவிடம் சென்று நானு சொன்னதைக் கூறினேன்.

நான் அங்கு உட்கார்ந்திருக்கும் போதே பாபா நானுவைக் கூப்பிட்டனுப்பி நாற்பது ரூபா தட்சணை கேட்டார்.

அவர் அதைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். மறுபடியும் அவரைக் கூப்பிட்டு நாற்பது ரூபாய் தட்சணை கேட்டார். அவர் அதையும் கொடுத்துவிட்டுப் போனார். மறுபடியும் அவரை இருபது ரூபா கேட்க அதையும் கொடுத்துவிட்டுப் போனார். உடனே ஒரு ஆளை அனுப்பி கோபர்கானில் வைத்துவிட்டு வந்த பணத்தைக்கொண்டு வரும்படி அனுப்பினார். ஆனால் ஸாயி பாபா அவரைக் கூப்பிட்டு அப்பொழுதே தட்சணை வேண்டுமென்று கேட்டார். நானா என் செய்வார்! இல்லையென்று சொல்ல முடியாமல் விழித்தார். இதனால் பாபா எனக்கும் நானாவுக்கும் ஒரு புத்திமதி கற்பித்தார். பாபா கேட்பதையெல்லாம் நாம் தான் கொடுக்கிறோம் அல்லது நம்மால் கொடுக்க முடியும் என்ற கொர்வமான எண்ணத்தை அறவே நீக்க வேண்டுமென்பதே ஸாயி பாபாவின் புத்திமதியாகும்.

ஸாயி பாபா தட்சணைகேட்பதைப் பக்தர்கள் எவ்வாறு பலவிதமாக அர்த்தம் செய்கிறார்கள் என்பதையும் இதன் மூலம் எனக்குக் காண்பித்தார். சாமா, தீக்ஷதர், நானா முதலானோர்செய்த அர்த்தம் சரியானதல்ல. எனக்கும் நானாவுக்கும் புத்திமதிகற்பிக்கவே அவர் அவ்வாறு கேட்டார். பாபா பணத்தையும் நன்கொடையையும் லட்சியம் செய்பவரல்ல. அவருக்கு வேண்டியது நமது மனப்பூர்வமான அன்பு ஒன்றே. அதை அளிப்பதே என் முக்கிய கடமையென நான் உணர்ந்தேன். அவர் என் உள்ளத்தை உள்ளபடி அறிந்து அதை ஏற்றுக்கொண்டார்.

1915ம் வருடம் ஸ்ரீராமநவமி தினத்தன்று ஸாயி பாபாவைத் தரிசிக்க சீர்டிபோக விரும்பினேன். போகும் வழியில் கடைத் தெருவுக்குச் சென்று அவருக்கு நன்கொடையாக அளிக்க ஏதாவதொரு வஸ்துவை வாங்க

எண்ணங் கொண்டேன். சுமார் 5 அடி சதுரமுள்ளதும் ஓரத்தில் ஒன்பதங்குலம் சரிகை கரையுள்ள டக்கா மஸ்லின் குட்டை யொன்றை வாங்கினேன். அது மிகவும் மெல்லிய தாயிருந்தது. அதை மடித்துச் சிறுகட்டாகக் கட்டி என் சொக்காய் ஜோபியில் வைத்துக் கொண்டு சீர்டிக்குப் போனேன்.

பக்தர்கள் ஸாயி பாபாவிடம் செல்லும் போது, துணி களைக் கொண்டுபோய் கொடுத்து அவர் ஆசீர்வாதத்துடன் அதைத் திரும்பப் பெறுவது வழக்கம். அவரும் துணிகளை யெல்லாம் கொண்டுவந்தவர்களிடமே திருப்பிக் கொடுத்து விடுவார். பாபாவின் மீது நான் கொண்ட அன்பு உண்மை யானால் அவர் என்னை உண்மையில் நேசிப்பாரானால் நான் கொடுக்கும் துணியை அவர் திருப்பிக் கொடுக்காமல் அவரே அணிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டேன்.

துணிகளைக் கொண்டுவரும் பக்தர்கள் அத்துணிகளை பாபா மீது போடுவார்கள். கடைசியில் அவரது வேலைக்காரர் கள் ஒவ்வொரு துணியாக எடுத்து அது யாருடையதென்று கேட்டு அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். நான் கொண்டுபோன துணி அவ்வாறு திருப்பப்படாமலிருக்க, நான் பாபாவை வணங்கி, நான் கொண்டுசென்ற துணிக் கட்டை இரகசியமாக அவர் உட்கார்ந்திருந்த மெத்தை கீழ் சொருகி விட்டேன். வழக்கம்போல் பாபா மீது போடப் பட்ட துணிகள் திருப்பி கொடுக்கப்பட்டன. அவர் ஆச னத்தின்கீழ் இருந்த மஸ்லினை ஒருவரும் கவனிக்கவில்லை. உடனே பாபா எழுந்திருந்து தன் ஆசனத்தை எடுத்து சுத் தம் செய்யும்படி உத்தரவிட்டார். அப்போது அதனடியி லிருந்த மஸ்லின் குட்டையைக் கண்டு “இது என்ன? அருமையான மஸ்லின்! வெகு நேர்த்தியா யிருக்கிறது,

இதை நான் திருப்பிக் கொடுக்கமாட்டேன். இது என்னுடையது" என்றார். பிறகு அவர் அதைப் பிரித்து தம் மீது போர்த்திக் கொண்டு என்னைநோக்கி இப்போது நான் எவ்வளவு அழகாயிருக்கிறேன் பார்" என்றார். இதைக்கண்டதும் என்மனம் பூரித்தது. நான் முதலில் தீர்மானித்தபடி அவரது அன்புக்குப் பாத்திரமென்பது ரூபிக்கப்பட்டதால், நான் வேறு அவர் வேறு என்றில்லாமல் இருவரும் ஒன்று என்பதைக் கண்டு ஆனந்தங் கொண்டேன்.

அதேவருடத்தில் நடந்த இன்னொரு சம்பவமும் இவ்வுண்மையை ஊர்ஜிதம் செய்தது. ஒருமுறை நான் சீர்டிக்குச் சென்றபோது வழக்கம்போல் ஆயியுடன் தங்கியிருந்தேன். மத்தியானம் பாபா தனியாக இருந்தபோது என்னை அழைத்து வரும்படி ஒருஆளை அனுப்பினார். நான் அவரிடம் சென்றதும், அந்த ஆளை வெளியே அனுப்பிவிட்டு தன்னருகில் என்னை உட்காரும்படி சொன்னார். நான் தருகிறேன். உனக்கு வேண்டியதைக்கேள். மாதம் ஐந்து ரூபாவா அல்லது நூறு ரூபாவா எது வேண்டுமானாலும் கேள். நான் தருகிறேன்" என்று சொன்னார். இது ஒரு சோதனையேயென்று என் மனதில் பட்டது. நான் எதுவும் கேட்க மறுத்துவிட்டேன். "எனக்கு வேண்டியது இன்னதென்று பாபாவுக்குத் தெரியுமே என்னுடைய நன்மைக்கு எதுவேண்டுமென அவரே முடிவுசெய்ய வேண்டும். நான் கேட்பது கூடாது" என்றேன். நான் ஒன்றும் கேட்க மறுக்கவே அவர் என்னுடைய மோவாய் கட்டையை பிடித்துக் கொண்டு எதாகிலும் கேட்கும்படி வேண்டினர். "நான் எது கேட்டாலும் கொடுக்கிறீர்களா?" என்றேன். "அப்படியே" என்றார். உடனே நான், "என் குருவே, இப்பிறவியிலும் எனது மறுபிறப்புகளிலும் தாங்கள் என்னைவிட்டுப் பிரியக்

கூடாது. இதுவே நான் வேண்டுவது" என்றேன். அவர் சந்தோஷமாக என்னைத் தட்டிக் கொடுத்து, "அப்படியே ஆகட்டும். நான் எப்போதும் உன்னோடும் உன்னுள்ளும்இருப்பேன்" என்று சொன்னார். நான் பரமானந்தமடைந்தேன்.

அன்று முதல் அவர் என்னுடன் இருப்பதாகவே நான் உணருகிறேன். சில சமயங்களில் அவர் என்முன் தோன்றி எனக்கு உதவிசெய்து வருகிறார்.

அநேக வருடங்களுக்கு முன் நான் ஒரு பெரிய வீட்டில் பல குடித்தனக்காரர்களுடன் இருக்கையில் என் குழந்தை ஒன்று இறந்து விட்டது. என் மனைவி அதிக துக்கத்தினால் ஓவென்று கதறி அழ ஆரம்பித்தாள். நான் அவளது மனதைத்தேற்றி ஸாயி பாபா எல்லாம் நமது நன்மைக்காகவே செய்து வருகிறார். அவரே நம் குழந்தையை எடுத்துச் சென்றார். ஆகையால் கூச்சலிட்டுக் கூட்டம் சேர்க்காதே. பொழுது விடிகிறவரையில் தூங்கு என்று கூறினேன். அவள் மடியில் குழந்தையின் பிணத்தைப் பார்த்துக் கொண்டு எவ்வாறு தூங்கமுடியும். ஆகையால் நான் குழந்தையை என்மடியில் வைத்து உட்கார்ந்திருந்தேன். அப்போது பாபா என்முன் தோன்றி வெளியே அழைத்துச் சென்று உனக்கு குழந்தை வேண்டுமா? நான் வேண்டுமா? ஏதாவதொன்றைக்கேள். இருவரையும் பெற முடியாது. உன் குழந்தை உயிர் பெற்றெழவேண்டுமானால் என்னை இழந்துவிடவேண்டும். இந்தக் குழந்தை பிழைக்க வேண்டாமென்றால் உனக்கு இன்னும் அநேக குழந்தைகள் உண்டாகும்" என்றார். நான் அவர் தான் வேண்டுமெனக் கூறினேன். அப்படியானால் நீ வருந்தாதே என்றார். மறைந்தார்.

இவ்வாறு, அநேக தடவைகளில் எனக்குக் கஷ்டம் வந்தபோது அவர் என்முன் தோன்றி தைரியங்கூறி வந்திருக்

கிறார். என் தேவைகளெல்லாம் அவர் அருளாலேயே எனக்குக் கிடைக்கின்றன. எனக்குப் பொருளுதவி செய்ய வேண்டுமென்று நான் பிரார்த்தனை செய்வதில்லை. எனக்குச் சொத்தும் வருமானமுமிருப்பதால், அதைப் பற்றி நான் கவலைப்படுவதேயில்லை. உள்ளதைக் கொண்டு திருப்தி யடைகிறேன். ஆயினும் எனக்கெப்போதாவது பணமுடை யேற்படின் எப்படியோ எனக்குப் பணம் கிடைக்கும். ஆகவே பணமில்லையே யென்று நான் கஷ்டப்பட்டதே கிடையாது.

ஸாயி பாபாவை நேரில் காணுதவர்கள், அவருடைய பக்தர்களாகி அவருடைய கிருபையைப் பெற விரும்பினால் அவர்களுக்கு நான் வழி கூறவிரும்புகிறேன். அவர்கள் உட்கார்ந்து முழுமனதுடன் ஸாயி பாபாவைத் தியானிப்பார் களானால் அவர் அருள் கட்டாயம் கிடைக்கும். அவர்கள் அதற்காக சீர்டிக்குப் போக வேண்டுமென்ற அவசியமில்லை. அவர்கள் ஐம்புலன்களை யடக்கி ஸாயி பாபாமேல் பொங்கும் அன்புடன் மனதைச் செலுத்தி தியானிக்கவேண்டும்.

எல்லோருக்கும் ஒரே விதமான 'பக்திசெய்யும் முறையை பாபா கூறுவதில்லை. அவரவர் நிலைக்கேற்றபடி முறையை அவர் கூறுயிருக்கிறார். நீ இராம பக்தனுயிருந்தால் இராம தியானம் செய், அல்லாபக்தனுயிருந்தால் அல்லா தியானம் செய் என்பார்.

அவருக்குப் பக்தர்கள் மகம்மதியர்களென்றும் இந்துக் களென்றும் பக்ஷபாதம் கிடையாது. 1916-ம் வருடத்தில் இரண்டு ரோஹில்லா மகம்மதியர் அவரிடம் வந்து அவருடைய பக்தர்களானர்கள். அவர்களில் பெரியவன் இரவில் பாபா அருகில் இருந்து கோரான் வாசிப்பது வழக்கம். அவன் பாபாவை நபீ என்று நினைத்து வணங்கி வந்தான் ஆனல் அவருடைய கொள்கைகளை அவன் விரும்ப

வில்லை. மத்தியான வேளையில் மசூதியில் சங்கீதத்துடன் தம்மை ஆராதனை செய்ய அவர் அனுமதி தந்ததையும், விக்கிரக ஆராதனை செய்யப்பட்ட உணவை அவர் உட்கொண்டதையும் அவன் விரும்பவில்லை: அவன் தன் கருத்தை பாபாவிடம் அறிவித்தான். பாபா எல்லாக் கடவுளும் அல்லாவே என்று பதிலளித்தார். சில வேளைகளில் அவர் நாமெல்லோரும் அல்லாவின் சிருஷ்டியென்று சொல்வார். சில சமயங்களில் 'நான் கடவுள்' என்று சொல்வார்.

இவைகளெல்லாம் இஸ்லாம் மதவிரோதமான கொள்கைகளென்று அந்த ரோஹில்லா கருதினன். அவரை நபீ என்று நினைத்தாலும் அவரது கொள்கைகளை வெறுத்து அவரைக் கொன்று விடுவதென தீர்மானித்தான். ஒருநாள் ஸாயி பாபா வெளியே உலாவப் போகையில், இந்த ரோஹில்லா கையில் ஒரு பெரிய தொண்ணையுடன் அவர் பின்னலே சென்றுன். அவன் அவர் அருகில் வந்ததும் பாபா திரும்பி அவனது இடது கையைத் தொட்டு உற்றுப் பார்த்தார். அவன் பலமிழந்து அங்கேயே விழுந்து விட்டான், அவனல் எழுந்து நிற்கவுமுடியவில்லை. பாபா அவனை அங்கேயே விட்டுவிட்டுப் போய் விட்டார். அவன் பிறருதவியைக் கொண்டு மெல்ல எழுந்து வந்தான். பிறகு பாபாவிடம் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டான். மறுபடியும் வரவேயில்லை. மற்றொரு ரோஹில்லா மாத்திரம் பாபாவின் பக்தனய் அவருக்கு வேண்டிய தொண்டுபுரிந்து வந்தான்.

ஸாயி பாபாவுக்கும் எனக்குமுள்ள அநுபோகங்கள் பூராவையும் கூறுவது அசாத்தியமாகும். என்மீது அவர்கொண்ட அன்பு அளவுகடந்தது. என் நன்மைக்காக அவர் செய்து வந்த உதவி அளவிட முடியாதது. பலவகையில் உதவிசெய்திருக்கிறார். (1) பக்தர்களாகிய எங்களுக்குக் கஷ்டம் வந்த

போதெல்லாம், நாங்கள் என்னசெய்ய வேண்டுமென்ற எண்ணத்தை அவரே எங்கள் மனதில் தோற்றுவித்து எங்களுக்கு வழிகாட்டியிருக்கிறார். (2) அவர் எங்கள் கனவில் தோன்றி இன்னதுசெய்ய வேண்டுமெனக்கூறி மறைந்திருக்கிறார். (3) சில வேளைகளில் மூன்றாவது மனிதர் ஒருவரிடம் சென்று நமது கஷ்டத்தைப் போக்கிக் கொள்ளும் வழியை அறியும்படி செய்திருக்கிறார். இம் மூன்றாவது மனிதர் நமது கஷ்டம் இன்னதென்றறியாதவராயிருந்தும், கஷ்டத்தைப் போக்கும் மார்க்கத்தைக் கூறிவிடுவார். இவ்வாறு ஸாயி பாபா உயிருடனிருந்த போதும், அவர் மறைந்தபோதும் பல உதவிகளைச் செய்கிறார். அவரை நான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் என்றே கருதி வருகின்றேன். அவர் ஒரு முறை வேறு ரூபத்தில் வந்து எனக்கு உதவி செய்திருப்பதை உங்களுக்குக் கூறவிரும்புகிறேன்.

சுமார் எட்டு வருடங்களுக்கு முன்னர் தக்ஷிணேஸ்வரத்திலுள்ள ஸ்தலங்களைத் தரிசிப்பதற்காகச் சென்றேன். அங்கே சென்றதும், உள்ளூர்வாசியான ஒருவனை, அங்குள்ள விசேஷங்களைக் காட்ட அமர்த்திக் கொண்டேன். அவன் பரமஹம்சர் வணங்கிய காளி முதலான விக்கிரகங்களைக் காட்டிக் கொண்டேபோனான். பரமஹம்சருடன் சிறுபிள்ளை போல் விளையாடி வந்த ராம்லால் விக்கிரகத்தைக் காட்டும்படி நான் அவனைக் கேட்டேன். அவன் என்னை ஒரு கோயிலுக்கழைத்துச் சென்று அங்குள்ள ஒரு பெரிய விக்கிரகத்தைக் காட்டி 'ராம்லால் இதுதான்' என்றான். நான் அது அல்ல என்றேன். உள்ளூர்வாசியான என்னைவிட வெளியூர் வாசியான உங்களுக்கு அதிகம் தெரியுமோ வென்றான். பரமஹம்சருடைய சரிதத்தில் ராம்லாலைப்பற்றி நான் படித்த விஷயம் தவறு என்று எண்ணினேன். அப்போது அக்

கோயில் பூசாரி ஒருவன் என்னிடம் வந்து "நீங்கள் தக்கா ணத்திலிருந்தா வந்திருக்கிறீர்கள் ?" என்று கேட்டான். 'ஆம்' என்றேன். அங்குள்ள காளி முதலான விக்கிரகங்களைக் காண்பிப்பதாகக்கூறி தன்னுடன் வரும்படி அழைத்தான். நான் அவைகளை யெல்லாம் பார்த்தாய் விட்டது என்று கூறினேன். அவன் என்னை மறுபடியும் பார்க்கும்படி வற்புறுத்தித் தனக்கு ஒன்றும் பணம் கொடுக்கவேண்டா மென்று கூறினன்.

இவன் என்னை வற்புறுத்தியதற்குக் காரணம் என்ன வென்றால் இவனது கனவில் ஒருவர் தோன்றி தக்காணத்தி லிருந்து ஒருபக்தர் அங்கு வருவதாகவும் அவருக்கு எல்லா விக்கிரகங்களையும் காண்பிக்க வேண்டுமென்று கூறியதே யாகும். என்னை கர்ப்பக்கிரஹத்திற்குள் அழைத்துக் கொண்டுபோய் காளியைத் தொட்டு தரிசிக்கலாமெனக் கூறி னன். பிறகு அவன் ராம்லால் விக்கிரகத்தைக் காண்பிப்ப தாகக் கூறினன். நான் முதலில் பார்த்த ராம்லால் விக்கிரகத் தைப்பற்றி கூறினேன். அவன் என்னுடன் வந்தவன் என்னை ஏமாற்றி விட்டானென்றுகூறி, அங்கிருந்து ஒரு சிறு விக்கிரகத்தை எடுத்து என்மடிமீது வைத்தான். இவ்வாறு என் எண்ணம் பூர்த்தியாவதற்கு அருள்புரிந்தவர் ஸாயி பாபாவே. அவரே இராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

1927ம் வருடத்தில் பூனவிலுள்ள மாதவனுத் மஹா ராஜாவை நான் பார்த்தேன். என்னைப்பற்றி ஒன்றும் சொல்லாமுன்னரே மஹாராஜ் எனக்கும் பாபாவுக்குமுள்ள அன்பைவிளக்கி, நான் பாபாவை முதல் சந்தித்தபோது எங்களுக்குள் என்ன நடந்ததென்பதைக் கூறினர். அப் போது அங்கிருந்ததாகச் சொன்னர். பாபாவாகவே யிருந் தாரோ அல்லது சூக்ஷ்ம தேகமாயிருந்தாரோ!

1936ஹு மேமீ 10, 20, 25, 28-ஆம் தேதியில்

பூனுவில் வசிக்கும் சுமார் 53 வயதுள்ள பிராமண குலத்தில் சேர்ந்தவரும், இன்ஜினீயரிங் காலேஜில் இரஸாயன பூமிசாஸ்திர தலைமை ஆசிரியருமான G. G. நார்கே எம். ஏ. (கல்கத்தா) எம். எஸ். ஸி (மான்சேஸ்டர்) பின் வருமாறு கூறுகிறார்;—

ஒருவன் பெரியமஹான்களுடன் பழகுவதால் ஏற்படும் அனுபவங்களையும் அடையும் பலன்களையும் வெளியிடுவது கூடாது. கபீர் கூறியபடி 'ஒருவன் அடையும் பலனை அவன் இரகசியமாக வைத்திருக்கவேண்டும்'. இதுவே என் குருவாகிய ஸாயி பாபா எனக்கிட்ட கட்டளையாகும். என்னுடைய அநுபவங்களை நான்கூற ஆரம்பிக்கும்போது என்னையறியாமலே என்வாய் மூடிக்கொள்ளுகிறது. ஆனல் நான் அனுபவித்த சம்பவங்களையும் நிகழ்ச்சிகளையும் மேற்போக்காகக் கூறுகிறேன். இவை எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதில் இரகசியம் ஒன்றுமில்லையென நினைக்கின்றேன். அவைகளைக் கூறுவதால் பிறருக்கு அதிக நன்மை பயக்குமென்று நான் நினைக்கவில்லை. ஆயினும் என்னுடைய அனுபவங்களைச் சிறிது சொல்லவேண்டுமென்று நீங்கள் கேட்டுக் கொண்டதினுல் சில விஷயங்களைக் கூறுகிறேன்.

இதோ நான் ஸாயி பாபாவை என்வீட்டில் வணங்கும் கடவுள்களில் ஒருவருகப் பூஜித்து வருகிறேன். எனக்கு ஸாயி பாபா ஒரு மஹான் மட்டுமல்ல. அவர் என் கடவுள், அவருடைய தெய்வீகப் பார்வை அவர் சத் ஆகிய புருஷன் என்பதைக் காட்டுகிறது. அவருடைய சக்தியும் செய்கையும் மிகவும் ஆச்சரியமானவை.

ப்ரோபசர் G. G. நார்கே M.A. M.Sc.

நாற்காலியில் உட்கார்ந்திருப்பது இடது பக்கமிருந்து
1. டாக்டர் C. பிள்ளை, 2. சாமா தம்பி, 3. சாமா, 4. தாத்யா படேல்கோதே, 5. ஸதுபையா.
கீழே உட்கார்ந்திருப்பது:—1. லக்ஷ்மன்ஜோசி, 2. சோப்தார்.

ஸாயி பாபா விடத்தில் எனக்கு எவ்வாறு பக்தி உண்டாயிற்றென்பதைக் கூறுகிறேன். என் மாமனும், என் மனைவியும், என் தாயாரும் ஸாயி பாபாவின் பக்தர்கள், அவரைத் தெய்வமாக வணங்கிவந்தார்கள். நான் இளமையில் சத்புருஷர்கள் குணாதிசயங்களைக் கூறும் ஞானனேஸ்வரி முதலான நூல்களை வாசிப்பது வழக்கம். 1905-ம் வருடத்தில் நான் கல்கத்தாவில் M. A. பட்டம் பெற்றேன். பிறகு 1909 ம் வருடத்தில் கவர்ன்மெண்டு உதவியினால் உயர்தரப் படிப்பிற்கு இங்கிலாந்து சென்றேன். மான்செஸ்டரில் படித்து, தாது சாஸ்திரம் சுரங்க சாஸ்திரம் முதலானவைகளில் M. Sc. என்ற பட்டம் பெற்றேன். 1912-ம் வருடத்தில் இந்தியாவுக்குத் திரும்பிவந்தேன்.

என் மனைவியும், தாயாரும், மாமனும் அடிக்கடி சீர்டிக்குப் போய் ஸாயி பாபாவைத் தரிசிப்பார்கள். ஒருமுறை அவர்கள் என்னை அங்கு வந்து அவரைத் தரிசித்துவிட்டுப் போகும்படி கடிதம் எழுதினார்கள். ஸாயி பாபா நான் வர வேண்டுமென்று எண்ணினால் உடனே வருவதாகப் பதில் எழுதினேன்—என் மாமனார் ஸாயி பாபாவை விசாரித்து அவர் நான் வரவேண்டுமென்று விரும்பியதாக எழுதியிருந்தார். நான் 1913 ம் வருடம் ஏப்ரல்மீ சீர்டிக்குப் போனேன். பாபா என் பந்துக்களிடம் மிகவும் அன்பாயிருந்தார். என் தாயாரைக் கண்டபோது அவர் எழுந்து குதிக்க ஆரம்பித்து விடுவார். இதனால் அவர் என் தாயார் மீது எவ்வளவு அன்பாயிருந்தா ரென்று தெரிகிறதல்லவா?

மாதவராவ் தேசபாண்டே என்பவர் என்னை முதலில் ஸாயி பாபா விடம் அழைத்துச் சென்றார். அவர் நான் யாரென்று பாபாவிடம் கூறினார். ஸாயி பாபா "அவனை எனக்கு முப்பது தலைமுறையாகத் தெரியும்" என்று கூறி

ணர். அவரை நான் முதலில் பார்த்தபோது அவரது கண் பார்வை என்னைக் கவர்ந்து விட்டது. அது என்னுடலுள் ஊடுருவிச் சென்றது. சாவடியில் உட்கார்ந்திருந்த அவரது உருவம் அப்படியே என்மனதில் பதிந்து விட்டது. அவரிடம் பழகி வருவதால் ஏற்படும் அந்தரங்க அனுபவங்கள் நாளடைவில் விருத்தியடைந்தன.

நான் முதலில் அவரை வணங்கி தொண்டு புரிந்து ஆர்த்திசெய்து வந்தேன். ஒரு நாள் ஆர்த்திசெய்கையில், ஸாயி பாபா அதிககோபத்துடன் திட்டி சீரிக்கொண்டிருந்தார். ஒரு காரணமுமின்றி அவர் கோபிப்பதைக் கண்டு அவர் பைத்தியம் என்றெண்ணினேன். உடனே அந்த எண்ணம் தீர்ந்தது. அன்று ஆர்த்தி முடிந்ததும் மாலையில் அவர் அருகில் உட்கார்ந்து கால்களைப் பிடித்துக் கொண்டிருந்தேன். அவர் எனது தலையில் தொட்டு "நான் பைத்தியம் அல்ல" என்ருர். அவர் என்னுள்ளத்தை அறிந்ததைக்கண்டு பிரமித்து விட்டேன். அவரிடமிருந்து ஒன்றும் மறைக்க முடியாதென அறிந்தேன். அவரே என் ஆத்துமாவின் ஆத்துமா (Antaryami) வென்று உணர்ந்தேன். அன்று முதல் அவரது அந்தர்யாமித்வ நிகழ்ச்சிகள் பல நடந்தன. அவர் பேசும் போது என்னுள்ளத்தை அறிந்து நான் எண்ணிய எண்ணங்களையும், எனது விருப்பங்களையும் வெளியிட்டார். இதனுல் அவர் கடவுளே என்ற முடிவுக்கு வந்தேன். நான் அநேக முறை அவரைப் பரீட்சித்துப் பார்த்தேன். ஒவ்வொரு தடவையும் அவர் எல்லா மறிந்தவரென்றும், அவரிஷ்டப்படி எக்காரியத்தையும் சாதிக்க வல்லவரென்றும் அறிந்தேன். அவர் முக்காலத்தையும் அறியக்கூடியவரென்று நிரூபிக்க நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளைக் கூறலாம். நான் அவைகளில் சிலவற்றைக் கூறுகிறேன்.

என் மாமனுர் சீர்டியில் ஒரு கோயில் கட்டுவாரென்றும் அக்கோயில் என் நிர்வாகத்தில் இருக்குமென்றும் 1913-ம் வருடத்தில் ஸாயி பாபா கூறினுர். 1915-16-ம் வருடத்தில் என் மாமனுர் ஒரு கோயில்கட்டி அதற்குள் 1918-ல் ஸாயி பாபாவின் சமாதி யமைத்தார். பிறகு 1918-19 ம் வருடத்தில் நான் அதன் நிர்வாகஸ்தர்களில் ஒருவனுக நியமிக்கப் பட்டேன்.

என்தாயார் என் உத்தியோகத்தைப் பற்றி கவலை கொண்டிருந்தாள். நான் உத்தியோகத்தில் ஓரிடத்தில் நிலையா யில்லாமல் அடிக்கடி மாறிக்கொண்டும், பலமாதங்கள் உத்தியோக மில்லாமலு மிருந்தேன். நான் தாது சாஸ்திரம் கற்று சுரங்க வேலை இன்ஜினீயராகப் பயிற்சி பெற்றிருந்ததால் பத்திரிகைகளில் அவ்வேலைக்காக விளம்பரம் வந்தபோதெல்லாம் விண்ணப்பித்துக் கொண்டேன். எனக்கு வேலை கிடைத்தபோதிலும், அவ்வேலை பூர்த்தியானவுடன், மறு வேலை ஆரம்பிக்கும் வரையில் வேலையில்லாமலிருக்க நேர்ந்தது. முதலில் நான் நான்கு நாட்கள் சீர்டியில் தங்கியிருந்து உத்தியோகமாக பாலகாட்டுக்கும் பர்மாவுக்கும் சென்றேன். மூன்று மாதங்கழித்து பர்மா ஆயில் கம்பெனியில் உத்தியோகம் முடிவடைந்தது. பிறகு நான் சீர்டிக்கு வந்து என் மனைவியுடன் சுமார் நான்குமாதங்கள் தங்கியிருந்து நாகப்பூருக்குச் சென்றேன். உடனே என்னைப் பாபா வரும்படி கூறியதாக மாதவராவ் கடிதம் எழுதி இருந்தார். நான் அங்கு தனியே போய் அவருடன் பதின்மூன்று மாதம் தங்கியிருந்தேன். அப்போது எனக்கு உத்தியோகமும் கிடைக்கவில்லை. நான் அதைப்பற்றிக் கவலைப்படவுமில்லை. சில வேளைகளில் சந்நியாசியின் வாழ்க்கை எனக்கேற்றதென்று நினைத்தேன்.

1914-ம் வருடத்தில் ஒருநாள், ஸாயி பாபா பகீர்கள் போடும் உடைகளை எடுத்து அநேக பகீர்களுக்கு ஒவ்வொன்று அளித்தார். இதைத் தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்த நான் எனக்கும் ஒரு உடை கொடுப்பாரென எண்ணினேன். இவ்வாறு உடைகள் வழங்கி முடிந்த பிறகு அவர் என்னை அருகில் கூப்பிட்டு "உனக்குக் கொடுக்க வில்லையே என்று வருந்தாதே. உனக்கு அவ்வுடைகொடுக்க "அந்த பக்கிரி" (அதாவது கடவுள்) அனுமதியில்லை" என்று கூறினர்.

எனக்கு நிலையான உத்தியோகங் கிடைக்காததால் என் பந்துக்கள் என் உத்தியோக விஷயமாக ஸாயி பாபாவை அடிக்கடி கேட்பதுண்டு. நான் உத்தியோகம் செய்ய கல்கத்தா, பர்மா முதலான இடங்களுக்குப் போனபோது என் தாயார், சீர்டிக்கருகாமையில் எனக்கு நல்ல உத்தியோகம் கிடைக்க வேண்டுமென்று ஸாயி பாபாவிடம் பிரார்த்தனை செய்து வந்தார். "அவனுக்குப் பூனுவில் நிலையான வேலை கிடைக்கும்படி செய்கிறேன்" என்று பாபா அவர்களிடம் கூறினர். எனக்குச் சில வேளைகளில் பல இடங்களிலிருந்து வேலைக்கு வரும்படி உத்தரவு வரும். நான் எதை விடுவது எதை ஏற்றுக்கொள்வது என்று பாபாவைக் கேட்பதுண்டு. அவரிடத்தில் எனக்கு அதிக நம்பிக்கை. அவரது தீர்மானம் மிகவும் ஆச்சரியமாகவே யிருக்கும். ஒரு தடவை எனக்கு பர்மாவிலிருந்தும், கல்கத்தாவிலிருந்தும் உத்தரவு கிடைத்தது. நான் பாபாவைக் கேட்டபோது அவர் அதிக தூரத்திலுள்ள பர்மாவுக்குப் போகும்படி கூறினர். அவர் பர்மாவுக்கும், பூனுவுக்கும்போ அல்லது இந்த இடத்திற்கும் பூனுவுக்கும்போ என்று எப்போதும் பூனுவை அவ்வவ்விடங்களோடு சேர்த்தே கூறுவார்.

1916-ம் வருடத்தில் எனக்கு காசி சர்வ கலாசாலையி லிருந்தும், பர்மாவிலிருந்தும் உத்தரவு கிடைத்தது. நான் பாபாவைக் கேட்டபோது அவர் "பர்மாவுக்கும் பூனுவுக்கும் போ" என்றார். பூனுவைச் சேர்த்து கூறியது எனக்கு வேடிக்கையாகவே இருந்தது. ஏனெனில் நான் தேர்ச்சி பெற்றிருக்கும் சுரங்கத்தொழில் சம்பந்தமான உத்தியோகம் கிடைப்பதற்குப் பூனுவில் வசதியேயில்லை. ஆனால் அவர் கூறியபடி 1918ம் வருடத்தில் பூனு கலாசாலையில் தாது சாஸ்திர ஆசிரியராக நியமிக்கப்பட்டேன். இவ்வுத்தியோகம் இப்பொழுது மிருக்கிறது. என் எதிர்கால உத்தியோக விஷயம் அவர் 1913-ம் வருடத்திலேயே அறிந்திருந்தார்.

அநேக வருடங்கள் வெளியிலே சுற்றிவிட்டு 1916ம் வருடம் சீர்டிக்குப்போனேன். அங்கேபோனதும் அதிக ஆவலுடன் பாபாவுக்குயாரார் என்ன பணிவிடை செய்கிறார் களென்று கேட்டேன். வாமன்ராவ் படேல் பி. ஏ., எல். எல். பி. என்பவர் பாபாவுக்கு மத்தியானத்தில் உணவு பிட்சை எடுத்து வருகிறார் என்று கேள்விப்பட்டதும் எனக் குப் பொறாமை உண்டாயிற்று. எனக்கு ஏன் அவ்வேலை கொடுக்கக் கூடாதென்று மனதில் நினைத்தேன். அப்போது தரிசன காலமானதால் என்னுடைய உடைகளைக்களைய முடிய வில்லை. நான் பூட்ஸ், ஜெஜார், சொக்காய், தொப்பி முதலான உடைகளுடன் மசூதிக்குச் சென்றேன்: வாமன்ராவை பிட் சைக்கு அனுப்புவதா என்று பக்தர்கள் பாபாவை மூன்று முறை கேட்டார்கள். அவர் என்னை சுட்டிக் காட்டி என் னிடம் பிக்ஷாபாத்திரத்தைக் கொடுக்கச் சொன்னார். நான் அந்த உடைகளை அணிந்து கொண்டே பிக்ஷை எடுத்துவந்து அவருக்குக் கொடுத்தேன். நான் பிறகு 4 மாதம் என் சாதாரண உடையில் ஸாயி பாபாவுக்காக பிக்ஷை எடுத்து

வந்தேன். இந்தத் தொழிலை எனக்குக் கொடுத்ததைக் கண்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவருக்கு அத்தொண்டு செய்ய வேண்டும் என்று நான் விரும்பியதை அறிந்தே பாபா அவ்வேலையை எனக்களித்தார். சாதாரணமாய் பாபா இத்தொண்டாற்ற சிலரை மாத்திரம் அழைப்பார்.

1917-ம் வருடத்தில் பூனுவிலுள்ள இன்ஜினீயரிங் காலேஜில் தாது சாஸ்திர ஆசிரியர் வேலை காலியாயிருக்கிறதெனத் தெறிந்தது. நான் ஸாயி பாபாவிடம் சென்று அவ்வேலைக்கு மனுபோடலாமாவென்று கேட்டேன். அவர் போடும்படி கட்டளையிட்டார். பிறகு நான் பூனுவுக்குச் சென்று உத்தியோக சம்பந்தமாகப் பலரைக் கண்டேன். அவ்வேலைக்கு அநேக விண்ணப்பங்கள் வந்திருந்தன. பலர் அதிக சிபார்சு உடையவர்களென்று கேள்விப்பட்டேன், நான் பூனுவுக்கு வந்த பிறகு ஸாயி பாபா என்னைப் பற்றி சீர்டியிலிருந்தவர்களை விசாரித்தார். நான் பூனுவுக்கு உத்தியோகத்திற்கு முயற்சி செய்வதற்காகப் போயிருப்பதாகக் கூறினார்கள். "அல்லா அவரை ஆசீர்வதிப்பார்!" என்று ஸாயி பாபா கூறினர். பிறகு என் குழந்தைகளைப் பற்றி விசாரித்தார். எனக்குக் குழந்தைகள் பிறந்து சிறுவயதிலேயே இறந்துவிட்டனவென்று அவர்கள் கூறினார்கள். "அல்லா அருள்புரிவார்!" என்று பாபா ஆசீர்வதித்தார். 1918-ம் வருடம் எனக்கு அதே உத்தியோகம் கிடைத்தது. அதன் பிறகு பிறந்த குழந்தைகளெல்லாம் உயிரோடிருக்கின்றன. எனக்கு இப்போது நான்கு குமாரர்கள் இருக்கிறார்கள். எல்லாம் பாபாவின் ஆசீர்வாதமே.

இது வரையில் நான் கூறிவந்த மேற்போக்கான விஷயங்களை பாபாவைக்கண்ட எல்லோரும் கூறலாம். இவ்விஷயங்களை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு அவரது மஹிமையை

அளவிடுவது சரியன்று. ஏதோ ஒரு பலனைக்கருதி அவரிடம் வந்தவர்களுக்கு ஆந்திரீகமான விஷயங்களை அவர் அறிவிப்ப தில்லை. விஷயங்களை ஆழ்ந்து கவனிக்கும் திறமையுடையவர் களுக்கே அவர் உள்ளாந்திரீகமான விஷயங்களும் அரிய சக்தியும் புலனாகும். நான் எப்போதும் ஒவ்வொரு விஷயத் தையும் ஊர்ந்து கவனிப்பது வழக்கம். அவர் எனது செய் கையைப் புகழ்ந்து "நீ கெட்டிக்காரன்" என்று பலமுறை கூறியிருக்கிறார். சில சமயங்களில் அவர் கூறும் விஷயங் களின் உட்கருத்தை நான் அறியாதபோது "நீ மிகவும் மந்தன்" என்று கூறுவார். அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் சிறந்த பொருளுள்ளதாகும். அவைகளின் கருத்தை நான் அநேகமாய் தெரிந்து கொள்வேன்.

ஸாயி பாபாவின் செய்கையையும் வார்த்தைகளையும் ஆழ்ந்து கவனித்தவர்களுக்கு அவர் திரிலோக சஞ்சாரியென் பது நன்கு விளங்கும். அவரை நன்கறியாதவர்களுக்கு அவர் கூறும் வார்த்தைகள் அர்த்தமின்றி யிருக்கும். அவர் கூறும் வார்த்தைகளுக்கு அவரவர் இஷ்டப்படி பலவித அர்த்தம் செய்து கொள்வர். சிலர் அவர் சாதாரண மனிதர் தானென்றும், பணஆசை அதிகம் உள்ளவரென்றும் கருதி னர். ஒருவர் பாபாவிடம் வந்து சிறிதுநேரம் அவரைக் கவனித்திருந்தார். நான் அவரிடம் சென்று "பாபாவைப் பற்றி உம்முடைய அபிப்ராயமென்ன?" என்று கேட் டேன். "இவர் நாள் முழுதும் பணம் பணமென்று பேசிக் கொண்டிருக்கிறாரே! இவரைப் போல் பணஆசை பிடித்த மஹானை நான் பார்த்ததேயில்லை" என்று பதிலளித்தார், பைஸா* என்ற வார்த்தையை எந்த அர்த்தத்துடன் உபயோகிக் கிறார் என்பது இவருக்குத் தெரியாது. ஸாயி பாபா பைஸா *

* பைஸா அல்லது பைகா

என்ற வார்த்தையைப் புண்ணியம் என்ற பொருள்படும்படி பேசுவார், இதன் தார்பரியமும் இதைப் போன்ற இன்னும் அநேக வார்த்தைகளின் தார்பரியமும் இவரை ஆழ்ந்து கவனித்தவர்களுக்கே நன்கு விளங்கும்.

1936ஆு ஜூன்மீ 4–ந்தேதி வாக்குமூலம்

1914ம் வருடத்தில் ஹர்தாவிலிருந்து ஒரு வயது சென்ற தனவந்தர் ஒரு ஸ்திரீயுடன் சீர்டிக்கு வந்தார். அவர் க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்டிருந்தார். அவர் சீர்டியில் ஒரு மாதம் தங்கியிருந்தார். வியாதியும் சிறிது குணப்பட்டதாக தெரிந்தது. ஆகவே அவர் அங்கேயே தங்கிவிடுவதெனத் தீர்மானித்தார். இரண்டாவது மாதக் கடைசியில் திடீரென அவரது வியாதி முதிர்ந்து இறந்து விடுவார்போல் தோன்றியது. ஒரு நாள் அவருடனிருந்த ஸ்திரீ என்னிடம் வந்து அவர் நிலைமை மிகவும் மோசமா யிருப்பதாகவும், பாபாவிடம் சென்று விபூதி (Udhi) பெற்று வரும்படியும் கேட்டுக் கொண்டாள். நான் பாபாவிடம் சென்று கேட்டேன். பாபா 'அம்மனிதன் இறந்து விடுவதே மேல். அவருக்கு விபூதியினால் பலனென்ன? ஆயினும் அவர்கள் கேட்பதால் விபூதியைக் கொண்டு போய்கொடு'. என்றார். நான் விபூதியை எடுத்து அந்த ஸ்திரீயிடம் கொடுத்தேன். ஆனால் பாபா கூறியவார்த்தைகளை ஒருவரிடமும் கூறவில்லை.

அம்மனிதனுடைய தேகநிலை மோசமாய்க் கொண்டே வந்தது. மாதவராவ் தேசபாண்டே பாபாவிடம் வந்து அவர் இறக்கும் தருவாயி லிருக்கிறாரென்றும் கூறினார்.

இதைக்கேட்ட பாபா "அவர் எவ்வாறு இறக்கக் கூடும்.? அதிகாலையில் அவர் உயிர்பெற்றெழுவார்." என்று கூறினர். அத்தனவானுடைய உறவினர் பாபா கூறியபடி உயிர் பெற்றெழுவார் என்று நினைத்து பகல் பன்னிரண்டுமணி வரையில் பார்த்தார்கள். அவர் உயிர் பெற்றெழாததால் அவரைத் தகனம் செய்துவிட்டனர். பாபா தங்களுக்கு வீண்நம்பிக்கை கொடுத்ததாக எண்ணி சீர்டி விட்டு தங்கள் ஊருக்குப் போய்விட்டனர். மூன்று வருடம்வரையில் திரும்பி வரவேயில்லை, ஒருநாள் இறந்துவிட்ட அக் கனவானின் உறவினர் ஒருவருடைய கனவில் பாபா தோன்றினர். இறந்துவிட்டவருடைய உருவமும் அவர் பக்கத்தில் தோன்றியது. பாபா அவரது நோய்ப்பட்ட சுவாசகோசங்களைக் காட்டி, இக் கொடிய பாதையினின்றும் நான் அவரைக் காப்பாற்றினேன்" என்று கூறினர். அதன்பிறகு அவரும் மற்றவர்களும் சீர்டிக்கு அடிக்கடி வந்து போனர்கள். "அவர் எப்படி இறக்க முடியும். மறுபடியும் உயிர் பெற்றெழுவார்," என்று பாபா கூறியது அவரது சூக்ஷ்ம சரீரத்தைப் பொறுத்ததென்று இப்போது நன்கு விளங்குகிறதல்லவா ?

சில சமயங்களில் ஸாயி பாபா தனது சூக்ஷ்ம சரீரத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வந்ததைப்பற்றி கூறுவார். அதிகாலையில் அவர் பக்தர்களுடன் உட்கார்ந்திருக்கும்போது, அன்றிரவு தான் எங்கெங்கு சென்றானென்பதையும், அங்கு என்ன செய்தானென்பதையும் சொல்லுவார். இரவில் அவருடன் மசூதியில் படுத்திருந்தவர்கள் அவரது ஸ்தூலசரீரம் தங்கள் அருகிலேயே இருந்ததை நன்கறிவார்கள். அவர் கூறிய விஷயங்கள் சிலவற்றைப் பரீட்சித்துப் பார்த்தபோது உண்மையேயென்று தெரிந்தன. அவர் சூக்ஷ்மசரீரத்துடன் அதிக தூரம் சென்று பலருக்கு உதவிபுரிந்து வந்தார்.

ஒருநாள் சீர்டியில் மார்வாடியின் குமாரன் ஒருவன் இறந்து விட்டான். அவனது தகனத்திற்குப் போயிருந்த பலர் அதிக விசனத்துடன் மசூதிக்குத் திரும்பிவந்தனர். ஸாயி பாபா அவர்களைப் பார்த்து அப்பையன் இந்நேரம் அவ்வாற்றை யடைந்திருக்க வேண்டும். இப்போது ஆற்றைக் கடந்து கொண்டிருக்கிறான், என்றார். அவர் கூறிய ஆறு வைதரிணி என நினைத்தேன்.

ஸாயி பாபா அநேகருக்கு அவர்களுடைய முற்பிறப்பைப் பற்றி கூறுவார். என்னுடைய நான்கு முற்பிறப்புகளைப்பற்றி இருமுறை கூறினார். இதைப்பலர் முன்னிலையில் என்னிடம் சொன்னபோது, அவர் கூறுவது என் முற்பிறப்பைப் பற்றியதென்று ஒருவருக்கும் தெரியாது. எனக்கு மாத்திரம் தெரியும். இத்தகைய விஷயங்களை ஒரு கூட்டத்தில் பேசும்போது; அதுயாரைப் பற்றியதோ அவர் மாத்திரம் அறியும்படியும் மற்றவர் அறியாதபடியும் வெகு சாமர்த்தியமாகப் பேசுவார். அதனால் ஒரே காலத்தில் அவரது வார்த்தைகளாலும், செய்கையாலும் பலர் நன்மை யடைந்தனர்.

சூக்ஷ்ம சரீரத்துடன் இவ்வுலகின் பல பாகங்களுக்குச் சென்று ஆங்காங்கு நடப்பதை அறிவதும், ஒருவருடைய இறந்தகால எதிர்கால நிகழ்ச்சிகளை அறிந்து கூறுவதும் அவரது அரிய சக்திகளாகும். அவர் அடிக்கடி கூறும் வார்த்தைகளே இதை வெளிப்படுத்தின. அவர் அடிக்கடி "நீ எங்கே இருக்கிறாய்? நான் எங்கே இருக்கிறேன்? இவ்வுலகம் எங்கே இருக்கிறது" எனக் கேட்பார். பிறகு தன்னுடைய ஸ்தூல சரீரத்தைத் தொட்டு "இது என் வீடு, நான் இப்போது என் வீட்டிலில்லை. என் குரு மௌர்ஷத் என்னை வெளியே அழைத்துக்கொண்டு போய்விட்டார்" என்று

கூறுவார். பாபா இப்போதும் உயிருட னிருக்கிறார் என்று கூறலாம். முன்பு இங்கு ஸ்தூல சரீரத்துட னிருந்தபோது சூக்ஷ்ம சரீரத்துடன் வெளியெல்லாம் போய்விடுவார். அவரது ஸ்தூல சரீரம் மறைந்தும் அவர் சூக்ஷ்ம சரீரம் இன்னும் இங்கு தான் இருக்கிறது.

சில வேளைகளில் பாபா இவ்வுலகிலும் மறு உலகிலும் தன்னுடைய வேலையின்ன தென்பதைக் கூறுவார். மறு உலகத்தில் ஆத்மாக்களின் விதிப்படி நடத்துவதைப் பற்றிச் சொல்லுவார். பாபா உண்மையில்லாத விஷயங்களையும் அர்த்தமில்லாத விஷயங்களையும் பேசுவதேயில்லை: ஆனால் அவரை அறிந்தவர்களுக்கே அவர் கூறுவது நன்கு விளங்கும்.

உபதேசம், மந்திரம், தந்திரம் முதலியன

ஸாயி பாபா எனக்கு எப்போதும் உபதேசமோ, மந்திரமோ, தந்திரமோ சொன்னதில்லை. எனக்குத் தெரிந்த வரையில் மற்றவர்களுக்கும் அவர் சொல்லவில்லை. மாதவராவ் தேசபாண்டே அடியிற்கண்ட சம்பவத்தை என்னிடம் கூறினார்.

இராதாபாய் தேஷ்முக் ஒரு முறை சீர்டிக்கு வந்து உபதேசம் பெறவேண்டுமென்று ஸாயி பாபாவிடம் காத்திருந்தாள். அவர் பல நாள் வரையில் உபதேசம் செய்யாமலிருக்கவே அவள் சத்தியாக்ரகம் செய்ய ஆரம்பித்தாள். ஸாயி பாபா உபதேசம் செய்கிறவரையில் உண்ணுவிரதமிருக்க தீர்மானித்தாள் நான்காம் நாள் மாதவராவ் அவள் மீது இரக்கங் கொண்டு, பாபா விடம் சென்று, அவள் ஜெபம் செய்வதற்கு ஏதாவதொரு நாமத்தை உபதேசம் செய்யவேண்டு மென்று

வேண்டிக் கொண்டார். பாபா அவளைக் கூப்பிட்டு "அம்மா உபதேசம் செய்வது எங்கள் வழக்கமில்லை. நான் என்குரு முன் அதிக பயபக்தியுடன் நிற்பேன். என்னை அறியாமலே பல விஷயங்களைக் கற்றேன். இவ்வாறு ரகசியமாக பல விஷயங்களை அறிவிப்பதே எங்கள்முறையாகும். நான் வார்த்தைகளைக்கூறி செவி மூலமாக உபதேசிப்பதில்லை" என்றார்.

ஸாயி பாபா மற்றவர்களைப் போல் ஒருபோதும் உபந்நியாசம் செய்வதில்லை. அவர் சில வார்த்தைகள் அல்லது வாக்கியங்களையே கூறுவர். அவர் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் ஆழ்ந்த கருத்துடையதா யிருந்தது. அவைகளிலிருந்து பக்தர்கள் தம்மறிவுக் கெட்டிய வரையில் வியாக்யானம் செய்து கொள்வார்கள்.

வாழ்க்கையின் நோக்கம் அல்லது புருஷார்த்தம்

ஸாயி பாபா எப்போதாகிலும் பக்தர்களுக்கு மோட்சத்தையடையும் மார்க்கத்தைக்கூறினாரா? விவேகம், வைராக்யம் முதலானவற்றை ஆதரித்தாரா? இவைகளைப்பற்றி அவர் பேசி நான் கேட்டதேயில்லை. கடவுளை அடைவதே நமது நோக்கமாயிருக்க வேண்டுமென்று அவர் அடிக்கடி கூறுவார்: மாயை என்பதைப்பற்றி அவர் ஒரு போதும் பேசியதில்லை. இவ்வுலகமும் மற்ற உலகங்களும் உண்மையானவைகளென்றும், இவ்வுலகத்திலும் மற்ற உலகங்களிலும் நன்மையைக் கடைப்பிடித்து, தீயவற்றை ஒழித்து ஒழுகவேண்டுமென்றும் கூறுவார்.

ஊழ்வினை, மறுபிறப்பு என்பவைகளைப்பற்றி அவர் அடிக்கடி கூறுவதுண்டு. அவர் "இப்பிறப்பிலும் மறுபிறப்பி

லும் நாம் நன்மையடைய வேண்டுமானால் நற்காரியங்களை செய்யவேண்டும் என்றும் நீதியைப் புகட்ட பலகதைகளைக் கூறுவார். பலருடைய முற்பிறப்பைப் பற்றியும் எதிர்கால வாழ்க்கையைப்பற்றியும் கூறுவார்.

ஸாயி பாபாவுடன் நெருங்கிப் பழகியவர் மறுபிறப் புண்டென்ற உண்மையையும், ஊழ்வினைக்கேற்ப பலாபலன் களை ஜனங்கள் அநுபவிப்பார்களென்ற உண்மையையும் ஒரு போதும் சந்தேகிக்கமாட்டார். இவை இந்துமதக் கொள்கை களாகும். ஸாயி பாபா எந்த மதத்தை சமயத்தை சாதியை சேர்ந்தவரென குறிப்பிடமுடியாது. அவர் எல்லா மதத் திற்கும், சமயத்திற்கும், சாதிக்கும் மேலானவர். ஆனால் அவருச்கு இந்துமதத்திலுள்ள நம்பிக்கையை பல சந்தர்ப்பங் களில் வெளியிட்டிருக்கிறார். அவர் "என் குரு ஒரு பிராமணன்" என்று கூறியதை நான் பலமுறை கேட்டிருக் கிறேன்.

பாபாவும் இந்துமதமும்

பகவத்கீதை, பாவார்த்த இராமாயணம், ஏகநாத் பாகவ தம், பஞ்சதசி, யோகவாசிட்டம், புராணங்கள் முதலான வைகளில் ஸாயி பாபாவுக்கு அதிக மதிப்பு உண்டு. இவை களிலடங்கிய கருத்துக்களை அடிக்கடி வெளியிடுவார். ஞான தேவர் ஆராதனம் ஆகும்போது பாபா எழுந்து உட்கார்ந்து கைகளைக் கூப்பி மார்பில் வைத்து கண்களை மூடி தியானம் செய்வார். பஞ்சதசியைப்பற்றி அவர் கபார்டே என்பவரிடம் பேசும்போது அது ஆத்மஞானம் அடங்கிய பொக்கிஷ மென்று கூறினார். யோகவாசிட்டத்தையும் அவர் போற்றி வந்தார்.

நான் சிறுவனுயிருக்கும்போது என்னை பாபா அடிக்கடி பதினைந்து ரூபா தக்ஷிணை கேட்பார். என்னிடம் பணமில்லை யென்பதை அவர் நன்கறிவர். ஆகையால் அவருடன் நான் தனியேயிருந்தபோது "பாபா என்னிடம் பணமில்லை யென்று உங்களுக்குத் தெரிந்திருந்தும் அடிக்கடி பதினைந்து ரூபா தக்ஷிணை கேட்கிறீர்களே" என்றேன். அதற்குப் பாபா, "உன்னிடம் பணமில்லை யென்பது நன்ருய் தெரியும். ஆனுல் நீ இப்போது யோகவாசிட்டம் படிக்கிருயல்லவா? அதிலிருந்து பதினைந்து ரூபா தக்ஷிணை கொடு" என்ருர். நான் அப்போது யோகவாசிட்டம் படித்துக் கொண்டிருந்தேன். அதிலிருந்து பதினைந்து ரூபா எடுப்பதென்ருல் என்ன அர்த்தம்? அதிலிருந்து சிறந்த விஷயங்களைக்கற்பது என்பதேயாகும். அதை பாபாவிடம கொடுப்பதென்ருல் என்ன அர்த்தம்? ஸாயி பாபா என் இருதயத்தில் வீற்றிருப்பதால், நான் கற்ற விஷயங்களை இருதயத்தில் அமைப்பது என்பதாகும். தவிர ஸாயி பாபா, இராமரிடத்திலும் கிருஷ்ணரிடத்திலும் பக்தியுள்ளவராயிருந்தார். பாபாவுக்கு மகாராஷ்டிர ஸத்புருஷர்களாகிய ஞானேஸ்வரர் துக்காராம் முதலானவர்களிடத்திலும் அதிக மதிப்பு உண்டு.

நான்கு மார்க்கங்களைப்பற்றி பாபாவின் அபிப்ராயம்.

1. யோக மார்க்கம்:— (1) ஆசனம், (2) பிராணுயாமம், (3) தியானம், (4) குண்டலினியைக் கிளப்புதல் முதலான யோகாப்பியாச முறைகளைஸாயி பாபா ஆதரிக்கவில்லை. நானறிந்த வரையில் எவருக்கும் அவர் இம்மார்க்கத்தைப் போதித்ததில்லை. பிராணுயாம வழிகளைப் பின்பற்று

பவர்கள் கடைசியில் மேம்பாட்டைய தம்மிடமே வரவேண்டு மென்று அவர் கூறுவார்.

2. **கர்ம மார்க்கம்:**—ஜனங்களுடன் வசித்து உழைக்க வேண்டு மென்பதை அவர் தம் செய்கையாலே காட்டினர். அவர் தானியங்களை இயந்திரத்திலிட்டு மாவாக அறைப்பார். சாமான்ய ஜனங்கள் துறவறம் பூண்டு பிட்சை எடுத்துண் பதை அவர் ஆதரிக்கவில்லை. ஆனால் அவர் ருணனுபந்தத்தை அநுசரித்து சிறிது உணவைப் பிச்சை யெடுத்துவந்தார். அவர் அடிக்கடி தக்ஷிணை வாங்கிவந்தது ருணனுபந்தத்தை ஒழிப்பதற்காகவேயாம். அவரை நாடி வந்தவர்களுக்கெல்லாம் கிருஹஸ்தாசிரமத்தையே போதித்தார். வாமனராவையும் என்னையும் பிட்சை எடுக்கச் சொன்னது எங்களுக்காகவல்ல. எங்களது குருவுக்குத் தொண்டு புரிவதற்காகவேயாம். பாபா எங்களிடத்தில் சொல்லாவிட்டாலும் பிச்சையென்பது அபூர்வம் அல்லது புண்ணியத்தை நாசப்படுத்துவதால் கெடுதல் என்பதே அவர் கொள்கை எனக் கருதுகிறேன்.

ஸாயி பாபா எதற்காகத் தக்ஷிணை கேட்கிறரென்று சிலர் அவரைக் கேட்டபோது அவர் "நான் எல்லோரையுமா தக்ஷிணை கேட்கிறேன்; இல்லையே! அந்தப் பக்கிரியால், (அதாவது கடவுளால்) சுட்டிக் காட்டப்பட்ட சிலரிடமிருந்தே நான் தக்ஷிணை கேட்கிறேன்" என்று பதிலளித்தார். அவர் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தான் கேட்பார். அதற்கு மேல் கொடுத்தாலும் அவர் வாங்கமாட்டார். அவர் கேட்ட போது ஒருவரும் தக்ஷிணைகொடுக்க மறுத்தது மில்லை. சில வேளைகளில் தக்ஷிணைகேட்பது, வேறு பொருள் படுவதற்கேயாம். வெளியேயோ அல்லது இன்னின்னரிடம் போய் அவர்களுடைய சிநேகத்தைப் பெறு, என்ற அர்த்தம் சிற்சில சமயம் கொள்வதற்காகும்.

III. ஞானமார்க்கம் : தன்னைத்தான் அறிந்து கொள்வதோ அல்லது உபநிஷதங்கள் பிரம்ம ஸூத்திரங்கள் முதலியவைகளிலிருந்து அந்த ஞானம் பெறுவதோ இம்மார்க்கத்தின் நோக்கமா யிருந்தால் இது ஸாயி பாபா மார்க்க மல்ல. அவர் இதைப்பற்றி தம் அபிப்ராயத்தை யாரிடமும் கூறவில்லை. ஆயினும் அவரது செய்கையி லிருந்து அவரது அபிப்ராய மின்னதென்று நாம் அறிந்து கொள்ளலாம். அவர் தமது பக்தர்களெல்லாம் தம்மைப் போலாக வேண்டு மென்று விரும்பினர். அவருடைய அனுபவமும் ஞானமும் உண்மையான விஷயங்களைப் பற்றியதே. அவர் முக்காலத்தையும் அறிந்தவர். எங்கும் சஞ்சரிக்க வல்லவர். நமது ஆத்ம லாபத்திற்கு எது அவசியமாகவேண்டுமென்பதை அவர் அறிவார். இதனல் அவருக்கு உலகப்பற்று சிறிதும் கிடையாது. அவர் இவ்வுலக பந்தபாசங்களிடையே இருந்தபோதிலும் எதிலும் பற்றற்று விளங்கினர். ஆகையால் அவரது வாழ்க்கை கடவுளிடம் சேர்க்கும் வைராக்கிய மென்றும் உண்மையான நிஷ்காம்யகர்ம மென்றும் கூறலாம்.

IV. பக்தி மார்க்கம்:—எல்லா மஹான்களாலும் மிகவும் சிறந்ததாகக் கருதப்படுவது பக்திமார்க்கமே. கடவுளிடத்தில் அன்புடன் தொண்டு செய்வதே இம்மார்க்கத்தின் முக்கிய அம்சமாகும். அதிலும் விசேஷமாய் குருவினிடத்தில் அன்பாயிருந்து தொண்டு செய்வதே பக்திமார்க்கமென்று ஸாயி பாபா வற்புறுத்துவர். குருவைக் கடவுளாகப் பாவித்து பக்திசெய்து வந்தால் குருவின் மூலமாகக் கடவுளைக் காணுவதும் தவிர குருவும் கடவுளும் ஒன்ருய் விடும்.

பாபாவின் குரு யார்?

ஸாயி பாபாவின் குரு யாரென்று தெரியவில்லை. என் குரு ஒரு பிராமணன் என்று அவர் அடிக்கடி கூறுவார். அவர் பிராமணர்களிடத்தில் மிக மரியாதையாகவே நடந்து வந்தார். பிராமணர்கள் அதிக புண்யத்தை சம்பாதித்துக் கொள்ளுகிறார்களென்று அவர் கூறுவது வழக்கம்.

சிஷ்யனுக்கும் பக்தனுக்கும் அதிக வித்தியாசம் உண்டு. குருவுக்கு சிஷ்யனிடத்திலிருக்கும் தொடர்பும், அன்பும் பக்தர்களிடமிருக்காது. பக்தர்களுடைய பாப புண்ணியங் களுக்கு குரு ஜவாப்தாரியல்ல. ஆனால் சிஷ்யனுடைய பாவபுண்ணியம் குருவைச் சேரும். ஸாயி பாபாவுக்கு சிஷ்யர் கள் ஒருவரும் கிடையாது. சிஷ்யன் குருவின் கட்டளைப் படியும் அவரிஷ்டப்படியும் ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டும். "என் குருவின் எதிரில் செல்வதென்றால் என க்கு அதிக பயம்" என்று ஸாயி பாபா சொல்வார். சீர்டியில் அவ்வளவு பயபக்தியுடன் அவரிடம் சிஷ்யனாயிருக்க ஒரு வரும் முன்வரவில்லை. ஒரு முறை ஸாயி பாபா "எனது சிஷ்யன் தான் என்று சொல்ல எவனுக்குத் துணிவு. யார் என்னிடம் திருப்தியாக பணிவிடை செய்யமுடியும்?" என்று கேட்டார். ஒருவரும் துணிந்து முன்வரவில்லை.

ஆனால் ஸாயி பாபாவுக்கு அநேகபக்தர்களிருந்தார்கள். ஸாயி பாபா இவர்களுக்கெல்லாம் வேண்டிய உதவி செய்து வந்தார். ஸாயி பாபா பக்தர்களுக்குப் போதிக்கும் முறை வெகு விநோதமானது. கதைகள் மூலமாகவும் சில சொற்கள் மூலமாகவும் அரிய விஷயங்களைப்போதிப்பார். உபதேசம் செய்வதோ அல்லது உபந்யாசம் செய்வதோ அவருடைய வழக்கமில்லை.

"குருவினிடம் வரும் பக்தர்கள் பரிசுத்த மான மன முடையவர்களாகவும் நற்குணநற்செய்கை யுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்கள் ஜெபமோ அல்லது தியானமோ செய்யவேண்டிய அவசியமில்லை. நான் என்னும் அசங்காரம் அவர்கள் மனதை விட்டு அறவே ஒழியவேண்டும். குரு உபதேசமே செய்யவேண்டாம். அவரது அரிய சக்தி பரவி பக்தர்கள் மனதில்படியும். இச்சக்தியைப் பெறவல்லவர்கள் குருவினிடம் பரிபூரண அன்பு கொண்ட பக்தர்களே." இவ் வுண்மை பாபாவின் செய்கையி லிருந்து நன்கு வெளியாயிற்று. "என் அருகில் உட்கார்ந்து சும்மா இரு, நான் மற்றவைகளை எல்லாம் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று அவர் கூறுவார்.

பக்தர்களுக்கு ஸாயி பாபாவிடம் நம்பிக்கை யிருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஒருவன் அவரைத் தரிசித்து அருகே சிறிது நேரம் உட்கார்ந்திருந்தால் அவனுக்குப்பூர்ண நம்பிக்கை உண்டாய்விடும். பாபா தமது பக்தர்களுடைய அனுபவங்களைக் கூறுவார். நம்முடைய மனதிலிருப்பதை உணர்ந்து தூரத்தில் நடப்பவைகளையும் திரிகால விஷயங்களையும் அவர் கூறும்போது நம்மை யறியாமலே அவரிடத்தில் நம்பிக்கை உண்டாகி விடுகிறது. நாம் எங்கு சென்றாலும் எது செய்தாலும் எப்பொழுதும் நம்மைப் பார்த்துக்கொண்டு நம்மிடம் பாபா இருக்கிறார் என்னும் எண்ணத்தாலேயே, இகபர விஷயங்களுக்கு வேண்டிய உதவியும் நன்மையும் நமக்கு விளையும். ஏனெனில் இவ்வுலகிலும் மறு உலகிலும் எக்காரியமும் அவர் அருளாலேயே நடக்கிறது.

ஆகையால் அவரிடம் பக்தனாக விரும்பும் ஒருவன் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால், பரிசுத்தமான மனதுடனும், நற்குண நற்செய்கையுடனும் இருந்து அவரது கிரு

யையை அடைய விரும்பவேண்டும். தன்னை மேலான நிலைக்கு உயர்த்தி நல்ல பதவி யளிக்கவேண்டு மென்று மனதிலே தியானம் செய்யவேண்டும். குரு அவனை அவசியம் கரையேற்றுவார். அதைப்பற்றிப் பக்தர்கள் சிறிதும் கவலைப் படவேண்டியதில்லை. இவ்வழிகளை ஸாயி பாபா ஒருங்கே இவ் வித வார்த்தை சொல்லி போதித்ததில்லை. அவருடன் நான் பழகியதிலிருந்தும் அவ்வப்போது அவர் கூறிய வார்த்தை களினின்றும் நான் தெரிந்து கொண்ட விஷயம் இது.

விவேகம் வைராக்யம் என்ற விஷயங்களைப் பற்றி வெறும் பேச்சு பேசுவதாலும் வீண் ஆராய்ச்சி செய்வதாலும் ஒருவித நன்மையுமில்லை என்பது என் அபிப்ராயம். இவை புத்தகங்களைப் படிப்பதால் உண்டாகும் அறிவேயொழிய அனுபவ சித்தமான அறிவு அன்று. ஸாயி பாபா "நான் நாயிலு மிருக்கிறேன் பூனையிலு மிருக்கிறேன்" என்று சொல்லும்போது அவர் அவ்வாறு இருப்பதாகவே உணர்ந் தார். அவைகள் எவ்வாறு அனுபவிக்கின்றன வென்பதையும் சொல்லுவார். மற்றவர்கள் அவ்வாறு சொல்லும்போது, பகவத் கீதையில் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறதால் சொல் வார்களே யொழிய தம் சுவானுபவத்தால் சொல்ல மாட்டார் கள்.

ஸாயி பாபாவின் மஹிமையை விளக்க ஒரு உதாரணம் கூறுகிறேன். பாபா கடவுள் அவதாரமென்றே நான் நம்பி யிருக்கிறேன். பக்தர் அனுபவத்திலும் எண்ணத்திலும் பாபா தெய்வமே யாகிலும் அவர் பார்த்திப சரீரத்தில் தோன்றி ஜீவர்களுக்குள்ள தங்கு தடை குறைகளையும் வகித்து வந்தார் என்பது என்கொள்கை. ஆனால் என் நண்பர்கள் வேறு அபிப்ராயங் கொண்டிருந்தனர். ஸ்ரீ கிருஷ்ணபிரான் துவார கையில் அரசாண்ட காலத்தில் சுமார் 56 கோடி ஜனங்கள்

இருந்தார்களென்று என் நண்பர்கள் கூறினார்கள். நான் அதை நம்பவில்லை. இப்போது இந்தியா முழுமையும் 36 கோடி ஜனங்கள் தானே இருக்கிறார்கள், இந்தியாவின் முழு விஸ்தீரணமே அவர்களுக்குப் போதாமல் வருந்துகிறார்கள். அப்படி யிருக்க ஒரு சிறு துவாரகா என்னும் தீவில் 56 கோடி ஜனங்கள் இருக்க முடியுமாவென்பது என் சந்தேகம். அவர்கள் பாபாவைக் கேட்டு சந்தேகம் தெளிந்துகொள்வதென முடிவுசெய்தார்கள். நாங்கள் ஸாயி பாபாவிடம் சென்றோம். மாதவராவ் ஸாயி பாபாவை புராணங்கள் உண்மைதானாவென்று கேட்டார். ஸாயி பாபா 'ஆமாம்' என்றார். பிறகு "இராமாவதாரம் கிருஷ்ணாவதாரம் உண்மைதானா?" என்று கேட்டார். "அதில் என்ன சந்தேகம்" என்றார் ஸாயி பாபா. இதைக்கேட்ட மாதவராவ் உம்முடைய பக்தர் நார்கே இதை நம்பமாட்டேனென்கிறார். அவர் நீங்கள் கடவுள் அல்லவென்று கூறுகிறாரே." என்றார்.

ஸாயி பாபா அவன் சொல்வது உண்மை. ஆனால் நான் உங்கள் தந்தை. உங்களுடைய நலத்தையும், வேண்டியதெல்லாவற்றையும் என்னிடமிருந்தே நீங்கள் அடைய வேண்டும். ஆகையால் நீங்கள் அப்படி (அதாவது நான் சுவாமியல்லவென்று) பேசக்கூடாது.

ஸாயி பாபா தான் கடவுளல்ல என்பதை ஒப்புக்கொண்டார் பக்தனுடைய அனுபவத்தில் அவர் கடவுள் தான்; சந்தேகமில்லை. பக்தர்கள் அதை உணர்வதால் ஸாயி பாபா உண்மையில் தாம் கடவுளைத் தவிர வேறு இல்லை என்று சாதிப்பதில்லை. பக்தர்கள் தம்மை கடவுள் என எண்ணினபடியால் எல்லா விஷயத்திலும் தம்மை கடவுளெனவே எல்லோரும் பாவித்து அதற்கு அனுசரணையாக நடக்க வேண்டியதென்று பாபா கோரவில்லை. உண்மையை

உபயோகித்து பக்தனுடைய பணம் முதலியவைகளைப் பிடுங்க நினைப்பதுமில்லை. தர்மம், சாஸ்திரம், நீதி முதலிய கட்டுப்பாடுகளை உதறிவிட்டதுமில்லை. ஒரு காலத்திலும் சன்மார்க்க விதிகளிலிருந்து பாபா மீறி நடந்ததில்லை. தேசச் சட்டங்களையும் மீறுவதில்லை. உடையிலாவது, நடத்தையிலாவது ஒழுங்கீனமாய் இருந்ததில்லை. பெண் பிள்ளைகளிடத்தில் வெகு அடக்கத்துடன் ஒழுகுவார்.

பாபாவினுடைய மனோபாவம்

பாபா சில உற்சாக சமயங்களில் சொன்னது 'மைம் அல்லா ஹூம்' அதாவது 'அஹம் பிரம்மா அஸ்மி' "நான் கடவுள்" என்பார். (நானே அவர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன்). ஆனால் அது ஏதோ ஒரு சமயம். ஆனால் பெரும்பாலும் தம்மை ஈசுவரனிடம் மிகுந்த அதிகாரம் பெற்று அவர் ஆணையை நிறைவேற்றும் பக்தனாகவே உரைப்பார். "அல்லா மாலீக்" அதாவது "கடவுள் தான் எஜமான்" 'அல்லா அருள்வர்' என்ற வார்த்தைகள் அடிக்கடி சொல்வார். "நான் ஈசன் அடிமை, ஈசனை ஸ்மரிக்கிறேன்" என்றும் சொல்வார்.

பாபாவின் பிரும்மசர்யம்

பாபா ஒரு நைஷ்டிக பிரமசாரி. ஜ்வலிக்கும் அவருடைய கண்களே அதற்கு சான்றாகும். அவர் பெண்களை தம்மருகில் அண்டவிடுவதில்லை. பகலில் சில மாதர்கள் அவரை யணுகி அவர் காலைப் பிடிப்பர். அதுவும் அவர் முழங்கால் வரையில் தான். அவர் எப்பொழுதும் உடை தரித்திருப்பார். விகாரமாக தேகத்தை திறந்து காட்டியிருக்க மாட்டார்.

பாபாவின் குணாதிசயம்

பாபா நிஷ்பக்ஷபாதி. நியாயஸ்தர். பணக்காரரையும் உன்னத நிலையுள்ளவர்களையும் கூட கவனியாமல் தம்மிடம் அண்டினவருடைய உண்மையான ஸ்வபாவத்தை கவனிப்பார். வெறும் ஏழையைப்பற்றி அவனுக்கு "அதிக பைகா" உண்டு. அதாவது யோக்யதை யுண்டு என்று புகழ்வதை நானே நேரில் அறிவேன்.

கண்டிப்பான நியாயம்

அவரைச் சுற்றியிருக்கிற மனிதனுடைய நடத்தையைக் கொண்டு ஒரு சன்னியாசியின் குணத்தை மதிக்கலாகாது. வியபிசாரிகள், விடபுருஷர்கள, பேராசைக்காரர், பலவகை பாவிகள் அவரிடம் வருவர். அவர்கள் இவ்வுலக நன்மையைத் தேடியே வருவர். ஆனால் அவருடைய சந்நிதானத்தினாலுண்டாகும் நன்மையைக் கைக்கொள்ளத் தவறினால் அவர் அவர்களைக் கஷ்டத்தில் உழல விட்டு விடுவர். அவர் நீதியில் கராராயிருப்பர். "கர்ப்பப் பையில் குறுக்காய் விழுந்து விட்டால் உன் குழந்தையை நீயே வெட்ட வேண்டி வரும்" என்று அவர் சொல்லி யிருக்கிறார்.

பாபாவின் தைரியம்

மனிதர்களுடன் பழகுவதிலும் வியாதி முதலியவற்றிலும் பாபா தைரியமாய் இருப்பார். அவைகளின் போக்கு நமக்கு புலப்படா. அவருக்கோ நன்றாய்த் தெரிகின்றன. சுகாதாரத்திற்கான முன் ஜாக்கிரதைகளைத் தைரியமாக உதறி யெறிந்து விடுவார். இதனால் சில சமயம் தன் பக்தர்களிடம் நம்பிக்கை யுண்டாக்குவார். எனக்குத் தெரிந்த சில சம்பவங்களைச் சொல்லுகிறேன்.

தினமும் நைவேத்தியத்திற்கு ஒரு மிட்டாய்க் கடைக்காரனிடம் பாபா மிட்டாய் வாங்குவது வழக்கம். 1916-ல் ஒருநாள் அவன் பிளேக் பிடித்து இறந்து கிடந்தான். அப்பொழுது சீர்டியில் அதிக பிளேக். பாபா என்னை அவன் கடைக்குப்போய் மிட்டாய் வாங்கிவரச் சொன்னார். நான் போனேன். அவனுடைய மனைவி அழுதுகொண்டிருந்தாள். நான் அவளிடம் பாபாவின் உத்திரவைச் சொன்னேன். அவள் பிணத்தைக் காட்டினாள். அலமாரியிலிருந்து என்னை மிட்டாய் கொண்டுபோகச் சொன்னாள். இதனால் எனக்கும் மற்றவர்களுக்கும் நோய் பிடிக்குமோ என்று நடுநடுங்கிக் கொண்டே மிட்டாயை எடுத்துச் சென்றேன். அதை அவர் பிரசாதமாகக் கொடுத்தார். 'நீ சீர்டியை விட்டுப்போனால் பிழைப்பாய் இங்கே இருந்தால் இறப்பாய். என்றுதானே நினைக்கிறாய்? அது அப்படி இல்லை. எவன் அடிபடவேண்டுமென்ற விதி யிருக்கிறதோ அவனே அடிபடுவான். சாக விதி யிருந்தால் சாவான். எவனை யணைத்து முத்தமிட வேண்டுமோ அவனுக்கு முத்தம் கிடைக்கும்' என்று பாபா சொன்னார்.

காலரா, சீர்டியில் மும்முரமாக இருக்கையில் இம்மாதிரி அவர் என்னை தைரியப்படுத்தினார். அவ்விடம் குஷ்டரோகிகளிருந்தனர். அவர்கள் அவர் கால்களைப் பிடிப்பர். ஒருவனுக்கு நோய் தீர்ந்தது. ஒரு குஷ்டரோகியை விட்டு (தூனி) அக்கினியிலிருந்து (சாம்பல்) உதியை எடுத்து பக்தர்களுக்குப் பிரசாதமாகக் கொடுக்கச் செய்வார். வியாதியஸ்தர் வாயில் உதியைப் போடுவது வழக்கம். அந்தக் குஷ்டரோகியும் பாபா உத்திரவினால் உதியைக் கொடுத்தான். இருந்தும் எனக்குத் தெரிந்தவரையில் ஒரு கெடுதலும் யாருக்கும் நேரவில்லை.

நாசிக்கில் வசிக்கும் பிராமண குலத்தைச் சேர்ந்தவரும், 63-வயதானவருமான ராவ்பஹதூர் S. B. துமால் B.A., L.B. பின்வருமாறு கூறுகிறார்:—

ஸாயி பாபா விஷயமாய் உன்னுடைய அநுபவங்கள் என்ன? என்ற கேள்விக்கு பதில் கூறுவது மிகவும் கஷ்டம். ஏனெனில் இரவும் பகலும் நான் ஸாயி பாபாவின் மஹிமையை அறிந்து வருகிறேன். என் வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு சம்பவமும் ஸாயி பாபாவின் திருவுள்ளமாகுமென நான் கருதுகின்றேன். என் வாழ்க்கையே ஸாயி பாபாவின் திருவருளால் நடக்கிறதென நம்புகிறேன். ஆகையால் என் அநுபவங்கள் இன்னவைதானென நான் எவ்வாறு கூறுவது? எனது கொள்கைகள் சரிதானென உலகத்தார் நம்பமாட்டார்கள். அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அவர்கள் நம்பாமலிருப்பதும் ஒரு விதத்தில் நன்மையே. ஒவ்வொரு பக்தனுடைய அநுபவங்கள் அவன் உணர்ந்து நன்மையடைவதற்கே, பிறருக்குக் கூறுவதற்காகவல்ல. பிறரிடம் கூறினால் அவன் கொள்கைகளை நம்பாமலுமிருக்கலாம். பலர் அவனைக் கேலிசெய்யலாம். ஒரு பக்தனுடைய இரகசியமான அநுபவங்களை வெளியிடுவதால் அவைகளின் மஹிமை அழிந்து விடுகிறது. ஆகையால் பாபாவின் மஹிமையை அவரவர் அநுபவத்தினால் தான் அறியவேண்டும், அதைக் கூற முடியாது. ஸாயி பாபா எங்கு போய் விட்டார்? அவர் எங்கும் போகவில்லை. இப்போதும் நம்முடன் தானிருக்கிறார். சமாதியாகு முன்னர் இருந்ததைவிட இப்போது பதின் மடங்கு விசேஷ சக்தியுடன் விளங்குகிறார். இன்று ஒருவர் முழுமனதுடன் தியானம் செய்வாரானால் ஸாயி பாபாவின் அருளைப் பெறலாம். அவ்வாறு செய்யாமல் பிறருடைய அநுபவங்களைக் கேட்பதால் என்ன பலன்?

ராவ்பகதூர். S. B. துமால் B. A. L. L. B. நாசிக்



சாந்தாராம் பலவந்த நாச்னே



S. B. நாச்னேயின் குடும்பம்
(வாஸுதேவைத் தவிர)

ஆயினும் நீங்கள் என் அநுபவங்களைக் கூறும்படி கேட்டுக் கொண்டதால் சிலவற்றைக் கூறுகிறேன்.

1907-ம் வருடத்தில் முதன் முதலில் ஸாயி பாபாவைக் கண்டேன். அவருடைய தோற்றமும் பார்வையும் எனது மனதைக் கவர்ந்தது. பிறகு நான் எனது நண்பரான கோபால் ராவ் புட்டியை அவரிடம் அழைத்துச் சென்றேன். அவரும் ஸாயி பாபாவின் பக்தராய் விட்டார். ஸாயி பாபா சமாதி கோயில் கட்டி புட்டி பெரிதும் உதவி செய்தார். இதுவே அவர் செய்த மறக்கமுடியாத தொண்டாகும்.

என்னைப் போன்ற பக்தர்களுக்கு ஸாயி பாபா செய்த நன்மைகளை விளக்க அவர் கூறிய சில மொழிகளையும், அவரது செய்கைகளையும் கூற விரும்புகிறேன். ஒரு நாள் அவர் "எப்போதும் உன்னைப் பாதுகாக்கிறேன். நான் அவ்வாறு செய்யாவிடில் உன் வாழ்க்கை என்னவாகுமோ கடவுள் தானறிவார்" என்றார். மற்றொரு நாள் நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது "நேற்றிரவு முழுதும் தூக்கமே வரவில்லை" என்றார். ஏனென்று கேட்டேன். உன்னைப் பற்றி இரவு முழுதும் நினைத்துக் கொண்டிருந்தேன். அதனால் தூக்கம் வரவில்லையென்றார். இதைக் கேட்டதும் எனக்காக அவர் எவ்வளவு கவலை கொள்ளுகிறார் என்ற எண்ணம் உண்டாயிற்று. அவரிடம் அன்பும் பக்தியும் அதிகரித்தது. என் கண்களிலிருந்து என்னையறியாமல் கண்ணீர் பெருகிற்று. என்மீது எவ்வளவு இரக்கம்! என்ன அன்பு! நான் அவரைத் தியானித்து வந்தேன். அவர் என் நன்மைக்காக கவலைகொண்டார். நான் செய்த ஒவ்வொரு காரியத்திலும் பேருதவி செய்து வந்தார். எதிர் காலத்தை அறிந்து, எனக்கு ஏற்படக்கூடிய தீமைகளையெல்லாம் களைந்து வந்தார். இதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

நான் எக்காரியத்தையும் ஆரம்பிக்கு முன்னர் அவரது அபிப்ராயத்தை அறிய அவருக்குக் கடிதம் எழுதுவதுண்டு. என் கடிதங்களை ஸ்ரீ மாதவராவ் தேசபாண்டே ஸாயி பாபாவுக்குப் படித்துக் காட்டி அவர் கூறும் பதில்களை எனக்குத் தெரிவிப்பார். ஸாயி பாபா சமாதியடைந்த 1918-ம் வருஷத்திற்கு பின்னரும் ஏதாவது உதவி வேண்டுமானால் அவரைத் தியானித்து மனதில் விண்ணப்பித்துக் கொள்வேன். சில வேளைகளில் அவர் திருவுருவப் படத்தின் முன் திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்ப்பேன். அவர்காட்டிய வழி எனக்கு எக்காரியத்திலும் ஜெயமே அளித்தது.

நாசிக்கில் எங்கள் பிதுரார்ஜிதமான வீடு உண்டு. அதிலே, என் ஆயுள் முழுவதும் வசித்துவருகிறேன். அவ் வீட்டில் ஒரு முறை பிளேக் வந்தது. என்வீட்டில் இறந்த எலிகள் காணப்பட்டன. வீட்டைக் காலிசெய்யுமுன் ஸாயி பாபாவுக்குக் கடிதம் எழுதினேன். என்ன செய்யவேண்டுமெனக் கேட்டேன். அவர் பதில் வந்த பிறகே நான் அவ் வீட்டை காலி செய்து வெளியே போனேன். "ஒவ்வொரு க்ஷணமும் உன்னைக் காப்பாற்றி வருகிறேன்" என்று அவர் கூறினாரல்லவா? என்னைக் காப்பாற்றுவது அவர்தானென்று நான் நம்பி வந்தேன். அவர்மீது பளுவைப்போட்டு அவர் சொல்படியே நான் நடந்துவந்தேன். சென்ற 29 வருடங்களாக அவரையே தான் நம்பிவருகிறேன். அவர் என்னைப்பல ஆபத்துக்களினின்றும் காப்பாற்றி இருக்கிறார். பாபாவின் பதில் வந்ததும் என் வீட்டை விட்டு ஒரு பங்களாவுக்குக் குடிபோனேன். அன்றிரவு என் சகோதரன் பிள்ளை படுத்திருந்த படுக்கை அருகில் ஒரு எலி இறந்து கிடந்தது. அந்த வீட்டையும் காலி செய்வதாவென்று பாபாவுக்குக் கடிதம் எழுதினேன். அவர் வேண்டாமென்று பதில் அனுப்பினார்.

டாக்டர்களும் மற்றவர்களும் காலிசெய்யும்படி கூறினர்கள். பாபா கூறியபடி நான் அந்த பங்களாவிலேயே இருந்தேன். எங்கள் குடும்பத்திற்கு ஒருவித கெடுதலும் உண்டாக வில்லை. சிலநாட்கள் கழித்ததும், வேலைக்காரர் விடுதியிலும் அக்கம் பக்கத்திலும் இறந்த எலிகள் காணப்பட்டன. நாங் கள் தண்ணீர் எடுக்கும் கிணற்றிலும் இறந்த எலி காணப் பட்டது. நான் பயந்து ஸாயி பாபாவுக்குக் கடிதம் எழுதி னேன். பங்களாவைக் காலிசெய்து சாமான்களை யெல்லாம் வண்டியிலேற்றி என் சொந்த வீட்டுக்குப் போனேன். போய் கதவைக் திறக்கும் சமயம் தபால்காரன் என்னிடம் ஒருகடிதம் கொடுத்தான். அது சீர்டியிலிருந்து வந்தது. பங்களாவைவிட்டுப் போகவேண்டாமென்று எழுதி இருந்தது. பாபா ஆணைப்படி வண்டியை திருப்பி பழைய பங்களாவுக்குச் சென்றேன். அங்கே பல நாள் குடியிருந்தேன். ஆனால் அக்கிணற்று ஜலத்தை உபயோகிக்காமல், கோதாவரி நதியி லிருந்து ஜலம் கொண்டுவந்தேன். ஒருசமயம் நாசிக்கில் பிளேக் பரவி, தினமொன்றுக்குப் பத்துபேருக்கு மேல் இறந்தார்கள். அப்பொழுது ஊர் வீட்டில் பாபா உத்திரவுப் படி யிருந்தோம். ஆயினும் நாங்கள் ஸாயி பாபாவின் அனுக்கிரகத்தால் உயிர் தப்பினோம்.

1909-ம் வருடத்தில் என்மனைவி இறந்துவிட்டாள். அவளது ஆத்மா நற்கதி அடையவேண்டுமென்று பிரதி மாத மும் மாஸிகம் செய்துவந்தேன். ஆறும் மாதம் மாஸிகம் செய்யு முன்னர், அதைச் சீர்டியில் செய்யும்படிக்கும் என் மனைவிக்கு சத்கதி அளிப்பதாகவும் ஸாயி பாபா கூறினர். அவர் கட் டளைப்படி அங்கே அம்மாத மாஸிகம் செய்தேன். பாபா பதினைந்து ரூபா தக்ஷிணை கேட்டார். அதை உடனே கொடுத்

தேன். பாபாவின் அனுக்கிரகத்தால் என் மனைவிக்கு சத்கதி கிடைக்குமென நான் பரிபூர்ணமாக நம்பினேன்.

என்மனைவி இறந்தபோது எனக்கு வயது 36 தான். எனக்குக் குழந்தைகளில்லாததால் இரண்டாவது விவாகம் செய்துகொள்ளும்படி என் உறவினரும் நண்பர்களும் தொந்தரவு செய்தார்கள். என் மாமனர் ராவ் பஹதூர் பாபுராவ் தாதா கின்கேட் நாகபூரில் வக்கீலா யிருந்தார். அவரும் என்னைக் கலியாணம் செய்துகொள்ளும்படி கூறினர். ஸாயி பாபாவைக் கேட்காமல் நான் செய்து கொள்ளமாட்டேனென்றேன். அவர் என்னை சீர்டிக்கு அழைத்துச் சென்றார். அவர் தனியாக பாபாவிடம் சென்றார். சில நிமிடங்கழித்து அவர் திரும்பிவந்து பாபாவுக்குச் சம்மதமில்லையென அவரது முகத்தால் அறிந்ததாகக் கூறினர். இன்னும் நான் கலியாணம் செய்து கொள்ளவில்லை. இதைப்போல் எனது உலக வாழ்க்கையிலும், பிற்கால வாழ்க்கையிலும் ஸாயி பாபா என்னருகிலிருந்து எனக்கு வழிகாட்டி வருகிறார். எனது வக்கீல் தொழிலில் நான் ஜெயம்பெற்று வந்தேன். வருமானமும் அதிகம் கிடைத்தது. எல்லாம் ஸாயி பாபாவின் கிருபை. இதோடு இவ்வுலகப் பற்றில்லாமல் சம்சார சாகரத்திலிருந்து என்னைக் கரையேற்றிவைப்பதும் ஸாயி பாபாவே. அவர் எப்போது கட்டளையிடுகிறாரோ அப்போது வேலையை விட்டு நிம்மதியா யிருக்கவும் சித்தமா யிருக்கிறேன்.

என் தொழில் சம்பந்தமாகவும் ஸாயி பாபா உதவியைச் சிறிது கூறுகிறேன். சுமார் 20 வருஷங்களுக்கு முன்னர் சீர்டியில் ஒரு கிரிமினல் கேஸ் நடந்தது. ஊரில் இருகக்ஷி. பாபாவின் வேலைக்காரனை ரகு என்பவரும் இன்னும் ஐந்து பேரும் ஒரு மார்வாரி ஸ்திரீயை மானபங்கம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார்கள். இதை நேரில் பார்த்ததாக

ஆறு சாக்ஷி கூறினார்கள். கைதிகள் எல்லோரும் 6 மாதம் தண்டிக்கப்பட்டார்கள். குற்றவாளிகளுக்காக, தாத்யாபடேல் கோதே என்பவர் அப்பீல்செய்ய விரும்பினார். அப்போது ஊரிலிருந்த வக்கீல் G. S. கபார்டே, H. S. தீக்ஷதர், மாஜிஸ்ட்ரேட்டாகிய ராவ்பகதூர் H. V. சாடே முதலானவர்களைக் கலந்தாலோசித்தார். இவர்கள் நீதிபதியின் தீர்ப்பை வாசித்து, அப்பீலில் ஜெயமடைவது கஷ்டம் என்று கூறினார்கள்.

தாத்யாபேடல் கைதிகளை எவ்வாறேனும் விடுவிக்க வேண்டுமென்று தீர்மானித்தார். ஸாயி பாபாவிடம் சென்று தன் விருப்பத்தைத் தெரிவித்தார். ஸாயி பாபா அவரை என்னிடம் போகும்படி கூறினார். அவர் சீர்டியிலிருந்து நாஸிக்கு வந்து என்னைக் கண்டார். நான் ஜட்ஜியின் தீர்ப்பை நன்றாய் வாசித்துப் பார்த்தேன். அப்பீலில் ஜெயிக்க முடியாதெனத் தோன்றிற்று - ஆகையால் பம்பாய் சென்று மிகவும் திறமையுள்ள வக்கீல்களை வைத்து அப்பீல் செய்து பார்க்கும்படி கூறினேன். அவர் ஸாயி பாபா என்னிடம் போகும்படி கட்டளை இட்டதாகச் சொன்னார். பிறகு அதைப்பற்றி ஒரு வித ஆலோசனையும் செய்யாமல், அப்பீல் மிமோவை தயார் செய்து டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டிடம் சமர்ப்பிக்க அவர் வீட்டுக்கு எடுத்துச் சென்றேன். அவர் ஜட்ஜியின் தீர்ப்பையும் அப்பீலையும் வாங்கிப் பார்க்காமல் என்ன விசேஷமென்று கேட்டார். நான் கேஸ் விவரம் விளக்கினதில் "கேசு பலமானதாகத் தோன்றுகிறதே" என்றார். கேசின் ரீதியும், சாக்ஷிகள் அதிகமாய் வந்திருப்பதும் ஊரிலுள்ள கக்ஷியால் தான் என்றேன். "அப்படியா நினைக்கிறாய்" என்றார். நினைக்கிறதா. அந்தவிஷயத்தில் எனக்கு சந்தேகமேயில்லை என்றேன். உடனே அப்பீல் வாதிகளெல்லோரையும் விடு

தலே செய்துவிட்டேன் என்று சொல்லி என்னிட மிருந்து அப்பீல் மிமோவை வாங்கி அதின் பேரிலேயே நான் சொன்ன சங்கதிகளைக் காட்டி தீர்ப்பெழுதி விட்டார். அதுமுடிந்த வுடன் "உங்கள் ஸாயி பாபா என்ன, மகம்மதியரா இந்துவா உங்களுக்கு என்ன உபதேசம்செய்கிறார்?" எனக்கேட்டார்.

ஸாயி பாபா இந்துவுமல்ல, மகம்மதியருமல்ல. இருவருக்கும் மேல்பட்டவர். அவரது போதனைகள் என்ன வென்று கூற இயலாது. நீங்களே ஒருமுறை சீர்டிக்குப் போய் அவரைத்தரிசிக்க வேண்டுமெனக் கூறினேன். அவர் சீர்டிக்குப் போகவேண்டுமென எண்ணினர். சில நாட்கள் கழித்து அவர் புறப்பட்டு கோபர்கான் வரையில் சென்றார். உஷ்ணம் அதிகமா யிருக்கவே சீர்டிக்குப் போகாமல் திரும்பி விட்டார். அப்பீலேப்படிக்காது தீர்ப்பு கூறியதிலிருந்தும் உடனே ஸாயி பாபாவைப் பற்றி விசாரித்ததி லிருந்தும் ஸாயி பாபாவின் அருளினலே அந்த கேஸ் ஜெயித்ததென்று தெரிகிறதல்லவா? நான் உடனே ஆமத்நகரிலிருந்து சீர்டிக்குச் சென்றேன். அன்று தீக்ஷதருடைய குமாரி இறந்து விட்டாள். ஜனங்களெல்லோரும் அவள் தகனக்கிரியைக்குச் சென்று விசாரத்துடன் திரும்பிவந்தனர். அவர்களே ஸாயி பாபா கூப்பிட்டு உங்களுக்கு ஓர் அற்புதம் காட்டப் போகிறேன் என்றார். அப்பொழுது ஒரு அற்புத நிகழ்ச்சியையும் காணவில்லே. பிறகு நான் அங்குபோய் கேஸ் விசாரணையின்றி ஜெயித்துவிட்டதெனக் கூறினேன். அப்போது ஜனங்கள் அவர் கூறிய அற்புத நிகழ்ச்சி இதுதானென தெரிந்து கொண்டார்கள்.

என் வேலே சம்பந்தமான இன்னும் ஒருசம்பவம். மூன்று சகோதரர்கள் சேர்ந்து அவர்களுடைய விரோதிகளே அடித்து ஒருவனுடைய எலும்பை ஒடித்துவிட்டதாக கேசு. வைத்தி

யப் பட்டம் பெருத ஒருவைத்தியன் சொந்த ஆஸ்பத்திரியில் அந்த மனிதனுக்கு 20 நாள் சிகிச்சை செய்திருந்தான். நான் குற்றவாளிக்காக வக்காலத்து வாங்கி அப்பீல் எழுதிக் கொண்டு அவர்களை ஜாமீனில் விடவேண்டும் என்று கேட்கப் போனேன். செஷன்ஸ் ஜட்ஜ் ஒரு ஐரோப்பியன். நான் ஜாமீன் கேட்பதைக் கேட்டவுடனே கேஸ் பலமாக இருக் கிறது. ஜாமீன் கொடுக்கமுடியாது என்ருர். நான் உடனே பாபாவை நினைத்துக்கொண்டு ஜட்ஜ் பக்கம் திரும்பினேன். எலும்பு முறிந்தது என்று சொல்லுவது பட்டம்பெற்ற வைத்தியனல்ல. அதற்கு சாட்சி சொன்னவர்கள் கட்சியில் சேர்ந்தவர்கள் நம்பமுடியாதவர்கள். மூன்று கைதிகளும் விவசாயிகள். மூவரும் அடைபட்டால் அவர்களுடைய விவ சாயம் கெட்டுப்போகும். குற்றவாளி என்று கண்டால் கடைசியாக ஜயிலுக்கு அனுப்பலாம் என்று இந்தமாதிரி சொன்னேன். உடனே ஜட்ஜ் ஜாமீனில் விடுதலை செய்தார். கேஸ் விசாரணைக்கு வந்தது. பிராசிக்யூடர், தீர்ப்பே தப்பு என்று வாதிக்கப் போகிரீரா அல்லது மன்னிப்புக் கேட்கப் போகிறீரா' என்று என்னை கேட்டார். மன்னிப்புக் கேட்டால் தாம் எதிர்ப் பதில்லை என்றும் சொன்னுர். தீர்ப்பு பலமானது என்று எனக்குத் தெரியும். ஆகிலும் நான் தீர்ப்பையே எதிர்த்துப் போராடுவது என்று தீர்மானித்தேன் என்றேன். நான் ஜட்ஜ்முன் தீர்ப்பை மாற்றவே பேசினேன். ஆனல் தண்டனையைக் குறைக்கவேண்டு மென்றும் கடைசியில் வேண்டிக் கொண்டேன். கோர்ட்டார் கருணைகாட்டவேண்டு மென்று மாத்திரம் கேட்பதா யிருந்தால் இவ்வளவுநேரம் கேஸைப்பற்றி வாதித்திருக்க வேண்டிய தில்லையே என்று ஜட்ஜ் சொன்னுர். பப்ளிக் பிரசிக்யூடர் பேசும்போது சர்டி பிகேட் பெருத வைத்தியன் பேச்சைக்கொண்டு எலும்பு ஒடிந்

தது என்று சொல்லமுடியாதது என்றும், அப்படியானல் "கொடுந்துன்பம்" என்பது எப்படி ஏற்படும் என்றும் ஜட்ஜ் கேட்டார். அதற்கு பிராசிக்யூடர், அடிபட்டவன் இருபது நாளுக்குமேல் ஆஸ்பத்திரியில் இருந்தான் என்று பதிலுரைத்தார். உடனே ஜட்ஜ் "மூன்ருந்தர ஜா மாஜிஸ்திரேட்டிடம் இந்தமாதிரி பேசலாம், செஷன்ஸ் ஜட்ஜிடமா இப்படிப் பேசுகிறது, செஷன்ஸ் கோர்டில் நீர் இப்பொழுது பேசுகிறது என்பதை மறக்காதே" என்ருர். பிராசிக்யூடர் மனம் குலைந்து உட்கார்ந்து விட்டார். அதற்குமேல் பேசவேயில்லை, அப்பீல் செய்தவர்களுக்கு விடுதலை.

என் பொதுஜன வேலையில் நான் சர்க்காரால் நியமிக்கப்பட்ட டிஸ்டிரிக்ட் போர்ட் பிரசிடெண்டாக இருந்தேன். அதுதான் முதன் முதல் உத்யோகத்தில் இல்லாதவருக்கு அந்த ஜில்லாவில் அந்தப் பதவிகொடுத்தது. நான் 1-11-1917 முதல் 13-5-1925 வரையில் அந்த வேலையைப் பார்த்து வந்தேன். தினமும் ஆயிரக் கணக்கான கடிதங்களுக்கு நானே கையெழுத்துப் போடவேண்டி யிருந்தது. (facsimile signature) ரப்பர் ஸ்டாம்பு போடக்கூடாது. அதனுல் தினமும் அதிகநேரம் இந்த வேலையில் சென்றது. அதனுல் என் வக்கீல்தொழில் குறைந்தது. ரூ. 260 சொச்சம் வருமானவரி கட்டின எனக்கு வரி கட்டவேண்டிய அவசியமே இல்லாமல் போய்விட்டது. என்வருமானம் அவ்வளவு குறைந்து போயிற்று. அந்த உழைப்பை மெச்சி அதிகாரிகள் 1927-ல் எனக்கு ராவ்பகதூர் பட்டம் கொடுத்தனர். அவ்வளவு பணநஷ்டத்திற்கு இது ஈடு ஆகாதுதான். இருந்தாலும் அவர்கள் மெச்சிக்கொண்டது விசேஷம். பாபாவின் உதவியால் என் பொதுநல ஊழியத்தைச் சரிவரசெய்து வந்தேன். ஒரு சேவகன் ஆபீசுபேபர்களை என்னிடம்

கொண்டுவருவான். நான் கையெழுத் திட்டதும் அவன் மையொத்துவான். இரண்டு மூன்று மணிகள் இந்தவேலை யானதும் அவற்றை அவன் ஆபீசுக்குக் கொண்டுபோவான். ஒருநாள் அந்தக்கடிதங்களை நான் பார்த்துக்கொண் டிருந்தேன். அப்பொழுது ஒரு பெரிய கனவான் என் வீட்டுக்கு வந்தார். பாதி ராத்திரி வரையில் என்னுடன் பேசிக்கொண்டிருந்த தால் கையெழுத்துகள் போடமுடியவில்லை. மறுநாள் எனக்கு ஒழியவில்லை. எங்கேயோ வேறு ஊருக்குப் போகவேண்டி யிருந்தது. அதனால் பேபர்களை ஆபீசுக்கு அனுப்பிவிட்டேன். அன்று இரவு வீட்டிற்கு வந்தேன். ஆனால் அந்ததினத் திற்கு வரவேண்டிய பேபர்கள்தான் வந்தன. நான் முதல் நாள் பேபர்களை வரவழைத்தேன். ஆனால் எல்லாம் கை யெழுத்தாகி யிருந்தன. ஆபீஸ் சேவகனைச் சாப்பாட்டிற்கு முதல்நாள் ராத்திரி அனுப்பியிருந்தேன். கையெழுத்து ஒத்தடம் செய்ய ஆளுமில்லை அப்படி இருக்க ஆயிரக் கணக் கான கையெழுத்து எப்படிப் போடமுடியும் என்று எனக்கு விளங்கவில்லை. பாபாவும் அவருடைய அமானுஷிய மான சக்தியையுந் தவிர்த்து வேறு ஒரு ஹேதுவும் எனக்குச் சொல்ல முடியவில்லை.

இன்னொரு உதாரணம். டிஸ்டிரிக்ட் போர்ட் பிரசி டெண்டாக நான் இருந்ததால் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் என் பார்வையில் இருந்தன. ஒருமாதத்தின் முதல் இரண்டு மூன்று தேதிகளிலேயே தீபாவளி பண்டிகை வந்தது. கல்வி அதிகாரி ஒரு மகம்மதியர். அவர் இந்தப் பண்டிகைக்கு உபாத்தியாயருக்கு உதவவேண்டும். சீக்கிரம் சம்பளத்தைக் கொடுத்துவிடுங்கள் என்றார். முதலில் அதைப் பற்றி அதிக மாக யோசிக்கவில்லை. இரண்டு மூன்று நாட்கள் கழித்து அவர் அதை ஞாபகப் படுத்தினர். இது செய்யமுடியுமா

என்று என் ஆபீசின் மூலமாய் அக்கௌண்ட் இலாகாவை விசாரித்தேன் "சர்க்கார் கிராண்ட் வரவில்லை. உத்தரவு கிடைப்பதற்கு முன் நாம் செக் கொடுக்கக்கூடாது" என்று அக்கௌண்ட் ஆபீசிலிருந்து பதில் வந்தது. நான் ஒன்றும் செய்வதற்கில்லை. மறுபடியும் கல்வியதிகாரி இந்த விஷயத்தைக் குறித்து என்னிடம் பேசினார். ஆனால் பாபாவின் உத்தரவைக் கேட்டேன். நான் சீட்டுப் போட்டேன், பாபா சம்பளத்தைக் கொடு என்று அனுமதித்தார். நான் உடனே செக் எழுதிக் கொடுத்து அக்கௌண்ட் ஆபீசுக்கு அனுப்பினேன். அவர்கள் ஆக்ஷேபணை செய்யாததால் பணம் கொடுக்கப்பட்டது. உபாத்தியாயர்கள் சந்தோஷப்பட்டனர். அக்கௌண்டண்ட் சொன்னதை ஒருபுறம் வைத்துவிட்டு செக் அனுப்பியதற்கு எனக்கு என்ன ஆகுமோ என்றிருந்தேன். ஆனால் பாபாவின் அருளினால் ஒன்றுமில்லாமல் போய் விட்டது. வெகுகாலங்கழித்து ஒரு (ஆடிட்) கணக்குப் பரிசோதகர் அதை தப்பு என்றார். நான் இனிமேல் கவனித்துக் கொள்ளுகிறேன் என்று எழுதினேன். அத்துடன் அந்த விஷயம் முடிந்தது.

என் வாழ்நாளில் கஷ்டம் நேர்ந்த போதெல்லாம் பாபா உதவியிருக்கிறார். அப்படி கணக்கற்ற சமயங்களுண்டு. நான் சிலவற்றைச் சொல்லுகிறேன்.

1910-ல் என் ஆப்த சினேகிதர் ஸ்ரீ மான் கோபல் ராவ் புட்டி என்பவர் எனக்கு உதவவேண்டும் என்று ஆவலாய் இருந்தார். வக்கீலுக்குப் படிக்க என்னை இங்கிலாந்துக்கு அனுப்புவதாகவும் அதுமுடியும் வரையில் இந்தியாவில் என் குடும்பத்தைக் காப்பதாகவும் அவர் சொன்னார். இந்த ஏற்பாட்டை நாங்கள் முழுவதும் பேசி முடித்து பாபாவின் அனுமதிக்காக அவரிடம் போனோம். மாதவ ராவ் தேச-

பாண்டே பாபாவிடம் "பர்வு (அதாவது நான்) வெளி நாட்டுக்கு (இங்கிலாந்து) போகட்டுமா" என்றார்.

பாபா:—எதற்காக?

தேசபாண்டே:—வக்கீலுக்குப் படிக்க

பாபா:—வேண்டாம். அவன் இயல்பும் கடவுள் எண்ணமும் இங்கிலாந்திற்குச் செல்வதற்காக அன்று; இங்கிருக்கத்தான். அவன் ஏன் இங்கிலாந்து போகவேண்டும்?

அப்பொழுதுதான், "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்" முதலான அடிகளின் உண்மையை நன்கு உணர்ந்தேன்.

1917-ல் குளோரோபாரம் கொடுத்து G. G. ஆஸ்பத்திரியில் எனக்கு ஒரு ஆபரேஷன் செய்தனர். அது பயங்கரமானது. குளோரோபாரம் என் உடலில் பாயுமுன் பாபா என் தலைமாட்டில் ஒரு நாற்காலியில் இருக்கக்கண்டேன். அவர் என்னைப் பாதுகாக்க வந்திருந்தார். எனக்குள் தைரியம் உண்டாயிற்று. ஆபரேஷன் அபாயமின்றி நடந்தது. அனுகூலமாக முடிந்தது.

1915-ல் நாசிக்கில் பப்ளிக் பிராசிக்யூடர் வேலை ஏற்றுக் கொள்ளுகிறாயா என எனக்கு உத்திரவு வந்தது. நான் இரண்டு நாட்கழித்துச் சொல்லுவதாக விடைகூறி பாபவுக்கு எழுதினேன். "உன் முன்வேலை நல்லது. புதிது வேண்டாம்" என்று பதில் வந்தது. நான் பிராசிக்யூடர் வேலையை ஏற்றுக்கொள்ள வில்லை.

1918-ல் பாபா மறைவதற்குக் கொஞ்சநாள் முன் சீர்டி பூனா முதலிய விடங்களில் 'இன்புளுயன்ஸா' என்ற விஷசுரம் அதிகமாகப் பரவி இருந்தது. என் சகோதரன் மனைவி பூனா

வில் அதனுல் அதிககஷ்டப் பட்டுக் கொண்டிருந்தாள். அவன் நாசிக்குக்குத் தந்தி கொடுத்திருந்தான். உடனே நான் வழிச் செலவிற்கும் ரயிலுக்குமாக ரூ. 80 எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். போகும் வழியில் வியாதிக்காரிக்கு பாபா உதியும், ஆசீர்வாதமும் பெற்றுப் போகலாம் என்று சீர்டிக்குப் போனேன். பாபா அடிக்கடி என்னை தக்ஷிணை கேட்டார். கொடுத்தேன். இதனுல் என் கையிலிருந்த பணம் எல்லாம் தீர்ந்து விட்டது. நான் பூனு போவதற்காவது வியாதிக் காரிக்கு உதவுவதற்காவது இது சுப சூசகமல்ல. நான் புறப்படுவதற்கு அனுமதி கேட்டபொழுது பாபா வழக்கம் போல நாளைக்குப் பார்ப்போம் என்றுர். இந்தமாதிரி மூன்று நாள் நிறுத்திவிட்டார். அதற்குள் பூனுவிலிருந்து அவள் இறந்தாள் என்று தந்தி வந்துவிட்டது அதன் பிறகு பாபா போக உத்திரவு கொடுத்தார். என் அண்ணிக்கு என்ன ஆகும் என்று பாபா தெரிந்துகொண்டு அவள் உலகை விடுவதே அவளுக்கு நல்லது என்று நினைத்தார் போலும், அவள் இறந்த சிலநாட்கழித்த பிறகே நான் பூனு போவது நலம் என்றும் எண்ணினுர் போலும். அப்படி நினைத்ததற்குக் காரணம் எனக்குத் தெரியவில்லை. ஆனுல் அவருக்குத்தான் எல்லாம் தெரியும். எல்லா வற்றையும் அவரே தீர்மானிக்க வல்லவர். ஆகையால் வழக்கம்போல நான் அவர் இஷ்டப்படி விட்டு விட்டேன். அவர் மறைவதற்குக் கொஞ்சநாள் முன் இதுவாயிற்று. அவர் என்னை சீர்டியில் நிருத்தியதால் கடைசி முறை அவருடன் சிலநாள் இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

மேலே சொன்னபோது என் வேலை அல்லது உத்யோகத் தால் எனக்கு நேர்ந்த திரவிய நஷ்டம் பாபா வுடைய அரு ளால் சற்றுத் தீர்ந்தது. நல்லநிலைமைக்கு வந்தேன்.

1-9-'30 முதல் 9-4-'32 வரையில் வோர் ராஜ்யத்தில் நான் வரிவசூல் அதிகாரியாக இருந்தேன். 1932-ம் வருஷ முடிவிலிருந்து 1933 ஆகஸ்ட் வரையில் 'ஸர்காணு' ராஜ்யத்திற்குக் "கார்பாரி" யாக இருந்தேன். நாசிக்குக்குத் திரும்பி வந்த ஒவ்வொரு சமயத்திலும் என் வக்கீல்தொழில் நன்ருக வேநடந்தது. ஒருநாள்கூடத் தொழிலில்லாமல் போக்குவதில்லை. ஸர்காணுவி லிருக்கும்போது பாபா எனக்குப் பண விஷயமாக விசித்திரமாக உதவினர். ஒருநாள் நான் சாப்பிட்டுக்கொண் டிருந்தேன்: என்வீட்டுக்கு அந்த சமஸ்தானதிபதி வந்தார். நான்இலையைவிட்டு எழுந்து அவருக்கு மரியாதை செய்யமுடியாம லிருப்பதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். அவருக்கு ஆசனம்கூட அளிக்க முடியவில்லை. ஆனல் அவர் நேராய் பக்கத்து அறைக்குள் போய் சுவற்றில் மாட்டியிருந்த ஸாயி பாபாவின் படத்தைப் பார்த்துவிட்டு, நான் சாப்பிடும் அறைக்கு வந்தார். உடனே அன்று முதல் எனக்கு ரூ. 50 சம்பளம் உயர்ந்தது என்ருர். இப்படி உயர்த்தும்படி நான் கேட்கவே இல்லை. நான் வேலைக்குவந்த பதினைந்து நாளைக்குள் நான் கேட்காமலே அவர் இவ்வாறு என்சம்பளத்தை உயர்த்தினர். அதற்குக் காரணம் என் பூஜையறையில் பாபாவுடன் அவர் கொஞ்சநேரம் இருந்ததுதான். சம்பளம் உயர்த்த நான் கேட்காததால் பாபாதான் கேட்டிருக்க வேண்டும். சேயின் நன்மை தாயின் கவலையல்லவா ?

என் பூஜைக்கு நான் முதன் முதல் பாபாவின் போட்டோவை வைத்திருந்தேன். பிறகு பாபாவின் வர்ணப்படத்தை வைத்திருந்தேன். நான் எங்கே போனலும் இந்தப் படங்களைக் கொண்டுபோவது வழக்கம். நான் தேவாருக்கும் நாசிக்குக்கும் அடிக்கடி போய்க்கொண்டிருந்தேன். தேவாரி

னுள்ள என் சமயற்காரனும் நாசிக்கிலுள்ள என் மருமகனும் அந்தப் படங்களில் சிலவற்றை வைத்துவிட்டுப் போகச் சொன்னார்கள். ஒவ்வொரு சமயமும் நான் பாபாமுன் சீட்டும் போடுவேன். ஒவ்வொரு சமயமும் நானே அதை எடுத்துப் போகவேண்டும் என்று பதில் கிடைக்கும். இராதாகிருஷ்ண ஆயிவிட மிருந்து கட்டாயப் படுத்தி ஒரு படம் வாங்கினேன். அதனிடத்தில் எனக்கு விசேஷப் பிரியம். அதில் பாபா ஆழ்ந்து ஆலோசிக்கிற மாதிரி நிற்கிறார். "பாவு, உன்னைப் பற்றி நான் நினைத்து நினைத்துக் கொண்டிருந்தேன்-அதனால் முன்னாளிரவு தூங்கவே இல்லை" என அவர் முன் சொன்னதை அது ஞாபகப்படுத்தும்.

ஆயி வீட்டிலிருந்து அந்தப் படத்துடன் நான் மசூதியின் பக்கம் போய்க் கொண்டிருந்தேன். பாபா என்னை அழைத்தார். நான் மசூதிக்குள் போனேன். படத்தைக் காட்டி, பாபா 'அது என்ன?' என்றார். நான், நீங்கள் இதில் இருக்கிறீர்கள் என்றேன். பாபா, கொடு இங்கே எனக் கொடுத்தேன். அதைக் கொஞ்சநேரம் வைத்திருந்தார்; அதன் முன்னும் பின்னும் பார்த்தார். 'வைத்துக்கொள்' என்று சொல்லி திருப்பிக் கொடுத்து விட்டார்.

பாபாவின் படம், பாபா தொட்டு ஆசீர்வதித்து பூசைக்குக்கொடுக்க வேண்டும் என்பதே என் எண்ணம். முதல் தடவை அவர் என்னிடம் இரண்டு ரூபாய் தக்ஷிணை வாங்கிக் கொண்டார். அதைத் திரும்பக் கொடுத்து, இதை ஜாக்கிரதையாய் வைத்திரு செலவு செய்யாதே யாருக்கும் கொடுக்காதே' என்றார். இதே மாதிரி சொல்லி அவர் ஒருமுறை ரூ. 2 மறுமுறை ரூ. 20, ரூ. 15, ரூ. 30 ஆக ரூ. 69 கொடுத்திருக்கிறார். அவற்றை பாபாவின் ஞாபகத்திற்காக மட்டுமில்லை. அதிர்ஷ்ட முண்டாகும்படி மந்தரித்த காசுகள்

என்று நான் இன்னும் ஜாக்கிரதையாக வைத்திருக்கிறேன். நானும் புட்டியும் எதிரே இருக்கும் போது பாபா அவரை ரூ. 20 தக்ஷிணை கேட்டு அதை வாங்கி எனக்குக் கொடுத்து விட்டார். வேறு சில சமயங்களில் இதே மாதிரி பணம் கொடுத்திருக்கிறார். எல்லாம் ரூ. 30 ஆகும். மற்றொரு சமயம் புட்டியிடமிருந்து பாபா ரூ. 30 வாங்கிக் கொண்டார். அதை இரண்டு கைகளிலும் குலுக்கி திடீரென்று பாராமல் பிரித்து எங்கள் இருவருக்கும் ஒவ்வொரு கையிலுமுள்ளதைக் கொடுத்தார். நாங்கள் அதை வீட்டிற்குக் கொண்டு போய் எண்ணினேம் ஒவ்வொருவருக்கும் ரூ. 15 இருந்தது.

உண்மையான அன்புடையவன் "கொடுப்பான், வாங்கிக் கொள்வான்". பாபா அன்பினால் என்னிடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்டார். நானும் சந்தோஷமாய்க் கொடுத்தேன். இந்த தக்ஷிணை கேட்பதில் அடிக்கடி ரஹஸ்யார்த்தமிருக்கும். சந்தர்ப்பத்தையும் பாபா வெளியிட்ட வார்த்தைகளையும் ஊன்றி பரிசோதித்தால் அந்த அர்த்தம் விளங்கும்.

சில சமயங்களில் பாபா அவரைக் காணவருகிற பக்தர்களை அடிக்கடி தக்ஷிணை கேட்பார். தங்களுக்குத் தக்க ஆதரவென அவர்கள் நம்பிக்கொண்டுள்ள துகையை தம்பிடி-கூட மிச்சம் விடாமல் கேட்டு வாங்கிக்கொண்டு 'அகிஞ்சனர்' ஆக்கிவிடுவார். என்னையும் அந்நிலைக்கு கொண்டு வந்திருக்கிறார். கடைசி தம்பிடி வரையில் கொடுத்து விடுவதில் எனக்கு பயமும் இல்லை வருத்தமும் இல்லை. கொடுக்கிறவர் அவரே கொடுத்ததை எடுத்துக் கொள்ளுகிறவரும் அவரே. செல்லாக்காசு கூட இல்லாமல் நம்மை உறிஞ்சியிழுத்தது அவரானதால் சாதனங்கள் அமைத்து சவரக்ஷணை புரிவது அவர் பொறுப்பு. அவசியமானதைக் கொடுக்க அவர் தவறியதேயில்லை.

1918-ல் ரூ. 80 என்னிடமிருந்து பிடுங்கியதை முன்னமே சொல்லியிருக்கிறேன். இது மாதிரி வேறு சில சமயம் எனக்குத் தெரியும். அந்த மாதிரி சம்பவம் இரண்டு சொல்லுகிறேன். அந்த மாதிரி நடந்ததற்குக் கொஞ்ச காலம் முன் நான் அவரிடம் போயிருந்தேன். அவர் அடிக்கடி தக்ஷிணை கேட்டு என்னிடம் இருந்ததை எல்லாம் வாங்கிக்கொண்டார். மறுபடியும், 'பாவு, எனக்கு ஏழு ரூபாய் கொடு' என்றார். என்னிடம் ஒரு காசும் இல்லை என்றேன் அப்போது அவர் வேறுயாரிடமாவது வாங்கிவரச் சொன்னார். என்னைத் தாழ்மைப் படுத்திய இது எனக்கு ஒரு சிறந்த பாடம் ஆகும். பிச்சை கேட்க அல்லது கடன் வாங்கக் கூடாத அவ்வளவு சிறந்த நிலையிலிருப்பதாக நாம் நினைக்கக் கூடாது. அவர் மகா சமாதிக்குப் பின் ஒருமுறை சீர்டிக்குப் போனேன். அப்பொழுது இதே மாதிரி என்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டிய சமயம் ஒன்று உண்டாயிற்று. பாபா பிச்சைகேட்கும் வீடுகளுக்குப் போய் நான் பிச்சை கேட்டேன். இது போன்ற வழிகளால் அவர் என்னுடைய அகங்காரத்தையும் கர்வத்தையும் அடக்கி வைத்தருளினர். அப்படிச் செய்யாதிருந்தால் அக்குணங்கள் என்னைச் சமூகத்தில் தாழ்ந்தவர்கள் என்று சொல்லுபவருடன் பழகமுடியாதபடி என்னைத் தடுத்துவிடும்.

மற்றொரு சமயம் என் காசெல்லாம் பிடுங்கிக் கொண்ட பிறகு ரூ. 50 வேண்டுமென்றார் பாபா. என்னிடம் காசில்லை என்ற பொழுது, பாபா யாரோ ஒருவனிடம் போய்க் கேட்கச் சொன்னர். அவன் இல்லை என்றான். பிறகு ராவ்பகதூர் ஸாடேயிடம் போகச் சொன்னர். அவரைக் கேட்டதற்கு அவர் சந்தோஷப்பட்டார். ஐம்பது ரூபாய்க்கு அவரிடம் போகச் சொன்னதின் காரணம் எனக்கு அப்பொழுது

தெரியவில்லை. கொஞ்சகாலம் கழித்து அந்த சமயத்தில் அவருக்குப் பென்ஷன் விஷயமாய் தகரூர். அவர் (Sub-pro-tem) சம்பளக் கணக்குப்படி கொடுப்பதா அல்லது ஐம்பது ரூபாய் குறைவாய், காயம் சம்பளத்தை ஆதாவாய் வைத்துக் கொடுப்பதா என்று சந்தேகம் உண்டாயிருந்தது.

அவருக்குப் பூருவும் அதாவது ஷ்டி ரூபாய் ஐம்பதும் சேர்த்துக் கொடுக்கப்பட்டது. அவருக்கு ஜயமுண்டாகிறது என்பதைக் காட்டுவதற்காக பாபா என்னை ஐம்பது ரூபாய் அவரிடம் கேட்கப்போகச் சொன்னூர். நான் ஐம்பது ரூபாய் கேட்ட தினத்திலேயே அவருடைய சரியான பென்ஷனுக்கு உத்தரவாயிருந்தது.

ஷ்டி ரகுவின் கிரிமினல் அப்பீலில் நான் கேட்காமலே எனக்கு முன்னூறு ரூபாய் பீசு கொடுத்தார்கள். அந்த சமயம் ஆமத் நகரத்திலிருந்து சீர்டிக்கு வந்து நான் மூன்று நாள் தங்கினேன். பாபா அடிக்கடி தக்ஷிணை கேட்டு அந்த முன்னூறு ரூபாயையே வாங்கிக் கொண்டார். என் குருவின் வேலைக்காரன் ரகு. அவர் உத்தரவின்பேரில் நான் அந்தக் கேஸை எடுத்துக் கொண்டேன், அதற்கு நான் செய்தது ஒன்றுமில்லை. அவர் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுடைய மனதைக் கவர்ந்ததால் தான் அப்பீலனுகூலமாயிற்று. அதனுல் அதற்குப் பீஸ் வாங்காமல் இருப்பது நியாயமே. பாபா ஆன்மீக விஷயமாய்க் கற்பித்த சிலவற்றைக் கூறுகிறேன்.

அவர் ஒரு சமயம் கடவுளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த ஒருவரைப் பார்த்து, "கடவுள், கடவுள் என்கிருயே. கடவுள் என் உடுப்பின் பையில் இருக்கிருர்" என்ருர். இந்த மாதிரி சொன்னதிலிருந்து அவருடைய உண்மையான ஸ்வபாவம் வெளியாகிறது; அவரிடம் பக்தியதிகரிக்கிறது. நூற்றுக்கணக்கான ஜனங்களுக்கு தம் மசூதியில் சிற்

சில சமயம் சமையல்செய்து போடுவது வழக்கம். ஓர் தடவை அது தயாராகிக் கொண்டிருக்கையில், மாமிச உணவில் பிரியம் உள்ள ஒரு பக்கிரி வந்தான். அந்தச் சமையலில் அவன் மாமிசத்தைப் போட்டு விட்டான். பாபா சாகிப் மேரிக்கர் என்பவருக்கு அது அதிருப்தி யுண்டாகி அவர் சகலருக்கும் பயன்படும் சமையலை ஏன் மாமிசம் சேர்த்து மாற்றி விட்டீர் கள்." என்று பாபாவைக் கேட்டார். "நம் வயிற்றை நிரப் பிக்கொள்ளுவதற்கு மற்றவருக்கு இந்த இம்சையேன்?" என்றும் சொன்னார். பாபா அப்பொழுது மறைபொருளாக பதிலளித்தார். "கொல்பவன் காப்பாற்றுகிறான், காப்பவன் கொல்கிறான்" என்றார். இது படைத்துக் காத்து அழிக்கும் மும்மூர்த்திகளின் தொழிலும் ஒரு மூர்த்தியுடையது என்று குறிக்கிறது. அதுதவிர ஸாயி பாபாவைப் போன்ற சத் புருஷர் குணத்தை விசேஷமாக வெளிக்காட்டுகிறது. அவர் தங்கள் எதிரில் அல்லது காலடியில் சேருகிற எந்தப் பிராணிக்கும் சத்கதி கொடுக்கிறார் என்பது ஆகும்

காலஞ்சென்ற H. S. தீக்ஷித் என்பவர் தம் வாழ் நாளில் அநுபவமான விஷயங்களில் அவரே என்னிடம் சொன்ன இரண்டைச் சொல்லி இதனை முடிக்கிறேன்.

H. S. தீக்ஷித் அவர்கள் பிற்காலத்தில் பணக்கஷ்டப் பட்டு வந்தார். ஒரு சமயம் ரூ. 30,000 நான்கு நாட்களில் அவர் கொடுத்தாக வேண்டி யிருந்தது. அவருக்கு எங்கிருந்து எப்படி பணம் வரும் என்று தெரியவில்லை, கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அன்றிரவு கனவில் பணம் கொடுத்தவன் தம்மை உபத்திரவப் படுத்துவதாகவும் தமக்கு ஸர் சிமன் லால், முதலான பெரிய மனிதர்கள்தெரியும், எவரிடமிருந் தாவது வாங்கித் தவணைப் படித் தாம் கொடுப்ப தாகவும் பதில் சொன்னதாகக் கண்டார். கொஞ்ச நேரமானதும் எழுந்

திருக்க, அந்தக்கனவு ஞாபகம் வந்தது. அப்பொழுது, சமயத்தில் கைவிடும் பெரிய மனிதரை நம்பி, தவறாமல் உண்மையில் உதவும் ஸாயி பாபாவை நினைக்காதது முட்டாள்தனம் என்று உணர்ந்தார். அந்த முட்டாள்தனத்தை நினைத்துக் கதறி ஸாயி பாபாவின் படத்திற்கு முன்போய் அந்த நினைப்பிற்காக மன்னிக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அதன் பிறகு பாபா ஒருவரே தமக்கு உதவவேண்டும் என்று திடமாக நம்பினார். தமக்கு உதவ பாபா ஒருவரே. பாபா தம் பக்தனைப் பாதுகாக்கத் தவறமாட்டார். பணம் கொடுக்க வேண்டிய நாள் வந்துவிட்டது. பணம் வரும்வழியைக் காணோம். அதற்கு முதல்நாள், அவர் தன்னுடைய ஆபீஸில் தன்நிலைமையைக் குறித்து ஆலோசித்துக்கொண் டிருக்கையில் தமது நண்பராகிய ஒரு சவுக்காருடைய மகன் அவரறைக்கு வந்தான். அவன் தகப்பன் இறந்து விட்டிருந்தான். தன்னிட மிருந்த ரூ. 30,000 எங்கேவைத்து வைக்கலாம் என்று ஆலோசனை கேட்கவந்தான். தீக்ஷித் அவன் சொன்ன வழிகளிலுள்ள கஷ்டங்களைச் சொன்னார். அதைத் தம்மிடம் கொடுத்து வைப்பதாகச் சொன்னாலும் அந்த துகை வேண்டியிருந்தும் அதைத் தாம் வாங்கிக்கொள்ள மாட்டேன் என்றார். தன்னுடைய நிலைமையில் அதைக் குறித்த தவணையில் திரும்பக் கொடுக்க முடியாது என்ற உண்மையைத் தெரிவித்தார். வந்தவன் அவர்சொன்ன காரணத்தைக் கேட்டு தயங்காமல் அதேகாரணங்களைக் கொண்டு அந்தப் பணத்தை அவரிடம் கொடுத்து வைப்பதாகச் சொன்னான். தன் தகப்பனுடைய ஆப்த நண்பனுக்கு அவசியமான காலத்தில் உதவாமற் போனால் தான் உண்மை மகனல்ல என்றான். இந்த எண்ணத்துடன் அந்தப் பணத்தை அவரிடம் கொடுத்துப் போனான். அவரும் தன் கடன்காரனுக்குக் குறித்த தவணை

யில் கட்டிவிட்டார். ஸாயி பாபா பல்லாயிர ரூபாய்களைப் பிரட்டக்கூடியவ ரென்பதும், பக்தர்களுக்கு உதவுவதில் மனிதர் மனதை மாற்றக் கூடியவரென்றும் நமக்குக் காட்டினர்.

தீக்ஷித் தம்பி ஸதாசிவ் B. A., L. L. B.. வக்கீலாக நாகப்புரி, பம்பாய், கண்ட்வா முதலிய இடங்களில் இருந்து பார்த்தார். வரும்படி ஒன்றும் வரவில்லை, அப்பொழுது தீக்ஷித் பாபாமுன் சீட்டுப்போட்டார். பாபா அனுமதியின் பேரில் தம் ஆபீஸில் வேலைசெய்ய பம்பாய்க்கு அழைத்துப் போனர். கொஞ்ச காலமானதும் அங்கும் நல்லபயன் கிடைக்கவில்லை, ஸதாசிவன் தான் போய்விடுவதாக அண்ணவிடம் சொன்னர். தீக்ஷித், பாபாதானே சதாசிவத்தை பம்பாய்க்கு அழைத்துப்போகச் சொன்னரே, எப்படி பலனில்லாமல் போகும் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார். எப்படியிருந்தாலும் தீபாவளி லீவுவரையில் அங்கேயே தம்பியை வைத்துக் கொள்வதென்று அவர் தீர்மானித்தார். அந்த நாட்களில் ஒரு ஆச்சரிய சம்பவம் நடந்தது. தீக்ஷித்துடைய நண்பரொருவர் அவரிடம் வந்தார். அவர் (Cutch) "கட்ச்" சமஸ்தான பாங்குக்கு குஜராத்தி தெரிந்த நம்பிக்கையான உத்யோகஸ்தர் ஒருவர் வேண்டும் என்றார். உடனே தீக்ஷித் சதாசிவம் அதற்குத் தகுந்தவன என்று கேட்டார். அந்த நண்பர் அங்கீகரித்து, சந்தோஷமாக கட்ச் சமஸ்தானத்திற்கு அவர் சிபார்சு செய்தார் அதன்பிறகு வக்கீல் வேலைக்கு உதவாத சதாசிவன் மாதம் ரூ. 1000 சம்பளத்தில் அமர்ந்து வெகுகாலம் அதைப் பார்த்து வந்தார். இந்தச் சம்பவத்தால் தன்னுடைய பக்தனை பம்பாய்க்குப் போகச்சொன்னதிலிருந்து சமீபத்தில் நேருவது மாத்திர மின்றி வெகுநாட் சென்று நடக்கப் போவதையும் அதனுலுண்டாகும் அழியா நன்மையையும் பாபா கண்டார் என்பது தெரிகிறது.

13-9-1936 சாந்தாராம் பலவந்த நாசனே

டஹாணுகர் குர்லா

1923ஆம் ஸாயி லீலா மாஸிக் என்ற பத்திரிகையில் என் அனுபவங்களிற் சில பகுதிகளை முன்னமே வெளியிட்டிருக்கிறேன். அப்பத்திரிகையை ஆஸ்திகர்களும் மற்றவர்களும்கூட வாசிப்பார்கள். அதனால் சாதாரண ஜனங்கள் நம்பாத சில விஷயங்களை வெளியிடாமல் விட்டு விட்டேன். விட்ட சம்பவங்களையும் பிறகு உண்டான என் அனுபவங்களையும் இப்பொழுது உங்களிடம் சொல்லுகிறேன்.

1909-ல் சில விஷயங்கள் நடந்தன. அப்பொழுது ஸாயி பாபாவுடன் அவற்றிற்கு ஒரு சம்பந்தமும் இருப்பதாகத் தோன்றவில்லை. அந்த வருஷத்தில் பம்பாயில் 'பாஜேகர் ஆஸ்பத்திரி''யில் என் சகோதரனுக்கு தொண்டைக்கருகே "ஆபரேஷன்" நடந்தது. அதைக் குறித்து எங்கள் எல்லோருக்கும் கவலை. அப்பொழுது நான் டஹாணுவில் இருந்தேன். ஒரு ஸாது வந்து இரண்டு ஒரு துண்டு ரொட்டி கிடைக்குமா என்று என்னைக் கேட்டார். நாங்கள் அவரை வீட்டிற்குள் அழைத்து வயிறு நிறைய சாப்பாடு போட்டோம். என் அண்ணி பரிமாறிக்கொண்டிருந்தாள். ஒரு பெரிய மகானுக்கு வெண்டைக்காய்க் கறி போடுவது தகாதென்றெண்ணி அதை போடாமல் இருந்தாள். ஆனால் சாதுவே 'வெண்டைக்காய்க் கறி போடு'ன்று கேட்டு வாங்கிச் சாப்பிட்டார். அந்த சாது எங்களை ஆசீர்வதித்து, இன்று ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் சௌக்கியமாய் நடந்தது என்றார். அதே தினத்தில் என் நண்பர் ஹரிபாவ் மோரேசுவர பான்ஸே "ஸாயி பாபாவின் அருளினால் ஆபரேஷன் சுகமாக

முடியும்" என்றார். அதுதான் முதல் தடவை ஸாயி பாபா வைப்பற்றி நான் கேள்விப்பட்டது.

அன்று சாயந்திரம் ஆஸ்பத்திரியிலிருந்து என் தகப்பனார் வந்தார். ஆபரேஷன் கஷ்டமின்றியும் ஆபத்தின்றியும் நடந்ததென்று சொன்னார். ஆபரேஷனுக்குப் பிறகு என் தமையன் முன் ஒரு சாது வந்து அவன் தலைமுதல் தடவிக் கொடுத்து எல்லாம் சௌக்கியமாகும் என்றார். ஆபரேஷன் க்ஷேமமாகவே முடிந்தது. என் சகோதரன் சொஸ்த மானான்.

அதே வருஷம் என் தகப்பனார் தாஸகணுவின் கீர்த் தனங்களைக் கேட்கப் போயிருந்தார். அந்தக் கீர்த்தனங்களில் ஸாயி பாபா தத்தர் அவதாரமென்றும் விசித்திர சக்தியும் அன்பும் உள்ளவரென்றும் தெரிய வந்தது. பாபா படம் ஒன்று வரவழைத்து அதை தினமும் ஊதுவத்தி கொளுத்தி பூசை செய்தோம்.

1912-ல் நான் முதல் முறை சீர்டிக்குப் போனேன். நான் ரெவினியூ இலாகா பரீக்ஷைக்குப் போயிருந்தேன். அதன் முடிவு (result) தெரிவதற்கு முன் சங்கர் பால கிருஷ்ண வைத்யாவும், அச்சுத தாதேயுமான என் நண்பர்க ளுடன் போனேன். போகும் வழியில் கோபர்காம் ஸ்டேஷ னில் இறங்கினோம். அங்கே ஸ்டேஷன் மாஸ்டர் நாங்கள் சீர்டிக்குப் போகிறோம் என்று தெரிந்துகொண்டு தனக்குத் தோன்றியதெல்லாம் பேசிவிட்டான், "பாபா குணத்தை மீறி அவருக்கு மரியாதை மூட ஜனங்கள் செய்கிறார்கள். அவர்களை பாபா மனோவசிய தந்திரங்களைச் செய்து ஏமாற்று கிறார்" என்றான். இவன் முரட்டடியால் என் மனம் கலங் கிற்று. இவ்வளவு கஷ்டப்பட்டுப் பார்க்கப் போகிறவர் உண்மைச் சன்னியாசிதானா என்று சந்தேகம் கிளம்பிற்று.

எப்படியும் நாங்கள் சீர்டிக்குப் போனோம். ஸாயி பாபா. (லேண்டி) தோட்டத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந் தார். அவர் என் நிலைமையைக் கவனித்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. அவர் ஒருவரும் ஒன்றும் என்னைப்பற்றி சொல்லுமுன், "என்ன! மாம்லத்தாரிடம் உத்திரவுபெறு மல் வந்துவிட்டாயா?" என்றார். நான் ஆம் என்றேன். "இவ்வி தமாய் நடக்காதே" என்று புத்திசொன்னார். இதைக்கேட்ட தும் ஸ்டேஷன் மாஸ்டருடைய தூஷணைகளும் அவைகளா லுண்டான சந்தேகங்களும் பரந்தோடிப் போய்விட்டன. வெகு தூரத்திலுள்ள விஷயங்களைக்கூட அறியும் மகான் பாபா என்று தெரிந்து கொண்டேன்.

இச்சமயம் மூன்று நாள் நாங்கள் சீர்டியில் இருந்தோம். பாபா அன்பையும் அற்புதமான சக்திகளையும் தினந்தோறும் பொழிந்தார். அது முதற்கொண்டு அவரிடம் நம்பிக்கை உறுதியாகி அவரைப் பூசித்து வருகிறேன்.

பாபா என் கையிலிருந்து உதியை எடுத்து என் நெற்றி யில் இட்டார். இந்த அன்பும் அருளும் பலருக்கும் அவர் காட்டியதில்லை. ஆரத்திக்கு மசூதியில் மத்தியானம் கும்பல் சேர்ந்திருந்தது. நானும் அங்கு இருந்தேன். பாபா என் னைப்போய்ச் சாப்பிடச் சொன்னார். அன்று ஏகாதசி என் றேன். ஆனால் ஏகாதசி உபவாஸ விரதமாவது வாடிக்கை யாவது எனக்கில்லை. என் இரண்டு சினேகிதர்களுக்குண்டு. அதற்காக நான் சாப்பிடாதிருந்தேன். ஆனால் நான் உண் ணாமலிருப்பது பாபாவுக்கு இஷ்டமில்லை. அவர் "இவர்கள் பித்துப் பிடித்தவர்கள். நீ (வாடா) வசதிக்குப் போய்ச் சாப் பிடு" என்றார். போனேன், போஜனசாலைக்காரர் அன்னம் போடவில்லை. ஏகாதசியன்று நான் சாப்பாடு கேட்பதற்காக முணு முணுத்துக் கொண்டிருந்தார். ஆரத்தி முடிந்த பிறகு

தான் போஜனம், இப்பொழுதில்லை யென்று சொல்லிவிட்டபடியால் மசூதிக்கு வந்தோம், சாப்பிட்டாய் விட்டதா என்று மறுபடியும் பாபா என்னைக் கேட்டார். "இது ஆரத்தி நேரமாய் விட்டதே. ஆரத்தி முடிந்ததும் சாப்பிடுகிறேன்" என்றேன். "நீ சாப்பிட்டு வருகிறவரையில் ஆரத்தி காத்திருக்கும்" என்றார் பாபா. இவ்வாறு பாபா பலவந்தம் செய்ததால் உண்டிச்சாலைக்காரன் உணவு எனக் களித்தான். பிறகு நான் ஆரத்திக்கு மசூதிக்குப்போனேன். அந்தச் சமயம் "மாவுசீ" என்ற ஒரு ஸ்திரீ பாபாவுக்கு வெற்றிலை பாக்கு 'விடா' கட்டிக் கொண்டுவந்து கொடுத்தாள். பாபா எனக்குக் சொஞ்சம் கொடுத்து போட்டுக் கொள்ளச் சொன்னார். ஏகாதசி தினத்தன்று தாம்பூலம் போடுவது வழக்கமில்லை அதனால் நான் கொஞ்சம் தயங்கினேன். பாபா மறுபடியும் "போட்டுக்கொள்" என்றார். உடனே வாயில் போட்டு மென்றேன்.

ஆர்த்தி முடிந்ததும் பாபா என்னிடமிருந்து 4 ரூபாயும் வைத்தியாவிட மிருந்து 16 ரூபாயும் தக்ஷிணை வாங்கிக் கொண்டார். தாதேவை தக்ஷிணை கேட்கவில்லை· அவரும் கொடுப்பதற்குத் தயாராய் இல்லை. ஒரு மார்வாடிப் பெண் பழம் வேண்டுமென்று ஆவல்கொண்டு பாபாவை "ஆரஞ்சி பாபா, ஆரஞ்சி, பாபா" என மன்றாடினாள். தாதே விடுதியில் சில ஆரஞ்சிப் பழங்களை தனக்கு வேண்டுமென்று வைத்து விட்டு மிகுதியை மட்டும் கொண்டுவந்திருந்தார் என்று பாபாவுக்குத் தெரியும். ஆகையால் விடுதிக்குப்போய் பழத்தை கொண்டு வரும்படி தாதேயிடம் சொன்னார். தாதே பழம் தனக்குப் பலஹாரத்திற்காக வேண்டுமென்று சொல்லியும், பாபா அவர் வேண்டு கோளுக்கிணங்கவில்லை. பாபா மேலும் வற்புறுத்திக் கேட்கவில்லை.

நாங்கள் அங்கே யிருக்கையில் என்னிடத்திலும் என் குடும்பத்தாரிடத்திலும் பாபா அதிக அக்கரை காட்டினர். H. S. தீக்ஷதரும், ஜோகும், தாபோல்கரும் இருக்கும் பொழுது "நான் இந்த மனிதன் வீட்டிற்கு சாப்பாட்டிற் காகப் போயிருந்தேன். எனக்கு அவன் வெண்டைக்காய்கரி போடவில்லை," என்று என்னைக் காட்டிச் சொன்னர். உடனே 1909-ல் என் சகோதரனுக்கு ஆபரேஷன் ஆனசமயத்தில் ஒருஸாது வந்து எங்கள் வீட்டில் சாப்பிட்டது ஞாபகம் வந்தது. எங்களுக்குக் கூடத்தெரியாமல் 1909-ல் கூட ஏதோவொரு சாதுவின் உருவத்தில் வந்து பாபா எங்கள் க்ஷேமத்தில் அக்கரை கொண்டிருந்தார் என்று உறுதியாய்த் தெரிந்தது. அந்தச் சமயத்தில் வந்த சாதுவுக்கு என் அண்ணி வெண்டைக்காய்கரி போடாமலிருந்ததைப் பற்றி மற்றவர்களுக்குச் சொன்னேன். அந்த சாது உருவமும், ஸாயி பாபா உருவமும் வெவ்வேறு. மிகவும் வித்யாசப் பட்டன. டஹாணுவில் ஆபரேஷன் ஆனபிறகு இரண்டு மூன்று தினங்கள் நான் அந்த சாதுவைப் பார்த்தேன். அவரை நெருங்கப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் டஹாணுவை விட்டுப் போனர். அதன் பிறகு நான் பார்க்கவே இல்லை.

ஜாதி, உருவம், முதலியவற்றில் மாறுபாடு இருந்த போதிலும் தான் அந்த சாதுவில் இருந்ததாக பாபா 1912-ல் சொன்னர். அந்த சாது ஒரு ஹிந்து. கொஞ்சம் கறுத்த நிறம். பாபாவின் தாடிபோல் இல்லாமல் மிகப் பெரிய தாடி இருந்தது. அவர் பாபாவைப் போலில்லாமல் உங் களை (B. V. N. Swami) போல் இருந்தார்.

என் பரீக்ஷை முடிவு எப்படி ஆகும் என்று நான் பாபா வைக் கேட்டேன். அவர் "அல்லா மாலிக் ஹை" அதாவது,

"கடவுளே எஜமான்" என்று சொல்லி தமது திருக்கரத்தை என் சிரசின்மேல் வைத்தார். அந்தப் பரிக்ஷையில் நான் தேறினேன். இந்த முதல் தடவையில் எனக்கு பாபாவிடம் உண்டான நல்ல எண்ணம் எல்லாம் கடைசி தினத்தில் கறைந்து போகும்போல் இருந்தது. அன்று காலையில் பாபா வெகு கோபமாய் சீரிக்கொண்டிருந்தார். காரணமோ விளங்கவில்லை. மசூதியில் இங்கும் அங்கும் குதித்துக் கொண்டிருந்தார். கண்கள் சிவந்தன. பதினைந்து நிமிஷம் அங்கிருக்கிற ஒவ்வொருவரும் நடுங்கினர். அவரருகில் செல்ல ஒருவருக்கும் துணிவில்லை. "பாபா பைத்தியம்" என்று ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னது நிஜமோ என்று பயந்தேன். கடைசியில் பாபா சமாதானம் அடைந்தார். சீர்டியை விட்டுப்போக அனுமதி வேண்டும் என்று நாங்கள் பாபாவை நெருங்கிக் கேட்டோம். அவர் எங்களுக்கு உதியும் அனுமதியும் கொடுத்தார். 1912-ல், நான் கேளாமலே மற்ருெரு ஆசீர்வாதம் செய்தார். நான் அப்பொழுது டஹாணுவில் வேலையிலிருந்தேன். வெளியூர்களிலிருந்து பம்பாய்க்கு மாற்றிக் கொள்வது சுலபமல்ல. 1912-ல் பாபா, "பம்பாய்க்கு வேலைக்குவா" என்ருர். 1913ல் அவர் சொன்னது பலித்தது. பம்பாயின் மஜராவாகிய பண்ட்ராவுக்கு நான் மாற்றப்பட்டேன்.

மாம்லத்தாரிடம் அனுமதிபெருமல் வந்தாயே என்று பாபா சொன்னுரல்லவா? என் எஜமானுயிருந்த B. V. தேவ் என்பவர் அதைக் கவனித்துக் கேட்டார். ஆனுல் கடவுள் செயலாய் அவர் "இனி இந்த மாதிரி செய்தால் தண்டிக்கப் படுவாய்" எனச் சொல்லி விட்டு விட்டார். அவ்வளவு தான். பிறகு பல தடவை சீரடிக்குப் போனேன். ஒரு சமயம் (1913-ல்) நான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஹரிபாவ் M. பான்ஸே என்னைச் சந்தித்தார்.

பணத்தைக் கையாடியதாக அவருக்கு ஜயில் தண்டனை விதிக்கப்பட்டு அப்பீலில் ஜாமீன்பேரில் வந்திருந்தார். அந்நாளோ மறுநாளோ அப்பீல் விசாரணை. அதற்காகபோய்க்கொண்டிருந்தார். "எனக்காக பாபாவை வேண்டிக்கொள். ஒரு பாபமும் நானறியேன். கஷ்டத்தில் இருக்கிறேன் என்றும் அவரிடம் சொல்" என்றார். சீர்டிக்குப் போனேன். நான் சொல்வதற்கு முன் பாபாவே அதைப்பற்றிப் பேசினார். பாபா வெகு கோபமாய் இருந்தார். அதன் மத்தியில் என்னை நோக்கி "அவன் ஒன்றும் கவலைப்படவேண்டாம் அப்பீலில் விடுதலையாகும் என்று அவனிடம் சொல்" என்றார். நான் ஊருக்குத் திரும்பியதும் பான்ஸேவைச் சந்தித்தேன். பாபா பதில் சொன்னதை அவரிடம் சொன்னேன் அப்பொழுது அவருக்கு அப்பீலில் விடுதலையாய் விட்டது. அச்சமயம் நானும் மற்றவர்களும் சீர்டியில் இருக்கும்பொழுது "பைத்தியங்களை நம்பக்கூடாது" என்று பாபா பொதுவாகச் சொன்னார். நுட்பமாயில்லாத இந்த வக்கணையை அவர் என்னை உத்தேசித்துச் சொன்னதாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால் 1914-ல் நடந்த சம்பவத்தினால் அது எனக்குக் கொடுத்த எச்சரிக்கையென்று விளங்கிற்று.

1914-ல் டஹாணுவில் நான் கஜானா அதிகாரியாக இருந்தேன். நான் ஸாயி பாபாவின் போட்டோவையும் மற்ற தேவதைகளையும் பூசைசெய்து கொண்டு வீட்டில் இருந்தேன். இராமகிருஷ்ண பலவந்த பான்ஸே என்ற ஒருவன் கொஞ்சம் சித்தப் பிரமையுள்ளவன் என் பூஜையறைக்குக் கொஞ்ச தூரத்தில் வாசற்படியில் நின்று கொண்டிருந்தான். திடீரென்று அந்த மனிதன் என்மேல் பாய்ந்து இரண்டு கைகளாலும் என் கழுத்தைப் பிடித்தான். "நான் உன் இரத்தத்தைக் குடிப்பேன்" என்று சொல்லிக்கொண்டு, ஆ என்று

திறந்த வாயால் என் தொண்டையைக்கவ்வ முயன்றான். உடனே ஒரு கையால் அவனுடைய வாயில் என்கையையும் உத்தரணியையும் திணித்தேன். அந்த உத்தரணி அவன் தொண்டையில் குத்திற்று. அவன் பற்களால் என்விரலைக் கடித்துக் கொண்டிருந்தான். மற்றொரு கையால் அவன் கையில் இருந்து என் கழுத்தை விடுவித்துக் கொள்ளப் பார்த்தேன். என் நினைவு தப்பிப்போய் விட்டது. அதற்குள் என் தாயாரும் மற்றவர்களும் வந்து என்னை விடுவித்தார்கள். கொஞ்சநேரம் கழித்து சிகிச்சைகள் செய்தபின் நினைவு வந்தது. அவன் நகங்கள் என் கழுத்தில் பதிந்திருந்தன. என் விரல்களிலுள்ள காயமும் ஆறிற்று. அடுத்த தடவை நான் சீர்டிக்குப் போனபோது, பாபா என்னை "அண்ணு சிஞ்சினீக"ருக்குக் காட்டி "அண்ணு! நான் ஒரு நிமிஷம் தாமதித்திருந்தால், இந்த மனிதன் உண்மையில் இறந்திருப்பான். அந்தப் பித்தன் கைகளால் இவன் கொரலியையே பிடித்து விட்டான். ஆனால் நான் விடுவித்தேன். என்ன செய்கிறது? என் குழந்தைகளை நான் காப்பாற்றாவிட்டால் வேறு யார் தான் காப்பாற்றுவார்?" என்றார்.

31-3-1915 மிகப் பயங்கரமான கஷ்டம் ஒன்று நேர்ந்தது. நான், சாந்தாராம் யோரேசுவர் பான்ஸே, இன்னும் சிலரும் ஒரு இரவில் அடர்ந்த காட்டு வழியாய் ரான்ஷேட் கணவாயில் போய்க்கொண்டிருந்தோம். அதில் புலிகள் இருக்கின்றன. இரவோ இருண்டிருந்தது. திடீரென்று எங்கள் எருதுகள் பயந்து பின்னிட்டுச் சென்றன. அள்ளை பக்கம் செல்லாதது தைவ வசமே. அள்ளை பக்கத்தில் மாடுகள் நகர்ந்திருந்தால் அகலமில்லாத அந்த வழியில் வண்டி, எருதுகள் நாங்கள் எல்லாரும் ஆழமான அருவியில் விழுந்து நசித்திருப்போம். வந்தகஷ்டம் இன்னதென்று தெரிவிக்க

சாந்தாராம் முன்பக்கம் கைகாட்டினூர். வழியில் ஒரு புலியின் கண்கள் பளீர் என்று பிரகாசித்தன. அது பதுங்கிக் கொண்டு எங்களைப் பார்த்துக்கொண்டிருந்தது. வண்டி பின்னுடி போய் அருவியில் விழாமல் தடுப்பதற்கு பான்ஸே கீழே இரங்கி ஒருகல்லை சக்கரத்திற்கு முட்டு வைப்பதற்காக என்னை எருதுகளின் தலைக்கயிற்றைப் பிடித்துக் கொள்ளச் சொன்னூர். நான் அதைப் பிடித்துக்கெண்டு, "ஏ ஸாயி பாபா ஓடிவா" என்று உரக்கச் சொன்னேன். மற்றவர்களும் இரைச்சலிட்டார்கள். புலிக்கு கிலிபிடித்து வண்டி ஓரமாய் ஓடிப்போயிற்று. பாபா விடம் உள்ள என் நம்பிக்கையும் அவர் பெயரைக்கூப்பிடும்படியான எனக்கு உண்டான தைரியமும் அச்சமயம் ரக்ஷைபுரிந்தன.

அதற்குப் பிறகு 1915-ல் நான் சீர்டிக்குப் போனேன். ஸ்டேஷனில் V. S. சாமந்தர் என்கிற ஒருவர் ஒருதேங்காயும் இரண்டு அணுவும் என்னிடம் கொடுத்து பாபாவுக்கு கற்கண்டு முதலியவை வாங்கிக் கொடுக்கச் சொன்னூர். நான்போய் பாபாவைக்கண்டு வணங்கினேன். தேங்காயைக் கொடுத்தேன். ஆனூல் இரண்டணுவைப் பற்றி முற்றிலும் மறந்தேன். நான் திரும்பிப் போவதற்கு அனுமதி கேட்டேன். "சரி, சித்தளி வழியாகப்போ. ஆனூல் என் இரண்டணுவை ஏன் வைத்துக் கொண்டிருக்கிறுய்" என்றூர். உடனே எனக்கு ஞாபகம் வந்தது. அதைக் கொடுத்து விட்டேன். மறுபடியும் நான் போய்வர அனுமதி கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டு "நீ இப்பொழுது போகலாம். நீ எது ஏற்றுக்கொண்டாலும் சரியாகச் செய். இல்லாவிட்டால் ஒன்றையும் ஏற்றுக்கொள்ளாதே" என்றூர்.

ஒருசமயம் நான் சீர்டியில் இருந்தபொழுது சங்கராராவ் அங்கே வந்தார். பாபா அவரை பதினூறு ரூபாய் தக்ஷிணை

கேட்டார். அவர் பணம் இல்லை என்றார். கொஞ்சம் பொறுத்து பாபா அவரை 32 ரூபாய் கேட்டார். மறுபடியும் அதே பதிலைச் சொன்னார். கொஞ்ச நேரம் பொறுத்து பாபா 64 ரூபாய் தக்ஷிணை கேட்டார். அப்போழுது நாங்கள் அவ்வளவு பெரியதுகைகொடுக்கக் கூடிய பணக்காரர்களல்ல என்றோம். அப்பொழுது அந்தப்பணத்தை வசூல்செய்து கொடு என்றார். அது வருப்காலக்குறி என்று ஏற்பட்டது. சில நாள் கழித்து பாபாவுக்கு வியாதி பீடையால் தேஹா பாயம் வரும் என்று பக்தர்கள் பயந்து ஒரு "ஸப்தாஹம்" நடத்தினர். அதில் வந்தவர்களுக் கெல்லாம் பெரிய விருந்திடவேண்டி அதற்குப் பணம் வசூல் செய்யும்படி தாபோல்கர் சொல்லவே, சங்கராராவும் நானும் கையில் உண்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டோம். அப்பொழுது வசூலானது சரியாக 64 ரூபாய் ஆயிற்று.

ராவ்ஜி சகாராம் வைத்தியர் மகன் "மோரு" வுக்கு பிளேக் ஜுரம் வந்தது. நான் அவனுக்கு பாபாவின் உதியை யனுப்பியதில் உதியால் ஜுரம் அடங்கிற்று.

என் தகப்பனருக்குக் கொஞ்சம் வைத்தியம் தெரியும். பரசுராம் அப்பாஜி நாச்சினே என்றவருக்கு வெகுகாலம் வியாதி. என் தகப்பனரும் மற்ற வைத்தியரும் அவர் பிழைப்பதரிது என்றார். ஆனல் அவர் அருகில் பாபாவின் படத்தை மாட்டி, அதற்கு எதிரில் அகண்ட நெய்விளக்குப் போட்டு ஊதுவத்தி கொளுத்தினர்கள். இடைவிடாது வேண்டிக் கொண்டு ஜபங்கள் செய்ததில் அவர் தேகசுக மடைந்தார்.

நானும் S. B. வைத்தியாவும் 1915-ல் பாபாவிடம் போனேம். வைத்தியா வெள்ளிப் பாதுகை ஜதை ஒன்றை பாபாவிடம் கொடுத்தார். அதைத் திரும்பப்பெற்று பூசைக்கு வைத்துக்கொள்ள அவருக்கு எண்ணம். ஆனல் பாபா

அவற்றை எனக்குக் கொடுத்து விட்டார். நான் அவை வைத்தியாவுக்கே போகவேண்டும் என்று அவரிடம் கொடுத்தேன். ஆனால் மாதவராவ் தேசபாண்டே குறுக்கிட்டு அவற்றை எனக்கே திருப்பிக் கொடுத்தார். வைத்தியாவிடம் வேறு ஜதை வெள்ளிப் பாதுகை இருந்தது. பாபாவே அதை வைத்தியாவிடமிருந்து வாங்கி எனக்கே கொடுத்தார். "இதை வைத்துப் பூஜைசெய்" என்றார். வைத்தியாவின் சொத்து அவருக்கே சொந்தம் என்றேன். பாபா, "இப்பொழுது அதை வைத்திரு. கொஞ்சநாள் பொறுத்து அவருக்கு அதைக் கொடுக்கலாம்" என்றருளினர். அப்பொழுது அதை நான் வைத்துக் கொண்டேன். கொஞ்சநாள் பொறுத்து வைத்தியாவுக்கு ஒரு ஜதையைக் கொடுத்தேன்.

ஒரு சமயம் அதியாசாரத் திமிரை பாபா ஒழித்தார். 1915-ல் மே மாதம் என் மாமியார் முதலியவர்களுடன் சீர்டிக்குப் போனேன். நாங்கள் ஸாடே கட்டடத்தில் (இப்பொழுது அது கைமாறி நவால்கர் கட்டடமாகிவிட்டது) தங்கினோம். அதில் ஒரு பாகத்தில் ஸாடேவுடைய மாமனாராகிய தாதா கேல்கர் வசித்துக்கொண்டிருந்தார். என் மாமியார், வெங்காயம் நறுக்கிக் கொண்டிருந்தபொழுது வைதீக பிராமணராகிய கேல்கருக்கு வெறுப்புண்டாகி என் மாமியாரைக் கோபித்துக் கொண்டார். கொஞ்சநேரங் கழித்து தாதாவின் பேர்த்தி கண்ணில் வலி என்று கத்திக்கொண்டிருந்தாள். அவர் பாபாவிடம் மருந்துக்குப் போனார். அப்பொழுது பாபா கண்ணுக்கு வெங்காய ஒத்தடம்போடச் சொன்னார்.

தாதா நான் வெங்காயத்திற்கு எங்கே போவது? என்றார். பாபா எப்பொழுதும் கொஞ்சம் வெங்காயம் வைத்திருப்பார். அவரிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம் என்று தாதா நம்பினர் போலும். ஆனால் ஸமத்வமுள்ள நியாயஸ்தரல்லவா

பாபா! தாதாவைப் பார்த்து இந்த தாயியைக் கேட்டு வாங்கிக்கொள் என்று என் மாமியாரைக் காட்டினார். அன்று காலையில் தான் வெங்காயம் உபயோகப் படுத்தியதற்காக தாதா தன்னைத் திட்டினதாயும் திட்டினவருக்கு வெங்காயம் கொடுக்க விருப்ப மில்லாவிடினும் பாபா உத்தரவிட்டால் கொடுப்பதாகவும் அவள் சொன்னாள். பாபா கொடுக்கும்படி சொன்னார், கொடுத்தாள். இதனால், தீதியற்றினோர்க்கு நன்மைசெய்யும் பாக்கியம் அவளுக்குக் கிடைத்தது.

அதே வருஷத்தில் எனக்கு சந்ததி யுண்டாகவேண்டும் என்று என் மாமியார் பாபாவை வேண்டினாள். அதற்குமுன் சிலகுழந்தைகள் பிறந்திருந்தன. ஆனால் அவை அல்பாயிஸாய் சிறு வயதிலேயே இறந்தன. என் மாமியார் வேண்டுகோள்படி மாதவராவ் தேசபாண்டே என் மனைவியை பாபாவிடம் அழைத்துப் போனார். அவளுடைய முந்தானையில் ஒரு தேங்காயைப் போடும்படி பாபாவை வேண்டினார். பாபா போட்டார். அவளிடம் தேங்காயைக் கொடுக்கும் பொழுதே பாபாவின் கண்களில் நீர் ததும்பியது. தமது காலடியில் உட்கார்ந்து காலைப் பிடிக்கும்படி பாபா என்னிடம் சொன்னார். நான் காலைப் பிடித்தேன். என் முதுகை அன்புடன் தடவினார். பைத்தியக்காரனால் உயிர் இழந்து போகாமல் என்னை காத்ததற்கு என்நன்றியறிவைச் சொன்னேன். அந்தச் சமயம் பாபா படம் என்னிடம் இருந்ததினால் பிழைத்தேனென்றேன். அப்பொழுது பாபா "அல்லா மாலிக் ஹை" அதாவது கடவுள் பிரபு, அவரே எல்லாவற்றையும் செய்விக்கிறார் என்றார். பிறகு நானும் பாபாவும் ஒருவரை ஒருவர் கட்டியணைத்துக் கொண்டோம்.

இன்னொரு முறை பாபா தன் பக்தர்களிடத்தில் எவ்வளவு கருத்துள்ளவராய் இருக்கிறார் என்று காட்டினார். ஒரு

பக்தன் மற்றவனைத் துன்பப் படுத்துவதாவது அவன் விஷயத்தில் தலையிடுவதாவது அவருக்குப் பிடிக்காது. ஒருநாள் பாபா, "என் வயிறு வலிக்கிறது" என்றார். 'மாவுஸி' என்ற பலமுள்ள பெண்பிள்ளை ஒரு பழுக்கக்காய்ந்த செங்கல்லை எடுத்து வந்தாள். அவருடைய அங்கிக்கு மேலாக அடிவயிற்றின்மேல் வைத்தாள். பத்து நிமிஷநேரம் அவள் அதை அங்கேயே வைத்திருந்தாள். நான் அப்பொழுது பாபா காலைப் பிடித்து விட்டுக்கொண்டிருந்தேன்; பாபாவுக்காக மிகவும் வருந்தினேன். அவள் செய்வது பட்சத்துடன் கூடிய கொடுமை என்று நினைத்தேன். பிறகு அவள் கல்லை எடுத்துவிட்டு பாபாவின் பக்கங்களில் அழுத்திப் பிடிக்க ஆரம்பித்தாள். எனக்குப் பொறுக்க முடியவில்லை நான், 'பாபாவுக்குக் கஷ்டமாக இருக்கும், சற்று மெதுவாகப் பிடி' என்றேன். உடனே பாபா என்னை வெளியே போகச் சொன்னார். நான் போய்விட்டேன்.

அன்றிரவு எட்டு மணிக்கு நான் மசூதிக்குப் போய் எனக்கு ஏதாவது அனுக்ரகம் (அதாவது மந்திரோபதேசம் முதலியன) செய்யவேண்டும் என்று கேட்டேன், நான் என்ன ஜபம் செய்யட்டும்" என்றுகேட்டேன். பாபா, "தேவபுரம் போய் உன் முன்னோர் பூசைசெய்த கற்களைப் பூசைசெய்" என்றார்.

கொஞ்சநாள் கழித்ததும் நான் டஹாணுவுக்கு வந்தேன். பாபா சொன்ன பேச்சின் அர்த்தம் என்ன என்று என் தகப்பனாரைக் கேட்டேன். அப்பொழுது எங்கள் முன்னோர் தேவபுரத்தில் பூசைசெய்து வந்ததையெல்லாம் அவர் எனக்குச் சொன்னார். "பாபா பிரயாக்" என்பவர் எங்கள் வம்சத்தில் ஐந்து தலைமுறை முந்தியவர். அவருக்கு 60 வயதாகிறவரையில் பிள்ளை இல்லை. பாபா பகவத்

என்ற ஏகநாத் மகாராஜின் சிஷ்யருடைய அனுக்ரகத்தால் பிள்ளைகளுண்டாகும் என்று தெரிந்து கொண்டார். பாபா பகவத் நிவிருத்தி நாதர் கோவிலுக்குப் போகிற சமயங்களில் அபூர்வமாக அவரைத் திரியம்பகத்தில் பார்க்கலாமாம். பாபா பிரயாக் அங்கு போய் அவருடைய அருளைப் பெற்றதில் அவருடைய 61 வது வயதில் அவருக்கு ஒரு மகன் பிறந்தான். கிருஷ்ணராவ் என்று அக்குழந்தைக்குப் பெயர் வைத்தார். அந்த குழந்தை ஒரு வருஷமான வுடன் அதை தேவபுரத்திற்கு அழைத்துப்போனர். குரு பாபா பகவத் அதன் கையில் ஞானேசுவரியின் கையெழுத்துப் பிரதி ஒன்றைக் கொடுத்தர். அந்தப் புத்தகம் இன்னும் குடும்ப பொக்கிஷத்தில் வைக்கப்பட்டு வருகிறது. அதை எடுக்கும்போதெல்லாம் சுபசகுனமாகும். [Note: அந்த புத்தகத்தை இவ்வாசிரியர் B. V. N. சுவாமிமுன், ஸ்ரீ நாச்னே எடுக்கும் பொழுதும் தெருவில் பாட்டுக் கேட்டது.] அந்தப் பிரதியை வெளியிலெடுக்கும் பொழுதெல்லாம் ஏதாவது சுபசகுனம் உண்டாகும். அதுமுதற்கொண்டு எங்கள் வம்சத்தில் ஒவ்வொருவரும் அந்தகுருவின் பரம்பரையிலுள்ளவரிடம் உபதேசம் பெறுவது வழக்கம். இந்த உண்மையைத் தான் பாபா எனக்குச்சொன்னர். அந்தச் சமயத்தில் இநத உண்மையெல்லாம் எனக்குத் தெரியாது. பாபா சொன்னதைத் தகப்பனரிடம் சொன்னதுமே அவர் இதை யெல்லாம் எனக்குத் தெரிவித்தார்.

1916-ல் பாபாவின் அருளால் நான் தண்ணீரில் முழுகிச் சாகாமல் தப்பினேன். டஹாணுவில் பிளேக் இருந்தது. என் வீட்டுக்கும் ஆபீஸுக்கும் மத்தியில் ஒரு நீர்ப் பரவலை (creek) படகில் தாண்டுவது வழக்கம். ஒருநாள் அதிக நேரங் கழித்து ஆபீஸிலிருந்து வந்தேன், படகு இல்லை. அப்பொ

ழுந்து ஒரு பையனுடன் ஒரு சிறு தோணியில் ஏறிவந்தேன். மத்தியில் வரும்பொழுது அது கவிழ்ந்தது. கொஞ்சம் தான் நான் அசைந்தேன். இருந்தாலும் அது கவிழ்ந்து விட்டது. அது கவிழ்ந்ததுமே நான் ஸாயி பாபாவைத் தியானஞ்செய்தேன். தோணியைத் தள்ளினபையன் நன்ருய் நீந்துவான். கெட்டிக்காரன். ஒரு கப்பல் சற்று தூரத்தில் இருந்தது. ஒருகயிறு அதை மிதப்பில்கட்டி யிருந்தது. பையன் என்னை அந்தக் கயிற்றைப் பிடித்துக்கொள்ளச் சொன்ஞன். அதைப் பிடித்துக்கொண்டு என்தலையைத் தண்ணீருக்குமேல் வைத்துக்கொண்டிருந்தேன். பையன் கப்பல்காரரைக் கூவி யழைத்தான். அவர்கள் ஒரு படகை யனுப்பி எங்களைக் காப்பாற்றினர்.

1919-ல் எனக்கு ஒரு பிள்ளை பிறந்தது. பாபா என் மனைவிக்குக் கண்ணீர் வடித்துக்கொண்டு ஆசிர்வதித்துத் தேங்காய் கொடுத்தா ரல்லவா. அதன் பிறகு பிறந்த பிள்ளை இதுதான். அவனுக்கு "காலுராம்" என்று பெயரிட்டோம். காலுராம் எட்டு வயதுதான் இருந்தான். பாபா அழுததற்கு காரணம் அவனுடைய வாழ்க்கையைச் சொன்ஞல் விளங்கும். அவன் மூலம் நக்ஷத்திரத்தில் பிறந்தான். அவனுக்கு மூன்று வயதே யானதும் அவன் "ராம் ஹரி ராம்" என்று ஜபம் பண்ணிக்கொண் டிருந்தான். அப்பொழுதே அவன் தாய் இறந்தாள் மூலநட்சத்திரத்தின் பலன் தெரிந்தது. பாபாவின் கருணை ததும்பும் மனதில், பிள்ளை மூலநட்சத்திரத்தில் பிறக்கும், அவன் தாய் இறப்பாள் என்று தெரிந்ததால் தானவர் கண்ணீர் ததும்பிற்று, இருந்தாலும் தெய்வபக்தியுடைய ஒரு குழந்தை பிறந்ததை நினைக்க அந்த துக்கம் குறையும் அல்லவா? ஆனல், பின்னல் நடந்ததைக் கவனிக்கலாம். அவனுடன் பழகிய எல்லாரும் அவனைப்பற்றி வெகுவாக மதித்

தனர். ஈசுவர பக்தியும் அதிக படிப்பும் உடையவர் ஹெட்கே என்பவர். அவர் அந்தக் குழந்தையைக் கவனித்து தயிர்ப் பானையைத் திருடுவதற்கு கிருஷ்ணன் எந்தப்பையன் முதுகில் ஏறினரோ அப்பையனுடைய அவதாரம் இவன் என்ருர். அந்தப் பையனே சில சமயம் சொல்லுவான். கிருஷ்ணன் என்னைத் துன்பப் படுத்துவான். நான் ஹரியின் காலைப் பிடித்துக் கிள்ளினேன். நான் நிமிர்ந்து பார்த்தேன். என் தோள்மேலிருந்த ஹரி தயிர்ப் பானையை என் முகத்தின்மேல் கவிழ்த்தார். அப்பொழுது வீட்டுக்காரி வந்தாள், என்பான் காலுராம். ஹெக்டே ஹரிவிஜயம் படிப்பது வழக்கம். அந்தப் பையன் அவர் அந்தந்த தினத்தில் எந்தப்பாகம் அல்லது கதைபடிக்கப் போகிருர் என்று முன்னுடியே சொல்லுவான். அவன் ஒரு நாள் தலையையும் முகத்தையும் துணியால் மூடிக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான். யோகத்தில் இருப்பவனைப்போல அசையாமல் அவன் உட்கார்ந்திருந்தான். அவன் கருவிழிகள்மேல் நோக்கி மறைந்தன. ஆனல் அவன் தலையிலிருந்த துணி அதை மறைத்திருந்தது. நான் துணியைத் தூக்கி ஏன் இந்தமாதிரி உட்கார்ந்திருக்கிருய் என்று அவனைக் கேட்டேன். அவன் எப்பொழுதும் அந்தமாதிரிதான் செய்து கொண்டிருப்பதாகச் சொன்னன். ஏன் இந்த சாதனை செய்கிருய் என்று கேட்டதற்கு அவன் சிரித்தான். அவனுடைய வயதிற்கு மீரிய அறிவைக் கண்டு நான் அதிகம் ஆச்சரியமடைந்தேன். ஒருசமயம் ஸந்தேசம் என்ற சஞ்சிகையின் அந்த மாதப் பதிப்பை வாங்கிவரச் சொன்னன். அதை வாங்கியதும் அதில் பிரணவத்திற்குள் ஸ்ரீ கிருஷ்ணர் படம் இருக்கக்கண்டான். காலு அந்தப் படத்தைக் கத்தரித்துச் சுவற்றில் ஒட்டினன். கிராமபோனுக்கு எதிரில் நாய் உட்கார்ந்தமாதிரி 'His Master's

Voice) ரிகார்டுகளின் விளம்பர படம் அதில் இருந்தது. காலு அதைப்பற்றி விசாரித்தது அவன் நிலைமைக்குச் சான்ருகும்.

காலு:—இது என்ன?

நான்:—அது கிராமபோன் விற்பனை விளம்பரம்.

காலு:—இல்லை, கிருஷ்ணன் அனுப்பிய தூது.

நான்:—என்ன தூது?

காலு:—நாய் எதைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

நான்:—அந்தப் பிளேட்டிலுள்ள பாட்டை.

அவன்:—நாய், எஜமானன் குரலைக் கேட்கிறது. நாய் தலையிலிருந்து வால் வரையில் அசையாமல் உட்கார்ந்து கவனிப்பதைப்பார். நாமும் அதைப் போல் திடமாக அசையாமலிருக்கவேண்டும். நான் எப்படி உட்காருகிறேன் பார். நீயும் அப்படி உட்கார்ந்து கவனிக்கவேண்டும். அப்பொழுது பாபாவின் குரல் கேட்கும்.

நான்:—பாபா குரல் உனக்கு * எப்படித் தெரியும்?

அவன்:—எனக்குத் தெரியும் நான் உனக்குச் சொல்ல மாட்டேன்; நீயே அதையனுபவித்துப்பார்.

வாயினுல் 'ராம்ஹரிராம்' என்ற மந்திரத்தை ஜெபஞ் செய்ததோடிராமல் லக்ஷக் கணக்காய் அந்த மந்திரத்தைக் கடுதாசியில் எழுதிவந்தான், அந்தக்கடிதங்கள் எங்களிடம் இருந்தன. உபாஸனிபாபா ஆந்தேரிக்கு வந்தபொழுது அந்தக் கடிதங்களைக் கேட்டார். அவற்றை அவரிடம் நாங்கள் கொடுத்தோம். 1924ல் காட்கி பாபா இந்தப் பையனைப் பார்க்க எங்கள் வீட்டிற்கு வந்தார்.

---

* அதாவது பாபா சமாதி யடைந்த பிறகு பிறந்த உனக்கு

1928 ல் காலுவுக்கு வீக்கமும் கொஞ்சம் சுரமும் வந்தது. பாபாவின் உதியையே கொடுத்தோம். நோய் தீரவில்லை. கார்த்திக சுத்த ஏகாதசி பண்டரிபுரம் முதலிய விஷ்ணு ஸ்தலங்களில் விசேஷமாகக் கொண்டாடப் படும். அந்த தினத்தில் காலுராம் தன் முடிவை நெருங் கினான். அவன் என்னைப் படுக்கையண்டை யழைத்து ஞானேஸ்வரி வேண்டுமென்று கேட்டான். அதைக் கொண்டு வந்தோம். அவனே அதைத் திறந்து பதின்மூன்றுவது அத்தியாயத்தை எடுத்தான். அந்தச் சமயம் அப்பேர்ப்பட்ட பிள்ளையைப் பிரியவேண்டி யிருக்கிறதே என்று அதிகம் வருந்திக் கொண்டிருந்தேன். ஆனால் காலு, எதற்காக அழு கிறது. இதைப் படி, உரக்கப் படி, நான் இன்று போகிறேன். என்று என்னை உற்சாகப்படுத்திக் கொண்டு பேசினான்.

என் மனம் துக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது. என்னால் படிக்க முடியவில்லை. அப்பொழுது அவன் புத்தகத்தை எதிரில் வைத்துக்கொண்டு கண்ணை மூடிவிட்டான். கார்த்தீக ஏகாதசி யன்று உயிர் நீத்தது அவன் புண்ணிய வாழ்க் கைக்குச் சரியான முடிவு இது. அந்த அகாலமரணம் மிக்க பரிதாபமாயிருந்தது. அந்தச் சிறந்த உயிர் இளமையிலேயே பிரியப்போவதை யறிந்தே பாபா 1918 ல் தேங்காயைக் கொடுக்கும் பொழுது கண்ணீர் சொறிந்தார்.

எனக்கு ஸந்ததியில்லாமல் போகவில்லை. பாபாவின் அருளால் குடும்பம் விருத்தியாய் வருகிறது. அதாவது முதல் மனைவி இறந்த ஒரு வருஷத்திற்குள், 1922 ல், என் பெற்றோர் இரண்டாம் விவாகத்திற்கு ஏற்பாடுசெய்து கொண்டிருந்தனர். கொஞ்சம் பணத்தோடு வரும் ஒரு பெண்ணை நல்லதா அல்லது ஏழைப் பெண் நல்லதா என்ற யோசனை செய்தார்கள். ரூ. 600 பணத்துடன் வருகிற

ஒரு பெண் சிலாக்யமென என் தகப்பனுர் எண்ணினுர். எனக்கு அது சம்மதமாயில்லை. பாபா என் தாயின் கனவில் வந்து, "இந்தப் பெண்ணை உன் பிள்ளைக்குக் கலியாணம் செய்து கொள்ளாதே" என்ருர். அதே கனவில் என் தாய் வேெருரு பெண்ணைப் பார்த்தாள். கொஞ்சகாலங் கழித்து ஒரு ஏழைப் பெண்ணின் சிரியதகப்பன் அந்தப் பெண்ணை எனக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாகச் சொன்னுர். என் தாயார் அப்பெண்ணைப் பார்த்தாள். கனவில் கண்ட பெண்ணே அவள், என்று தெரிந்ததால் அதில் ஆக்ஷேபணை ஒன்றுமில்லை. அந்தப் பெண்ணை 1922ல் கலியாணம் செய்து கொண்டேன். எனக்கு அநேக பிள்ளைகள் பிறந்தன. எல்லாம் பாபா அருளால் சௌக்கியமாக இருக்கின்றன. "பாபா அருள்" என்பது வெறும் பேச்சல்ல. அவர் எப்படி அவர்களுடைய உயிரைக் காப்பாற்றியிருக்கிருர் என்பதற்கு சில உதாரணங்களைக் காட்டுகிறேன்.

1926ல் என் மகன் ஸாயிநாத் என்கிற ஹரேசுவர் எட்டு ஒன்பது மாதத்துக்குழந்தை. காலுராம் சீனுவெடியும் மத்தாப்பூவும் வைத்திருந்தான். என் குழந்தைகளில் ஒன்று கொளுத்தின மத்தாப்பை எறிந்தது. அது ஸாயிநாத் மேலே விழுந்து அவன் துணி நெருப்புப் பிடித்தது. அவன் இடுப்பில் ஒரு துணியும் சொக்காயும் போட்டுக் கொண்டிருந்தான். இரண்டும் நெருப்புப் பிடித்தன. குழந்தைகளுக்கு அதனுல் ஆபத்து எனத் தெரியவில்லை; கத்தாமலிருந்தன. என் மனைவி ஏதோ வேலையாய் வெளியில் இருந்தாள். திடீரென்று ஒரு பக்கிரி அவள் முன் வந்து மாடியைச் சுட்டிக்காட்டி "அங்கே என்ன நடக்கிறதென்று பார்" என்ருர். என் மனைவி உடனே உள்ளே போய்க் குழந்தை துணியில் நெருப்பைப் பார்த்தாள். அவள் தைரியமாயும் சாமர்க்கிய

மாயும் குழந்தையிடம் ஓடி துணியைக் கையில் சுருட்டிக் கசக்கி ஒரு நொடியில் தீயை யணைத்தாள். அடியிலிருந்து நுனிவரையில் சொக்காயின் முன்பாகம் எரிந்திருந்தது. உள் துணியும் கொஞ்சம் எரிந்திருந்தது, ஆனால் குழந்தைக்கு ஒரு காயமும் இல்லை. தோலுடன் ஒட்டியுள்ள சட்டை யெரிந்து விட்டிருந்த போதிலும் தோலில் கொஞ்சமும் பொசுங்கவில்லை. அடி வயிற்றிலும் புண்படவில்லை. திடீரென்று பக்கிரி வந்ததால் தான் அவன் கொஞ்சமும் ஆபத்தில்லாமல் தப்பினன். பக்கிரி திடீரென்று மறைந்து விட்டான். நெருப்பை யணைத்துவிட்டு அவள் வெளியில் வந்ததும் பக்கிரியின் தகவலையே காணோம். பக்கிரி யாராயிருக்க முடியும்? நெருப்புப் பிடித்த க்ஷணமே எப்படி பக்கிரிக்குத் தெரிந்தது? அந்தக் குழந்தையை பாதுகாத்து தாயை யழைத்து அவர் குழந்தையைக் காப்பாற்றுவானேன்?

1928 ல் ஸாயிநாதனுக்கு இரண்டு வயது. அவனுக்கு அப்பொழுது ஒரு ஆபத்து உண்டாயிற்று. வழக்கம்போல அவன் ஓடிக்கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் மாடியிலிருந்து விழுந்தான். கீழே காரை செங்கல் துண்டுகள் குவிந்திருந்தது. நான் ஓடிப்பார்க்க அவன் ஒரு காயமும் இல்லாமல் நின்று கொண்டிருந்தான். "பயப்படாதே! பாபா என்னைத் தாங்கிக் கொண்டார்" என்றான்.

1932 ல் ஸாயிநாத் அவன் தம்பியிடம் ஒரு மோதரத்தைக் கொடுத்தான். அவன் அதை வாயில் அடைத்துக் கொண்டான். தொண்டையில் போய் அந்த மோதிரம் அங்கே மாட்டிக்கொண்டது. கூக்குரலிட்டு எல்லோரும் கலவரமடைந்தனர். தொண்டையிலிருந்து அதை வெளியே தள்ள சிகிச்சைகள் செய்தனர். பலிக்கவில்லை. இந்த மாதிரி ஒரு மணியாயிற்று. நான் பாபாவின் உதியை எடுத்து அவன்

வாயில் போட்டேன். தொண்டையில் விரலை விட்டேன். மோதிரம் அங்கே இருந்தது. அதை வெளியே இழுத்தேன்.

1934 ல் வாசுதேவ் என்ற குழந்தைக்கு சின்ன அம்மையும் (pneumonia) சளி சுரமும் மார்பில் (abcess) வெடிப் புண்ணும் உண்டாயிற்று. அவன் வரவர பலவீன மடைந் தான். பலவீனத்தால் அந்தப் புண்ணை அருத்து ஆபரே ஷன் செய்ய டாக்டர் பயந்தார். ஆகையால் நானே புண் ணுக்காமல் (antiphlogistine) 'ஆன்டிபிளோஜிஸ்டின்' போட்டேன். சிரங்கு உடைந்தது. வாய் பெரிதாக இருந்தது. வைத்தியர் எனக்கு உதவமாட்டேன் என்றார். ஆகவே நான் ஸாயி பாபாவை நம்பி அவருடைய உதியைப் புண்ணில் போட்டு வந்தேன். வாசந்த் ராவ் மாதவ் ஜாதவ (இப்பொழுது பூனுவில் டிப்டிகலெக்டர்) என்ற டிப்டிகலெக்டர் அந்தப் புண் ஆறுமா? எவ்வளவு காலத்திற்குள் ஆறும்? என்றார். நான் இருபத்துநான்கு மணிநேரத்தில் ஆறும் என்றேன். அன் றிரவு பாபா என் கனவில் வந்து இருபத்துநான்கு மணி என்று ஏன் சொன்னாய்? உடனே, என்று சொல்லக் கூடாதா? என்றார். கனவிலேயே நான் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டேன். அடுத்த நாள் புண் ஆறியிருந்தது. ஜாதவ் ஆச்சரியப்பட்டார். அவருடைய நாலரை வயதுள்ள பிள்ளைக்கு (pneumonia) சளி சுரம் வந்திருந்தது. அதற்கு பாபாவின் உதியும் ஆசீர்வாதமும் வேண்டும் என்றார். குழந்தைக்கு ஜுரம் வந்து ஆறு நாளாகியிருந்தது. நான் உதியைக் கொடுத்தேன். அடுத்த நாளே ஜுரம் நின்றது. வைத்தியர் ஒன்பது நாள் ஜுரமடிக்கும் என்று சொன்னார். ஆனால் மூன்று நாள் முன்னதாகவே அந்த ஜுரம் நின்று விட்டது. ஜாதவ் ஏழு ரூபாய், ஸாயி ஸமஸ்தானத்திற்கு அனுப்பி வைத்தார்.

1935-ல் "ஸ்டவ்" அடுப்பில் பால்காய்ந்து கொண்டிருந்தது. இரண்டு வயதுள்ள ஆநந்தன் என்ற என் பிள்ளை ஓடி வந்தான். அவன் ஒரு கழியில் தடுக்கி ஸ்டவ்மேல் விழுந்தான். என்னவாகும் என்று எண்ணிப் பாருங்கள். கொதிக்கிற பாலினுல் தோல் வெந்து துணிநெருப்புப் பிடித்திருக்குமல்லவா? ஆனல் பால் ஒரு புறம் விழுந்து விட்டது. ஸ்டவ் மற்றொரு புறம் கவிழ்ந்து கிடந்தது. பையன் இரண்டுக்கும் மத்தியில் ஒரு கெடுதலும் இன்றிக் கிடந்தான்.

1936-ல் வாசுதேவனும் தம்பியும் ஒரு அலமாரியைக் கிளறிக்கொண்டிருந்தனர். அதில் பெப்பர்மிண்டைப்போல ஒரு வஸ்துவைக் கண்டார். வாசுதேவ் கொஞ்சம் தின்றான். தம்பிக்கு கொஞ்சம் கொடுத்தான். அது உருசியாயில்லை. அதனுல் அவர்கள் அதிகம் தின்னவில்லை. ஆனல் தின்றதிலிருந்தே வாசு துடிக்க ஆரம்பித்தான். நாக்கு வெளியில் தொங்கிவிட்டது. என்மனைவி விரலை அவன் வாயில் விட்டு சிறு கட்டி எடுத்தாள். அது சுண்ணும்பு என்று அவள் நினைத்தாள். அப்பொழுது வாசு மிட்டாய் என்று அவன் நினைத்த பெட்டியைக் காட்டினன். அது "பாரோஸ் ஸ்னேக்ஸ்" மிக விஷமான வஸ்து. அப்பொழுது அவனை வைத்தியரிடம் அழைத்துப் போனேம். வாந்தி பண்ண மருந்து அவர் கொடுத்தார். ஆனல் வாந்தி ஆகவில்லை. நான் பாபாவின் உதியையும் தீர்த்தத்தையும் கொடுத்தேன். உடனே அவன் எல்லாவற்றையும் வாந்திசெய்து விட்டான். இதெல்லாம் ஆனபிறகு வாசுதேவ் தன் தம்பி இரண்டுவயது குழந்தைக்கு அதைக் கொடுத்ததைச் சொன்னன். அவன் தின்றதை வாந்திசெய்ய பாபா உதியையும் தீர்த்தத்தையும் கொடுத்தோம். அவனும் உடனே வாந்திசெய்து விட்டான்.

ஒரு ஆபீஸில் உள்ள காஷியர் கஷ்டத்தில் அகப்பட்டார். ரூ. 3500 க்கு கணக்குச் சொல்ல முடியவில்லை. ஒரு நண்பன் அவரை என்னிடம் போகும்படி சொன்னன். அவன் வந்தான். அந்தக் காஷியருக்கு பாபாவிடம் வெறுப்பு. ஏனென்ருல் அவர் மகம்மதிய ரென்றெண்ணினன். ஆனல் அவன் வந்தவுடன், "நீ சரணமடைய வேண்டிய இடம் ஒன்றே, சீர்டியிலுள்ள ஸாயி மந்திரம்தான். அங்குபோய் மனமாற மன்னிப்புக் கேள். கருணையுடன் உதவிபுரிய வேண்டுமென்று மன்ருடு" என்றேன். அவன் அங்கு போய் ஸகுணமேரு நாய்க்கர் உதவியால் பாபா படத்தை வாங்கி ஸமாதியில் அதை வைத்து வணங்கினன். அதை வீட்டுக்கு எடுத்து வந்தான். அப்பொழுது வியவகாரச் சிக்கலறுந்தது. அதிகாரி அந்த ரூ. 3500-ஐத் திருப்பிக்கொடுக்க எட்டுநாள் தவணை கொடுத்தனர். அவன் அங்கும் இங்கும் போய்ப் பணத்தை யடைந்து அதைக் கொடுத்தான். அத்துடன் அந்த வியவகாரம் ஒழிந்தது. அவனை வேலையை விட்டு நீக்கவும் இல்லை. தண்டிக்கவும் இல்லை. இதுபோல இன்னுமொரு விஷயத்தில் பாபா உதவியிருக்கிருர். V. C. சிட்னீஸ் என்பவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அதன் பிறகு அவர் என்னிடம் வந்தார். ஸாயி மீது பாரத்தைப் போட்டு சீர்டிக்குப்போ என்றேன். அவர் அப்படியே செய்தார். கூடியசீக்கிரத்தில் திரும்பவும் அதேவேலை அவருக்குக் கிடைத்து விட்டது.

என் குடும்பத்தவருக்கு ஸத்கதி.

என் பெற்ருேர் ஸாயி பாபா பக்தர்கள். 1926 ல் என் தாய் இறக்கும்பொழுது அவளுக்கு எழுபது வயது. கடைசி வரையில் ஸாயி பாபாவின் படத்தை அவள் எதிரில் வைத்துக்கொண்டாள். அவள் கடைசிகாலம் நெருங்கி வருகையில்

என்னை விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை உரக்கப் படிக்கச் சொன்னாள். அவள் 'ராம், ராம்' என்று சொல்லிக் கொண்டே கண்ணை மூடினாள்.

என் இரண்டாம் மனைவி 1929-ல் மாண்டாள். என்னால் ஆனதைச் செய்து அவளுக்கு ஸத்கதி யுண்டாக்கவேண்டும் என்று நான் நினைத்தேன். ஆகையால் அவள் அஸ்தியை (எலும்பை) நாசிக்குக்கு எடுத்துப்போய் சரியான சடங்குகளுடன் அதனை அங்கே விட்டுவர நினைத்தேன். ஆனால் எனக்குப் பல கஷ்டங்களுண்டாயின. என் தகப்பனார் வியாதியாயிருந்தார். அந்த துக்கத்துடன் வேண்டிய பணத்தை எடுத்துக்கொண்டு செய்ய வேண்டியதை முடிக்க எண்ணினேன். ஒரு மூன்று வயதுபையனிருந்தான். அவனை வீட்டில் விட்டு விட்டுக் கையில் எண்பது ரூபாய் எடுத்துக்கொண்டு நாசிக்குக் குப் புறப்பட்டேன். விக்டோரியா டர்மினஸில் ரயிலேறின உடனே என்னிடம் ஒரு பிரயாணி வந்தார். வண்டி புறப்படுவதன்முன் அவர் என்னைப் பார்த்து இரக்கங்கொண்டு உதவிபுரிய ஆரம்பித்தார்.

அவர்:—நீ எங்கே போகிறாய்?

நான்:—நாஸிக்குக்கு.

அவர்:—ஏன் படுக்கை எடுத்துப் போகவில்லை? இரவுகளில் குளிரா யிருக்குமே!

நான்:—அவசியமில்லை. இவற்றையெல்லாம் கவனிக்க இப்பொழுது எனக்கு மனமில்லை. மூன்று வயது குழந்தையைவிட்டு விட்டு என்மனைவி யிறந்து எட்டுநாளாகிறது.

அவர்:—என்னைச் சற்றுக் காத்திருக்கச் சொன்னார். ஒரு நண்பரைக் கூப்பிட்டு ஒரு கம்பளியும் படுக்கை விரிப்பும் எனக்காகக் கொண்டுவந்தார்.

நான்:—இந்த வசதிகளெல்லாம் இவ்வளவு சீக்கிரம் எப்படிக் கிடைத்தன ?

அவர்:—எங்கள் விடுதிகள் சமீபத்தில் இருக்கின்றன. பம்பாய் சித்திரவேலை கலாசாலையில்தான். இந்த சிகரட்டைப் பெற்றுக்கொள்ளும்.

நான்:—(சிகரட்டை வாங்கிக் கொண்டு) உங்கள் பெயர் என்ன ? தாங்கள் யார் ?

அவர்:—நான் அந்தக் கலாசாலை வேலைக்காரன். என் பெயர் கணபதி சங்கரன். இப்பொழுது படுத்துத் தூங்குங்கள். கவலைவேண்டாம். நானும் நாசிக்குக்குப் போகிறேன். நாசிக் வந்ததும் நான் எழுப்புகிறேன்.

நான்:—நாசிக்குக்கு ஏன் போகிறீர் ?

அவன்:—சும்மா பார்ப்பதற்குத்தான். என் எஜமான் ஸிம்லாவிற்குப் போயிருக்கிறார். நாசிக்கைப் பார்க்க இந்த சந்தர்ப்பம் கிடைத்தது எனக்கு.

பிறகு நான் படுத்துக் கொண்டேன்.

க. ச.:—உங்கள் பணத்தை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பிரியமானால் நான் வைத்துக் கொள்ளுகிறேன். இந்தப் பெட்டியில் அதை வைத்து விடுகிறேன்.

அப்பொழுது 80 ரூபாயை அவரிடம் கொடுத்துவிட்டு நான் படுக்கப்போனேன். நாசிக் பக்கத்தில் கோட்டி ஸ்டேஷனில் அவர் என்னை எழுப்பினார். நாங்கள் பல்துலக்கி தேத்தண்ணீர் சாப்பிட்டோம். அவர் எனக்காகவும் காசுகொடுத்தார். நாசிக்ரோட் ஸ்டேஷனில் பஸ் ஏறினோம். அப்பொழுது,

க. ச:—புரோகிதர் (பட்ஜி) இடத்தில் நீயாகப் போகாதே உனக்காக எல்லாவற்றையும் நான் ஏற்பாடு செய்கிறேன்.

அதைப் பற்றிக் கவலைப்படாதே என்றார். பிறகு ஒரு வேலைக்காரன் கவனிப்பதைப்போல 12 வது நாள் சடங்கு முடிகிற வரையில் அவர் எல்லாவற்றையும் கவனித்து வந்தார். அந்தச் சடங்குகள் முழுவதிலும் விசேஷ அறிவைக் காட்டினார். முதலில் இராமகுண்டத்திற்குப் பிண்டத்தைக் கொண்டு போகச் சொன்னார். நான் கொண்டு வந்த எலும்புகளை இராமகுண்டத்தில் கோதாவரியாற்றில் முழுக்கி சடங்கு முடிகிற வரையில் விட்டுவிடாமல் பிடித்து வைத்துக் கொள்ளச் சொன்னார். "அந்த இடத்தில் இருக்கிற ஒரு பள்ளத்தில் எலும்புகளை வைத்து கையினால் அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவற்றை ஆற்றின் வெள்ளத்தின் வேகம் இழுத்துச் செல்லும்" என்றார். நான் வைத்திருக்கும் பொழுதே கற்கண்டுக் கட்டியைப்போல அவை என் கையின் கீழ்க்கரைந்து போய்க் கொண்டிருந்தன. அது ஒரு ஆச்சரியம். பன்னிரண்டாம் நாள் பம்பாய்க்கு உடனே வரும்படி அவருக்கு ஒரு தந்தி வந்தது. அவர் என்னிடமிருந்து வாங்கின பணத்திற்குப் பைசா கூடவிடாமல் கணக்குச் சொன்னார். நாசிக்கிலுள்ள முக்கிய கோயில்களுக்கு அழைத்துச் சென்றார். அந்தக் கோவில்களில் ஒன்றில் ஒரு சந்நியாசி அவரையடையாளங் கண்டு பிடித்தார். அவரிடம் அவர் அந்தத் தந்தியைக் காட்டினார். எனக்குப் புரோகிதம் பண்ணினவர், க. ச. வெகு கெட்டிக்காரர் என்றார். அசுபங்களுக்கு விக்கினேசுவர பூஜை வேண்டாம் என்று நினைத்து அவர் கணேச பூசையில்லாமல் எனக்குப் பண்ணி வைக்க ஆரம்பித்தார். அப்பொழுது க. ச. தடுத்து விக்கினேசுவர பூஜைசெய்யச் சொன்னார். புரோகிதருக்குச் சந்தேகம் உண்டாகி க. ச. அவரை படித்தவரிடம் கேட்கச் சொன்னார். அவர் க. ச. சொன்னது சரி என்றார்.

அந்த தினத்தில் அவர் நாசிக்கை விட்டுப் பிரிந்தார். ஆங்கேரிக்கு வந்து என்னைக் காண்பதாகச் சொன்னார். அவர் பெயரையும் விலாசத்தையும் என்னிடம் கொடுத்தார். நான் ஊருக்குத் திரும்பினேன். எனக்கு நன்மைசெய்த நண்பர் திரும்பவில்லை என்று கண்டு அவர் கொடுத்த விலாசத்திற்குப் (கணபதி சங்கர், பம்பாய் சித்திரவேலை கலாசாலை சேவகன்) போய் விசாரித்தேன். அங்கிருந்த மற்ற சேவகர்களைக் கேட்டேன். எல்லோரும் அவ்விதநபரே இல்லை என்று சொன்னார்கள். கலாசாலை யதிகாரியும் அவ்வண்ணமே சொன்னார்.

ஒரு இனாமும் அல்லது இனாம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லாமல் இவ்வளவு கஷ்டப்பட்டு எல்லாச் சடங்குகளையும் சரிவரச்செய்து என் மனைவிக்கு ஸத்கதிவர உதவியவர் யார்? ஸாயி பாபாவைத் தவிர வேறு யார்?

1927 ல் காலுராமுக்குக் குடுமி வைப்பதற்கு சீர்டிக்குச் சென்றேன். பாபா முன்பு என்னை தேவப்புரம் போகச் சொன்னாரே, அதை நான் அது வரையில் கவனிக்கவில்லை. இப்பொழுது சீர்டிக்கு வந்த வேறொரு சாது அதை என்னிடம் வற்புறுத்தினார். அவர் நாணு மகாராஜ் அல்லது ஸ்ரீபாத நர்ஸோபா பாஞ்சலேகாங்கர் என்ற பதினைந்து வயதுடையவர். நான் யார் என்று ஒருவரும் அவரிடம் தெரிவிக்காமலிருந்தும், “நீ தேவப்புரம் போனாயா?” என்று கேட்டார். எனக்குத் தூக்கிவாறிப் போட்டது.

நான்:—இல்லை,

நாணு:—என்?

நான்:—தேவப்புரத்தில் என் குருவமிசத்தில் என்னைவிடப் பெரியவர் யாரும் இல்லை. நான் யாரை குருவாக மதித்து உபதேச அனுக்ரகம் பெறுவது?

நாணு:—அதனுலென்ன? என்குரு என்னைவிடச் சிறியவர். அவர் பெயர் தோய்போடே. உன்குரு பகவத்.

ஸ்ரீ நர்ஸோபா கொஞ்சநாள் கழித்து தமது குருவை எனக்குக் காட்டுவதாகச் சொன்னுர். இவ்வாறு ஞாபகமூட்டப்பட்டு ஸாயி பாபா உத்தரவை நான் நிறைவேற்றினேன். நான் தேவப்புரம்போய் அனுக்ரகம் பெற்றேன். நான் இதற்குமுன் ஸ்ரீ நர்ஸோபாவைச் சந்தித்ததில்லை.

அடுத்தவருஷம் நர்ஸோபா பம்பாய் விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷனில் வருவதாகக் கேள்விப்பட்டேன். அவர் ஏறிவந்த ரயில்வந்து நிற்கும் பொழுதே ஒரு வண்டியிலிருந்து ஸம்ஞைசெய்து, கும்பலின் நடுவே யிருந்த என்னை யழைத்தார். தன் குருவைக் காட்டினுர். அவர் ஸ்ரீ பாத ராம கிருஷ்ண தோய் போடே, என்ற எட்டு வயதுச் சிருவர். ஸ்ரீ நர்ஸோபா சுத்திவேலை செய்துகொண்டிருக்கிருர். 1928-க்குப் பிறகு அவரை நான் சந்திக்கவில்லை. அவருடைய குரு இப்பொழுது குண்டூரில் மெட்ரிக்குலேஷனுக்குப் படிக்கிருர்.

பிறர்களுக்கும் உதவவேண்டும் என்று பாபாவை நான் வேண்டிக்கொண்டபடி உதவி புரிந்திருக்கிருர். அதற்கு ஓர் உதாரணம் சொல்லி இதை முடிக்கிறேன்.

என் வீட்டில் ஆந்தேரியில் 3-12-1923-ல் தெருவைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். நோல் என்பவர் ஒரு மோட்டார் ஓட்டிக்கொண்டு வந்தார். விட்டல் என்பவருடைய பெண் ஒருசிறுமி வண்டியடியில் தாக்கப்பட்டு விழுந்தாள். அதைப் பார்த்ததும் “பாபா அவளைக் காப்பாற்று” என்று வேண்டினேன், மோட்டார் உடனே நின்றது. நான் இறங்கிப்போய் குழந்தையை எடுத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனேன். குழந்தை முழுவதும் நசுங்குமுன் வண்டி நின்றது அதிக ஆச்சரியம். வண்டியி



ஸாயிநாத்; வாஸுதேவ்

காலுராம்

ஸ்ரீ நாராயண ஆச்ரம ஸ்வாமிகள்

லுள்ள பிரேக் சரியாயில்லை, பிரேக்போடவில்லை. ஒருகல் Gear box-க்குள் சிக்கிக்கொண்டதால் வண்டி திடீரென்று நின்றது. ஆஸ்பத்திரி டாக்டர், குழந்தைக்கு ஆபத்தாக முடியும் என்று காயத்தைப் பார்த்துச் சொன்னான். ஆனால் நான் "ஸாயி பாபா அவளைக் காப்பாற்றுவார்" என்றேன். அவள் 15 நாள் ஆஸ்பத்திரியில் தங்கி பிழைத்துக்கொண்டாள். ஆனால் அவளுக்குப் பேச்சு நின்றுபோய் ஊமையாய் விட்டாள், ஒன்பதுமாதம் அப்படியே இருந்தாள். அப்பொழுது தாஸ்கணு ஆங்தேரிக்கு வந்தார். நான் இச்சம்பவத்தைச் சொன்னேன். அவள் பேசுவதற்காக மறுபடியும் பாபா உதியைக் கொடுக்கச் சொன்னார். கொடுத்தேன். அப்பொழுதே அவள் பேச ஆரம்பித்தாள். என்ன ஆச்சரியம். அவள் இப்பொழுதும் உயிருடன் இருக்கிறாள். நன்றாய்ப் பேசுகிறாள்.

பிறருக்கு ஊழியஞ்செய்ய எனக்குப் பல சந்தர்ப்பங்கள் கொடுத்தார் பாபா. 1926-ல் அவர் சொப்பனத்தில் வந்து பாரிஸ்டர் K. G. கோடாரியிடம் போய் அவர் செய்ய நினைப்பதைச் செய்யவேண்டாம் என்று சொல்லச் சொன்னார். அது இன்னதென்று எனக்குத் தெரியாது. இருந்தாலும் நான் அவரிடம்போய் அதைச் சொன்னேன். அவர் அதற்காக எனக்கு வந்தனஞ் செய்து அவர் செய்ய விரும்பியதை எனக்குச் சொன்னார். அப்பொழுதே அவர் கிரகஸ்தாசிரமத்தை விட்டு ஸங்யாசியாக நினைத்தார். அந்தச் சமயம் அவர் அந்த எண்ணத்தை விட்டு விட்டார்.

23-9-1936 டாடி அகியாரி தெரு பம்பாய்

ஸ்ரீ நாராயண ஆசிரமம், சன்யாசி, வேதாசிரம ஸ்வாமியின் சிஷ்யர். காங்காபுரி, வாய் அதில் வாமன மடத்தில் வசித்திருப்பவர் - வயது 58.

தாஸ்கணு மகாராஜ் கீர்த்தனத்தில் 1910ல் நான் ஸாயி பாபா பெயரைக் கேள்விப்பட்டேன். அவருடைய பெருமை தெரிந்தது. 'ஸாயி பாபா இப்பொழுது ஜீவித்திருக்கிறாரா, என்றேன். "ஆம் சீர்டியில்" என்றார். உடனே ஐந்தாம் நாள் சீர்டிக்குப்போய் ஸாயி பாபாவைத் தரிசித்தேன். அதன் பிறகு ஆறு மாத காலத்தில் ஒன்பது முறை போய் தரிசித்தேன். அதன் பிறகும் அடிக்கடி போய்ப் பார்த்திருக்கிறேன். கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்டில் நான் வேலையில் இருந்தேன். அதே வேலையில் 1926ல் பென்ஷன் வாங்குகிற வரையில் நான் இருந்தேன். டோஸர் என்ற என் பெயரை மாற்றிக்கொண்டு நான் 1931ல் சன்யாசம் பெற்றேன். 1895ல் நான் கனவில் ஒரு குருவைக் கண்டேன். ஸாயி பாபாவிடம் போய் அவர் உருவைப்பார்த்ததும் அவரே என்று விளங்கிற்று. பேச்சின்றி அந்தக் கனவில் என்னை யாட்கொண்டாரவர். 1918க்குப் பிறகு கருடேசுவரத்திலுள்ள வாசுதேவாநந்த ஸரஸ்வதி யாதீனமானேன். அவர் குஜராத்தில் நாந்தோட் அருகில் நர்மதா தீரவாஸி. 1915ல் வாசுதேவாநந்த ஸரஸ்வதி தன் சரீரத்தை விட்டபோதிலும் அவர் பாபாவுடன் பழகிவந்தார். பாபாவே அவர் ஆதீனத்தில் என்னை விட்டார் என்று நான் நம்புகிறேன். ஆகவே, காசி துர்க்கா கட்டத்திலுள்ள தாரகாமடத்தில் ஸ்ரீ வேதாசிரம சுவாமிகள் 1931ல் எனக்கு சன்யாச தீக்ஷை கொடுத்தார். நான் "வாயி"யில் அநேகமாகத் தங்குவது. நான்

ஆன்ம விஷயமாக முன்னேற்ற மடைந்ததும், ஸாயி பாபா என்மீது தமது சக்தியைப் பொழிந்ததும் விவரிக்க முடியாத விஷயம்.

பலவகை ஜனங்களுடன் பாபா பலவிதமாய் பழகுவார். அவர்தான் (Centre) நட்ட நடுவிலிருந்து, ஒவ்வொருவனுக்கும் அவனுக்குத் தகுந்தபடி தமது சக்தி பிரவாஹ கிரணத்தை நாட்டுவர். பலரும் பாஹ்ய விஷயங்களையே விரும்பினர். ஆத்ம நிஷ்டை என்ற சிறந்த நன்மையைச் சிலரே நாடினர்.

பாபாவிடம் சற்று நெருங்கிப் பழகியதால் உயர்ந்த போதனையை யடைந்திருக்கக் கூடியவர் ஹரி ஸீதாராம தீக்ஷிதர், சந்தோர்க்கர், தாபோல்கர் என்னும் மூவர்கள். அப்படி யிருந்தும் ஆத்ம நிஷ்டை அல்லது அதற்கு அடுத்த படிகளுக்கு அவர்களில் யாராவது வந்ததுண்டா என்பது சந்தேகமே. தீக்ஷிதரை ஏகநாதரின் இரண்டு நூல்களைப் படிக்கச் சொன்னர் பாபா. அவர் வைதிக நெறியில் அப்பொழுதுதான் ஆரம்பித்தவரானதால் பக்தி முதர வேண்டாமா அவரிடம்? சீரடியில் இருக்கும்பொழுது வாடாவில் தனியாக நான் போய் உட்கார்ந்து வருவேன். மசூதியில் இருக்கமாட்டேன். வாடாவில் இருக்கையில்கூட ஒருவன் பாபாவின் பார்வையிலே யிருப்பான்.

பாபாவின் நிலையைப் பற்றி சில விஷயங்களிலிருந்து கொஞ்சம் அறியலாம். அவரிடம் சென்ற பக்தருடைய தலையை பாபா தொடுவர். பாபா கொடுக்கக் கூடிய யாவற்றையும் பெறுவதற்குரிய அதிகாரி ஒருவருமில்லை. ஆகவே அவர் ஸ்தானத்திற்கு எவரும் வரவில்லை.

ஆனல் அவர் தொட்டதால் சில எண்ணங்களும் சக்திகளும் உணர்ச்சிகளும் உண்டாயின. சில சமயங்களில் இழி

வான எண்ணங்களை நசுக்கி எடுப்பவர்போல அவர் தலையில் அழுத்துவார். சில சமயங்களில் அவர் தட்டுவார், சில சமயங்களில் தலைமேல் கையைக் கொண்டு தடவுவார். ஒவ்வொன்றுக்கும் பிரத்யேகமான பயனுண்டு, பக்தர்களுடைய மனப்பான்மையைப் புரட்டி மாற்றிவிடும்.

பாபா தொடுவது ஒரு வழி. அது தவிர கண்ணுக்குத் தெரியாமல் ஏதோ அறிய முடியாத வகையில் பக்தனுடைய குணத்தில் மாறுபாடுண்டாக்கி விடுவார். ஒன்றும் பேசாமலே எனக்கோர் உணர்ச்சி கொடுத்தார். ஜந்துக்கள் வேறல்ல. எல்லாவற்றிலும் இருப்பது வஸ்து ஒன்றே. அதுவே உண்மைப் பொருள். இந்த உணர்ச்சியை என் மனதில் பாபா தோன்றச் செய்தார். அது 1913-1914ல் நான் முதல் தடவை போய்ப் பார்த்த பிறகு. ஆனால் எனக்குத் தெரிந்த மட்டில் அந்த உண்மையை பாபா வாயால் எப்பொழுதும் சொன்னதே யில்லை. அவ்வித உபதேசம் பெற அங்கு அதிகாரி ஒருவருமில்லை.

தீக்ஷிதரும் தாபோல்கரும் என் அனுபவங்களைப் பற்றிக் கேட்டபோதிலும் நான் சொல்லவில்லை.

பாபா மகா வாக்கியங்களையாவது, சங்கரருடைய ஆத்ம போதத்திலிருந்து அல்லது விவேக சூடாமணியிலிருந்து வாக்கியங்களையாவது சொல்ல நான் கேட்டதில்லை.

1910ல் நான் போனபொழுது கூட்டமில்லை. பாபா அனேகமாக மௌனமாகவே இருந்தார். அதி சீக்கிரத்தில் பம்பாயிலிருந்து கூட்டங்கள் சீர்டிக்கு வர ஆரம்பித்தன. வந்து பாபாவைப் புதிய பழக்க வழக்கங்களில் இழுத்துவிட்டன. தங்கள் மனதிற்குத் தகுந்தபடி பக்தர்கள் புதிய நடவடிக்கைகளையும் படாடோபங்களையும் ஏற்படுத்தினர். இவை

களால் பாபா ஓர் கிருத்ரிம ஜரப்பால் பிரகாசிக்கும் மனிதனைப் போலாய்விட்டார். அவருடைய மஹிமை இந்த படாடோ பங்களின்றி விளங்கும். இவைகள் அதை மறைத்துவிட்டன. இவைகளால் லௌகிக கவுரதைக்கே பாபாவின் ("பூமா") மஹிமை இறங்கிவிடும்.

பாபா என்னிடம் சில வார்த்தைகள் மட்டும் பேசினார். ஆனால் அவை நேரிடையாயும் வெளிப்படையாயும் இருந்தன. அவர் என்னிடம் மறைபொருளாய்ப் பேசுவதில்லை. அவரிடம் வந்து கூடுகிற பல ஜனங்களிடம் மறைபொருளாய்ப் பேசுவார்.

அக்கல்கோட் மகாராஜ் போலவேதான் ஸ்ரீ ஸாயியும். அக்கல்கோட் மகாராஜ் சரித்திரத்தைப் படித்தால் இது தெரியும். இவரும் அத்வைத அனுபவத்தைப் பற்றிப் பேசியதில்லை. அவர் மகா கர்மடர். ஸாயி பாபாவைவிட கர்ம மார்க்கத்தையே யதிகமாய் வற்புறுத்துவார். பாபா அவரவர்கள் நிலைமைக்குமேல் கொஞ்சமே அதிகமாக ஜனங்களை ஏற்ற முயலுவார்.

தாஜி மகாராஜ் என்பவர் சந்யாச தர்மத்தை மேற்கொண்ட ஒரு கிரகஸ்த விரக்தர். அவர் நைஜாம் ராஜ்யத்தில் நாந்தேட் அருகில் டாங்கார்டாகிடி என்ற கிராமத்தில் வசித்து வந்தார். பாபா அவரை 'என் சகோதரன்' என்று சொன்னதாக தாஸ்கணு சொன்னார். அந்த தாஜி மகாராஜ் 1934ல் பரகதி யடைந்தார். அவர் காயத்ரிபுரஸ்சரணம் அப்பியாசம் செய்து கொண்டிருந்தார். அவர் 1914ல் டாங்கார்டாகிடியில் சொன்னதாவது, "நேற்று ஸாயி பாபா மாருதி உருவத்தில் வந்தார். அவர் வந்ததும் அங்கு பெருத்த சலசலப்புச் சத்தம் உண்டாயிற்று."

என் தந்தையும் நானும் மாருதி பூஜை செய்பவர். 1918ல் அனுமான் தெருவில் வில்லே பார்லேயில் ஒரு புதிய மாருதி கோயில் கட்டி பிரதிஷ்டை செய்தேன். அந்த விக்ர கத்திற்கு ஸாயி அனுமான் என்று பெயரிட்டேன். ஸாயியே அனுமான் என்பது எனக்கு ஞாபகம் வந்து அம்மாதிரி செய்தேன். அந்தக் கோயிலை என் சகோதரனுக்குப் பத்திர மூலமாகச் சொந்தமாக்கினேன். வில்லா பார்லேயில் அந்தக் கோயில் கும்பாபிஷேகம் நடக்குங்கால் வாஜே என்ற ஒரு பிரா மணனுக்கு பாபா, ரூபாய் 25 கொடுத்து சீர்டியில் சத்ய நாராயண பூஜை செய்யச்சொன்னார். ஜனங்கள் இந்த இரண்டு சம்பவங்களையும் ஒன்ருகச் சேர்க்கின்றனர். நான் சீர்டிக்கு முதல் முறை போகும்பொழுது ஸம்ஸ்காரங்களை நம்ப வில்லை. அப்பொழுது என்னை பிராமணன் என்றே மதிக்க முடியாது. பிறகு ஸம்ஸ்காரங்கள் செய்வதில் எனக்கு நம் பிக்கை உண்டாயிற்று. சித்திகளைப் பற்றி நான் கவலை கொள்வதில்லை. சீர்டியில் இருக்கையில்கூட நான் பாபா சாவடி மிரவணையைப் போய்ப் பார்ப்பதில்லை.

நான் கலியாணம் செய்து கொள்வதற்கு முன்னமேயே சந்நியாசம் பெற விரும்பினேன். 1931-ல் தான் எனக்கு அது சித்தித்தது. ஆனுல் அதற்கு வேண்டிய சாதனங்கள் தயாராகி வந்தன. என் தாயும் மனைவியும் இருக்கின் றனர். ஆனுல் எனக்குக் குழந்தையில்லை. இரண்டு குழந் தைகள் பிறந்தன. அவை பிறந்த கொஞ்ச நாளுக்கெல்லாம் போயின. ஒன்று 1900-லும் மற்றொன்று 1915-லும் போயின. சந்நியாசத்திற்கு பிரம்மசர்யம் அவசியமாகும். மனைவி வீட்டில் இருக்கிருள் என்கிறது என் பிரம்மசரியத் திற்குத் தடங்கலாக இல்லை. மற்றவர்களைப் பார்ப்பதுபோல என் தாயாரையும் பார்ப்பேனுனல் அதுவும் சந்யாசத்திற்குத்

தடங்கலில்லே. சந்நியாசியாவதற்குரிய ஸம்ஸ்காரங்கள் நடக்கையில் அவை என்னை வெகுவாக உத்ஸாகப்படுத்தின. ஸாயி பாபா சந்யாசம் தேவையானது அவசியமானது அல்லது இன்ன கெடுதல்களையுடையது என்று என்னிடம் சொல்லவில்லை. ஜாதி மாறுகிறது, ஆசிரமம், குரு ஸாதன மார்க்கங்கள், மத ஆசாரம், முதலியவற்றைப் பற்றி அவர் ஒரே புத்திமதிதான் கூறுவர். ஒவ்வொருவனும் அவனவனுக்கு ஏற்பட்டதைப் பிடித்து அதன்படியே முன்னேற வேண்டும்.

குரு என்பவர் ஒருவன் ஆன்மாவை அறியச் சாதனமானவரே. அவர் கொஞ்சம் தள்ளிக் கொடுப்பார். பிறகு நாமே முயற்சி செய்து மேலே போய் அந்த நிலையைப் பிடித்து நிற்க வேண்டும். இவ்வாறு எனக்கு ஸாயி பாபாவும் ஒரு சாதனமாக இருந்தார். நான் ஆன்ம விசாரணையில் விருத்தி யடைவதற்கு அவர் வெகுவாக ஜவாப்தாரியாக இருந்தார். விநாயகபட் சடலே என்பவர் ஒருவர் கோலாப்பூர் சமஸ்தான ஆதரவில் இருந்தார். நான் சீர்டி போவதற்கு முன் 1900-ல் அவரைக் கண்டேன். அவர் யோகவாசிட்டத்தில் சில பாகங்களைப் படிக்குமாறு செய்தார். அவரும் எனக்கு ஒரு சாதனமானர்.

ஒரு சமயம் ஒரு உதவியும் மற்ருெரு சமயம் வேருெரு உதவியும் கொண்டு முன்னேறி ஆன்மாவை யறியவேண்டும்.

"புண்யா" நகர்வாஸி

ஹிந்து, மில் மானேஜர் மனைவி, வயது சுமார் 50.

ஸாயி பாபாவையும் அவரால் எங்களுக்கு உண்டான அனுபவங்களையும் எடுத்துச் சொல்வது மிகக் கஷ்டமானது. ஆனால் அவரைப் பற்றிய சில விஷயங்களைப் பற்றிப் பேசலாம்.

பதினைந்து மாதத்தில் என் பெண் குழந்தைக்கு தேக அசௌக்யமானதால் நான் அதிகக் கவலைப்பட்டேன். அப்பொழுது என் மைத்துனர் சீர்டியிலிருந்து வந்தார். அவர் பாபாவை அதிகமாய்ப் புகழ்ந்தார். அப்பொழுது குழந்தை பிணி தீர்ந்தால் சீர்டிக்கு வருகிறோம் என்று வேண்டிக் கொண்டேன். குழந்தைக்கு பிணி சொஸ்தமாய்விட்டது. நாங்களும் பிரார்த்தனையை நிறைவேற்ற சீர்டிக்குப் போனோம்.

ஸாயி பாபாவை முதலில் பார்த்தவன் மனதில் அவர் கண் பார்வையே அவர் முக்கியக் குறிப்பாகப் பதிந்துவிடும். அவர் பார்வையில் அவ்வளவு சக்தியும் ஊடுருவிப் பாயும் வல்லமையும் இருந்தது. அதனால் நாம் சற்று நேரம்கூட அவர் கண்ணைப் பார்த்துக் கொண்டே இருக்க முடியாது. ஸாயி பாபா நம்மைப் பூராவும் ஆராய்கிறார் என்று பார்ப்பவர் உணர்வார். அவர் நமது மனதில் மாத்திரம் இருப்பவரல்ல. அவர் நம்முடலில் ஒவ்வொரு அணுவிலும் இருப்பதாக உணர்வு உண்டாகிறது. சில வார்த்தைகள் அவர் சொல்வதைக் கேட்டால் முக்காலத்தையும் மற்றும் யாவற்றையும் அறிவார் என விளங்கும். அவருடனிருக்கையில் முழு நம்பிக்கையுடன் அவரை நம்பிச் சரணமடைய வேண்டியதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

ஒவ்வொரு சிறிய அம்சத்தையும் கவனித்துப் பார்த்து நம்மை ஒவ்வொரு சிக்கலிலும் மடக்கிலும் வழிகாட்டி க்ஷேம கரமாய் நடத்திடுவர். அவரே அந்தர்யாமி. கடவுள் என்ருவது சகஜ ஸ்திதியிலுள்ள சத்புருஷ ரென்ருவது அல்லது எப்படியாவது அவரைச் சொல்லட்டும். எப்பெயரிடினும் அவர் சக்தி ஸர்வத்தையு மடக்கும். அந்த ஸந்நிதானத்தில் சம்சயம், கேள்வி இவைகளுக்கு இடமில்லே. அவர் இஷ்டப் படியே ஸர்வமும் நடக்கட்டும் என்று அங்கு சென்றவர்கள் தம்மை அவர் ஆதீனத்தில் விட்டுவிடுவர். அதைவிட வேரே மார்க்கமில்லே யென்றும் அதுவே சிறந்ததும் க்ஷேமகரமென் றும் விசிதமாய்விடும்.

அவர் சன்னிதானம் சென்றது முதல் அவருடைய சக்தி மஹத்தானது, அவர் எங்குமுள்ளவர், ஸர்வத்தையு மறிவார், நாம் எங்கிருந்தாலும் எக்காலத்திலும் நம்மை ரக்ஷித்து வருகிருர் என்னும் அனுபவங்கள் நமக்கு வந்து கொண்டே யிருக்கும்.

நான் சீர்டியில் தங்க ஆரம்பித்த சமயம் அவர் நமது அந்தர்யாமியென விளக்கிய சில அனுபவங்களேச் சொல்லு கிறேன். அந்த நாட்களில் தெருவைக் கூட்டுதல், தெரு விளக் குப் போடுதல் முதலான நாகரீக சௌகரியங்கள் ஒன்றும் சீர்டியில் கிடையாது. அது ஒரு குக்கிராமம். தெருக்கள் இரவில் இருட்டாய் இருக்கும். ஓர் இரவு தெருவில் நான் நடந்து கொண்டிருந்தேன். திடீரென்று நான் நின்றுவிட் டேன். எதையோ கண்டோ, கேட்டோ நிற்கவில்லே. நிற்க வேண்டுமென்று என்னவோ தோன்றிற்று. உடனே நின்று விட்டேன். ஒரு க்ஷணிகத்தில் யாரோ ஒருவர் விளக்குக் கொண்டு போனுர். அதன் வெளிச்சத்தால் நான் அடுத்த காலடி வைக்கும் இடத்திலேயே ஒரு பாம்பு சத்தமின்றிப்

படுத்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். நான் காலை வைத்திருந்தால் ஆபத்தாக முடிந்திருக்கும். அந்த விளக்கினால் தான் ஆபத்தை அறிந்தேன். விளக்கு இல்லாமல் போனால் என் அறிவைக் கொண்டு பாம்பு இருக்கிறதென்று நான் அறிய முடியாது. ஏன் அப்படி அவ்வளவு திடீரென்று நான் நின்றேன்? அந்தச் சமயத்தில் விளக்கு எப்படி வந்தது? எனக்கு என் ஆபத்தைக் காட்டிற்று? இதற்கு ஒரே பதில். கண் கொட்டாமல் அனைத்தையும் கவனித்துப் பார்த்து நம்மைக் காக்கும் பாபாவின் கருணையே காரணம். இந்த என் உடல் மரணத்திலிருந்து தப்பிக்கும்படி அவர் பன்முறை காப்பாற்றி இருக்கிறார். சிலவற்றைச் சொல்லுகிறேன்.

மற்றொரு சம்பவம், ஸாயி பாபாவின் மசூதிக்குப்போய் அவர் சமீபத்தில் நாங்கள் உட்காருவது வழக்கம். அதற்கு உத்தரவும் கேட்கவேண்டாம். இன்னார் வந்திருக்கிறார் என்று அறிவிக்கவும் வேண்டாம். யார் வேண்டுமானாலும் போய் அவர் முன் நமஸ்காரம்செய்து அங்கே உட்காரலாம். ஒரு சமயம் பாபாவுக்குக் கொஞ்ச தூரத்தில் நான் உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது அங்கே ஒரு குஷ்டரோகி வந்தான். அவனுக்கு வியாதி முற்றிப்போய் விட்டது, துர்நாற்றம் வீசிற்று. அவனுக்கு பலமே இல்லை. மிகவும் கஷ்டப்பட்டு, மெதுவாக, மசூதியின் மூன்றுபடிகளை ஏறி அக்னிதுணிக்குச் சென்று பாபாவிடம் வந்தான். வந்தனம் பண்ணினான். தரிசனம் செய்ய அவனுக்கு அவ்வளவு நாழியாயிற்று. அந்த நாற்றத்தை நான் சகிக்க முடியவில்லை. அவன் எப்போ தொலைவான் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியில் அவன் மெதுவாக இறங்கி ஒரு அழுக்கு துணியுள்ள சிறு மூட்டையுடன் போனான். தொலைந்தானென சந்தோஷத்துடன் மனதில் கடவுளுக்கு வந்தனம்

செலுத்தினேன். உடனே ஸாயி பாபா என்னைக் கூர்ந்த பார்வையால் பார்த்தார். என் எண்ணத்தைத் தெரிந்துகொண்டார் என்று அறிந்தேன். குஷ்டரோகி அதிகதூரம் போவதற்குள் பாபா ஆள்விட்டு அவனை அழைத்து வரச்சொன்னார். வந்தான். முன்போல மெதுவாக ஏறினன், துர்நாற்றமும் வீசியது அவன் பாபாவை வணங்கினன். அந்த மூட்டையை பாபா கையிலெடுத்து இது என்ன என்றுசொல்லிக்கொண்டே திறந்தார். அதில் திரட்டிப்பால், (பால்கோவா) இருந்தது. பாபா அதில் ஒரு துண்டை எடுத்து எனக்குக் கொடுத்தார். எல்லாரும் இருக்க, எனக்கு மட்டும் கொடுத்து "தின்" என்றார். இந்த அழுகல் குஷ்டரோகி கொண்டுவந்ததைத் தின்கிறதா! என்ன அஸக்கியம்! ஆனல் அது ஸாயி பாபாவின் உத்தரவு. மறுக்கமுடியாது. ஆகையால் தின்றேன். ஸாயி பாபா வேறு ஒரு துண்டு எடுத்து தாமும் அதைத் தின்றார். மீதி பிரசாதத்துடன் அந்த மனிதனை அனுப்பி விட்டார். அவனை ஏன் மறுபடி கூப்பிட்டார். எனக்கு மட்டும் பிரசாதம் கொடுப்பானேன் என்று அங்கே இருந்த ஒருவருக்கும் புலப்படவில்லை. ஆனல் பாபா (அந்தர்யாமியா யிருந்துகொண்டு) என் மனதை யறிந்தார். தாழ்மை, சகோதரபாவம், கருணை, பொறுமை, ஸர்வக்ஞானியாகிய அவரிடம் நம்பிக்கை இவைகளை எனக்குப் புகட்டி வியாதியிலிருந்து என்னை நானே என் சுகாதாரப் படிப்பால் காப்பாற்ற வல்லவன் என்னும் அகந்தையைக் கண்டித்தார்.

எங்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் உண்டானல் அவற்றைச் சொல்ல வேண்டிய தவசியமில்லை. நாங்கள் அவரெதிரில் போய் நிற்கிறது அல்லது உட்காருகிறதுதான். அவருக்கு இன்ன விஷயம் என்று உடனே தெரியும். எங்கள் தேவைக்குத் தகுந்தபடி அவர் உத்தர விடுவார். எங்கள்

வேலைக்காரன் எங்களுடன் சீர்டியிலிருந்தான். அவனுக்கு இடுப்பு வலிகண்டது. என் புருஷன் ஸாயி பாபாவிடம் போய் நின்று கொண்டிருந்தார். ஸாயி பாபா எதிரில் வேறு சிலரும் இருந்தனர். திடீரென்று பாபா, "அடேடே! என் கால் நோவுகிறது. நோவு அதிகம்" என்றார். வலிநிற்க ஏதாவது செய்யவேண்டும் என்றொருவர் கூறினர். ஆமாம் பச்சை இலையைச் சுடவைத்து அதன்மேல் போட்டால் போய்விடும் என்றார் பாபா. 'என்னஇலை பாபா?' என்றார் ஒருவர். "ஓடையருகில் இருக்கிற சோத்துக் கத்தாழை" என பாபா தெரிவித்தார். "அதைக் கொண்டுவந்து பிளந்து அடுப்பில் சுட்டு அதன் பேரில் வைக்கவேண்டும். அவ்வளவு தான்" என்றார். உடனே என் புருஷனுக்கும் எங்கள் வேலைக் காரனுக்கும் பாபாசொன்ன மருந்து இது என்று தெரிந்தது. நாங்கள் கத்தாழையைக் கொண்டுவந்து அவர் சொன்னபடி போட்டோம். வேலைக்காரனுக்கு நோவுசொஸ்தமாய் விட்டது.

அவர் உடல் மரூதியில் இருக்கையில் அவர் பல இடங் களிலும் இருந்து, சில சமயம் பார்வைக் கெட்டாத உருவத் துடன் பற்பல செய்கைகளையும் செய்கிறார். எனக்கு கண் உபத்திரவம் அடிக்கடி வரும். நான் சீர்டியில் இருக்கும் பொழுது ஒருசமயம் என் கண்ணிலிருந்து நீர் வடிந்தது. வலி அதிகம். அப்படியே நான் போய் பாபா எதிரில் உட் கார்ந்தேன். அவர் என்னை நிமிர்ந்து பார்த்தார். என் கண் நோவும் நீர் வடிதலும் அந்த க்ஷணமே நின்றது. ஆனால் அவர் கண்களில் நீர் பெருகிற்று. பார்த்த வுடனே என் வியாதி சுபாவத்தை யறிவதே ஆச்சரியம், அதிலும், வெகு நாளாக இருந்த கண் நோவை உடனே திடீரென்று மருந்து போடாமலே சொஸ்தப் படுத்தியது பின்னும் ஆச்சரியம். வைத்திய சாஸ்திரிகள் இதை நம்பாம லிருக்கலாம். ஆனால்

அதை என் விஷயத்திலேயே நிதர்சனமாகக் கண்டேன். அங்கு வந்த மற்றவர் விஷயத்திலும் கண்டிருக்கிறேன். ஆகையால் அதை நம்பாம லிருக்க முடியவில்லை. எல்லாவற்றி லும் ஆச்சரியமானது, பிறர்நோயை அவர் மனோசக்தியினால் தம்முடலுக் கிழுத்துக் கொண்டது. இச்சக்தியையும் எல்லா பிராணிகளின் அந்தர்யாமியா யிருந்துகொண்டு எல்லாச் செய் கைகளையும் அவர் செய்விப்பதை கவனித்தால் அவர் தம்மைப் பற்றிச் சொன்ன வசனங்களின் மர்மத்தை யறியலாம். சில சமயங்களில் 'நான் சீர்டியில் இல்லை' என்று அவர் அங்கு இருக்கும்பொழுதே சொல்வர். நாம் ஸ்ரீ ஸாயி பாபாஎன்று சொல்லுகிற மூன்றரை முழ உயரமுள்ள மாமிச கோசத் தில் தாம் அடைபட இல்லை, என்று அடிக்கடி சொல்வர். ஒவ்வொரு நாய், பூனை, மனிதன் அல்லது ஸ்திரீயிலும் அவர் இருந்தார். நாம் இந்த உடலில் பற்றுக் கொண்டு அதுவே தான் நாம் என்று நினைக்கிறோம். அவருக்கு இந்த புத்திக் குறைவும் பற்றும் இல்லை. அவர் நிலையோ பரமாத்மா நிலை. பிரக்ஞான நிலை; சகஜ சமாதி அல்லது ஞானமய சரீரம் அல்லது எந்தப் பெயர் கொடுத்தாலும் அத்தூய நிலைதானவர்.

ஸ்ரீ ஸாயி பாபாவுக்கும் மற்ற சந்நியாசிகளுக்கும் உள்ள ஒரு வித்தியாசம் எனக்குத் தெரிந்தது. மற்றவர்கள் தேகத் தையும் சுற்றி யிருக்கும் வஸ்துக்களையும், மறந்து சமாதியில் புகுந்து பிறகு சமாதி யிழந்து உலகத்தின் ஸ்மரணைக்கு வந்து இத்தகைய முயற்சியால் இதரர் மனதிலிருப்பதை அறிந்து வெளியிடுவர். ஆனால் ஸாயி பாபா ஏதாவது முடித்துவைப்ப தற்கு உலகை மறந்து சமாதி நிலையில் இருக்க வேண்டிய தில்லை.

அவருக்கு ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ஆகிய இரண்டு அறிவும் ஒவ்வொரு நிமிஷமும் உண்டு. ஜீவன் என்ற நினைவுமுண்டு.

ஈசன் என்கிற நினைவுமுண்டு. பாபா என்று சொல்லப்படுகிற உடலிலிருந்து கொண்டு தான் ஒரு ஜீவனாகவும் மற்றவர்களுடன் சகல விஷயங்களில் பழகிக் கொண்டிருப்பது ஒரு நிலை. மற்றொன்று, எல்லா ஜீவான்மாக்களுக்கும் மேலான பரமாத்மாவாக இருப்பது. இந்த இரண்டுவித நிலைகளுக்குண்டான சக்திகளையும் குணங்களையும் ஒருங்கே அவர் கையாண்டு வெளிப்படுத்தினார். சில ஸாதுக்கள் தங்கள் உடலையும் அதைச் சூழ்ந்துள்ள மற்றவைகளையும் மறந்து அதாவது ஜாக்ரதாவஸ்தையிழந்து பிறகு அந்த ஜாக்ரத்துக்கு திரும்பி வருவார். ஆனால் ஸாயி பாபாவோ அந்த ஜாக்ரதாவஸ்தையி லிருக்கும்பொழுதே அதைக் கடந்த அவஸ்தைகளிலுமிருப்பார். மற்றவர்கள் கஷ்டப்பட்டு முயன்று பிறருடைய மனதையும் பூர்வ ஜன்மத்தையும் அறிவர். பாபாவுக்கோ என்றால் இதற்கு ஒரு முயற்சியும் தேவையில்லை. அவர் எப்பொழுதும் எல்லாவற்றையும் அறியும் நிலையிலிருந்தார். பாபாவை சில ஜனங்கள் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர் குப்னி சொக்காய் செய்வதற்கு வியாபாரியிடத்தில் துணி விலை பேசுவார். கஜம் எட்டணாவிலிருந்து ஐந்தணாவிற்குக் கொண்டு வருவார். பிறகு நாற்பது ஐம்பது கஜம் விலைக்குக் கொள்வார். நுட்பமாய் பாராதவர் பாபாவுக்கு அதிக சிக்கனம், பேராசை அல்லது திரவியப் பற்று என்று தீர்மானம் பண்ணுவர். கொஞ்ச நேரம் பொறுத்து பாபா வியாபாரிக்குப் பணம் கொடுப்பர். அப்பொழுது, பேசின விலைக்கு அதிகமாய் நான்கு மடங்கு கூட கொடுத்து விடுவார். மறுபடியும் நுண்ணிய அறிவில்லாதவர் பாபாவை பைத்தியமென்றும், மூளை கெட்டவர் என்றும் பாத்திர மறியாமல் பணத்தை யிறைப்பவரென்றும் கருதுவர். இவர்கள் தீர்மானங்கள் தவறே. பாபாவுடைய கருத்தை யாருக்குத் தெரிவிப்பாரோ அவரே அதை யறிவர். பிறர் அறியார்.

அவருடைய வல்லமைக்காக மட்டும் பக்தர்கள் அவரிடம் ப்ரீதி யடையவில்லை. சக்திகளுடன் கூடிய அன்பு அவர்களைப் பாதுகாப்பதினுல் சீர்டியை, அங்கு செல்லும் பக்தர்கள் சொர்க்கமாகவே எண்ணினுர்கள். நாங்கள் அங்கே போன உடனே அபயப்ரதான மடைந்தோம். நமக்கு ஒரு கெடுதலும் வராதென்று உருதி மனதில் ஏற்பட்டு விட்டது. நான் போய் அவர் எதிரில் உட்கார்ந்ததும் என் வலி, தேகம், சகல வியவகாரம், கவலைகள் அனைத்தையும் மறந்தேன். அங்கே உட்கார்ந்திருக்க, நாழிகைகள், மணிகள் போய்க் கொண்டிருக்கும். ஆனுல் அவை போவது தெரியாமல் ஆனந்தத்தில் மூழ்கி யிருப்பேன். என்ன நிகரற்ற அனுபவம்! அவருடைய உண்மை பக்தர்கள் எல்லோரும் இதை அனுபவித்திருப்பார்களென்று நம்புகிறேன். எங்களுக்கு வேண்டியதெல்லாம் அவரே. எங்களுக்கு அகிலமுமாய் இருப்பார். அவருக்கு எவ்வித எல்லை அல்லது குறை அல்லது அபூர்ணத்வம் இருப்பதாக நினைக்க முடியாது. அவர் மறைந்துவிட்ட பிறகு அவருடைய பாதத்தில் அமர்ந்து பல மணி அதாவது நெடு நாழியாய் உலக வியவகாரங்களை மறந்திருக்க முடிய வில்லையென்று வருந்துகிறேன். அவர் மறைந்ததால் எங்கள் ஆன்மாவே போய்விட்டது. எங்கள் உடல் மட்டும் இங்கு தங்கி நிற்கிறது.

அப்படி யிருந்தும் அவர் அடியோடு மறைந்துவிட்டார் என்பது உண்மையல்ல. அவர் இன்னும் இருக்கிறுர். சிற்சில சமயங்களில் அவர் வல்லமைக்கும் எங்களை அன்புடன் ரக்ஷித்து வருவதற்கும் வேண்டிய ருஜுக்கள் இருக்கின்றன. இந்த ருஜுக்களைக் கொண்டு அவர் இருக்கிறுர் என்று தீர்மானித்திருந்தாலும் அவர் உடலுடன் இருக்கும்போது நாங்கள் அடைந்த ஆனந்தத்திற்கு இது ஈடாகாது, அவர் உடலை

கழட்டிவிட்ட பிறகும் எங்களைப் பற்றி கவலை கொண்டு உதவி வருவதையும் அவருடைய வல்லமையையும் பற்றி சில சம்ப வங்களைக் குறிக்கிறேன்.

1925-ல் கோடையில் ஒருமாத காலம் எனக்கு ஒற்றைத் தலைவலி உண்டாயிற்று. பஞ்சகனி என்ற ஒரு ஆரோக்ய கரமான ஊரில் நாங்கள் இருந்தோம். நான் பல மருந்துகள் போட்டுப் பார்த்தேன். ஒன்றும் பயன்படவில்லை. மரணமே கிட்டினதாகத் தோன்றிற்று. சீர்டிக்குப் போவதெனத் தீர் மானம் பண்ணினேன். பாபா பாதத்தில் சாகலாம் என் றெண்ணினேன். என் புருஷன் அதற்கு ஆட்சேபித்தார். இருந்தாலும் நாங்கள் கோபர்காம் வந்தோம். அங்கு கோதா வரியைக் கடக்கவேண்டி யிருந்தது. எப்படியும் சீக்கிரத்தில் சாகப்போவதால் அந்த புண்ணிய நதியில் ஸ்நாநம் செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. குளிர்ந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்தால் தலைவலி அதிகமாகி சீக்கிரத்தில் சாவு உண்டாக லாம். அப்படி யிருந்தால் அதுவே நல்லதென்று நினைத்தேன். ஸ்நாநம் செய்தேன். அப்பொழுது எங்கள் ஆச்சர்யத்தை என்ன என்று சொல்வது! ஸ்நாநம்செய்து வெளியே வந்ததே தலைவலி அதிகமாவதற்குப் பதிலாக பறந்தோடிப் போய்விட் டது. அதுமுதல் அந்த வியாதி தீர்ந்துவிட்டது. இதற்குமுன் தலைவலி இருக்கும்போது, குளிர்ந்த ஜல ஸ்நாநம் செய்வது என்றால் கொஞ்சமும் முடியாது அது எனக்கு மகா நடுக்கம். ஆகையால் இப்பொழுது சொஸ்தமானது நிச்சயம் பாபாவின் கருணையால்தான்.

1927-ல் நான் ஆறு மாத கர்ப்பமா யிருந்தேன். நாங்கள் சீர்டிக்குப் புறப்பட்டோம். அதற்குக் கொஞ்ச நாள் கழித்து, குழந்தை கர்ப்பத்திலேயே இறந்துவிட்டது. நாட்கள் சென்ற தும் வெளி வரவில்லை. என் உடம்பு முழுவதும் நீலம்

பாய்ந்துவிட்டது. இதனால் என் இரத்தம் விஷமாகி விட்ட தென்று தெரிந்தது. சீர்டியில் வைத்யராவது மருத்துவச்சி யாவது கிடையாது. ஆமத் நகரிலிருந்து சில மருந்துகள் வர வழைத்தோம். அவை ஒன்றும் உபயோகப்படவில்லை. என் புருஷர் ஸாகோரியில் உபாசனி பாபாவிடம் போய் உதவி செய்யும்படி வேண்டினார். அவர் "நல்ல டாக்டரும் மருத்து வச்சியும் அங்கேயே இருக்கிறார்கள். (ஸ்ரீ ஸாயி பாபாவை குறிக்கிறார்) என்னிடம் ஏன் வருகிறாய்" என்றார். குழந்தை பல நாள் வயிற்றிலேயே செத்து இருந்தது. என் நினைவு இழந்தேன், அதன் பிறகு என்ன ஆயிற்று என்று எனக்கு ஞாபகமில்லை. ஆனால் என் புருஷர் சொல்லுகிறார். என் நினைவு இல்லாத நிலைமையிலேயே என்ன என்ன செய்ய வேண்டுமென்று நானே சொல்லிக் கொண்டிருந்ததாகவும், ஸாயி பாபாவினுடைய உதியையும் தீர்த்தத்தையும் உபயோ கப்படுத்துவது முதலியன நான் சொன்னதாகவும் சொல்லு கிறார். அதன்படி செய்து வந்ததில் உள்ளிருந்ததெல்லாம் வெளியே வந்துவிட்டது. அப்படி யிருந்தும் ஒரு மாத காலம் நான் நினைவில்லாமல் இருந்தேன். கடைசியாக எனக்கு நினைவு வந்து தேக சௌக்யமடைந்தேன். இவ்விதம் ஸாயி பாபா சமாதி யடைந்த ஒன்பது வருஷம் கழித்து அவர் எனக்கு புரிந்த உதவி இது.

ஸாயி பாபா ஒரு மடமாவது ஒரு ஸ்தாபனமாவது ஏற் படுத்தவில்லை. ஆகவே அவர் இருந்த ஸ்தானத்துக்கு யாரும் வரவில்லை.

பாபாவினுடைய குணங்கள் அவர் நடத்தையிலேயே வெளிவரும். அவருடைய நற்குணங்களில் சிலவற்றை இங்கு சொல்லுகிறேன். அவர் அன்பு மேற்சொன்னதிலிருந்தே விளங்கும். அதை யனுபவித்தவர் அநேகர். சீர்டியி

லிருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் ஐரோப்பாவில் 1914-19ல் நடந்த மகா யுத்தத்தில் அவருடைய பக்தர்கள் அதை யனுபவித்திருக்கிறார்கள்.

ஆனால் அவர் நியாயஸ்தர் பக்ஷபாதமில்லாதவர். அவசியம் நேரிட்டால் வயற்றுக் குழந்தையைக்கூட வெட்டவேண்டி வரும் என்பர். பாதுஷாவையும் பக்கிரியையும் சமதிருஷ்டியாய் பார்ப்பார். பணக்காரர், அதிகாரிகள் இவர்களைக் கண்டால் வணங்குவதும் ஏழைகளைக் கண்டால் அனுதாபணை செய்து கர்வப்படுவதும் அவரிடத்திலில்லை.

ரெவினியூ கமிஷனர் கலெக்டர் முதலியவர்கள் அவரைப் பார்க்க வந்திருக்கிறார்கள். ஏராளமாக தாழ்ந்த உத்தியோகஸ்தர்களும் வருவதுண்டு. ஆனால் பணம், நிலைமை இவைகளை பாபா ஒரு பொருட்டாக எண்ணவில்லை.

எல்லோருக்கும் எவ்வேளையிலும் அவர் தரிசனம் கிடைக்கும். இதுவும் அவருடைய விசேஷ மஹிமை. "என் தர்பார் எந்த வேளையிலும் எப்பொழுதும் திறந்திருக்கும்" என்று அவர் சொல்வர். பரிசோதனை செய்வதால் அவருக்குக் கெடுதி யொன்றுமில்லை. அவரிடம் மறைத்து வைக்க வேண்டியதும் மானக்குறைவானதும் யாதொன்றுமில்லை. அவர் நடத்தை எல்லாம் பஹிரங்கமானது. சந்தேஹாஸ்பதமானதல்ல.

அவருக்கு கவலையாவது சஞ்சலமாவது கிடையாது. இதுவும் அவர் வாழ்நாளில் ஒரு விசேஷ அம்சமாகும். சொந்தப் பொருப்பு, சொந்த ஏற்பாடுகள், ஆஸ்தானம், கட்டடம், பணம், சொத்து முதலியன இருந்தால்தான் கவலைக்குக் காரணம். இவை யொன்றுமில்லாததால் கவலை யற்றிருந்தார். கிடைத்ததெல்லாம் உடனே செலவாய்விடும். தானாக அளித்த பிக்ஷை

அன்னத்தைப் புசிப்பர். அவர் தினம் தக்ஷிணை வாங்குவார். அதைப் பற்றி பின்னால் சொல்லுகிறேன். அதை தாராளமாக செலவழித்து விடுவார். கடைசி ஒன்பது வருஷங்களில் தாத்யாபடேலுக்கும், படே பாபாவுக்கும் தினமும் நூற்றுப் பத்து ரூபாய் கொடுப்பார். அந்தந்த நாள் வரவு நொடியில் சில வழிந்துபோகும். அவர் தேக வியோகமானபோது அவருடைய அந்த சடங்குக்கு வேண்டியதைதான் அவர் மீதி வைத்திருந்தார்.

அவர் ஆத்ம நிக்ரஹத்தையும் மனச் சாந்தியையும் இங்கு சொல்லுகிறேன். அற்ப விஷயங்களில் கவலை கொள்ளாத பெருந்தன்மையுடன் இருந்தார். அவருடைய மற்ற பொறிகளைப் போலவே அவர் ரஸனேந்திரியமும் அவருக்கு வசப் பட்டிருந்தது. எனக்குத் தெரிந்த வரையில் அவர் ஏதாவது ஒரு பதார்த்தத்திலாவது ஆசை வைத்ததில்லை. இதன் பிறகு அவருடைய தாராளத்தைப் பற்றி சொல்லுகிறேன்.

அவர் மேற்சொன்ன நூற்றுப் பத்து ரூபாய்களைத் தவிர, பணத்தையும் வெகுமதிகளையும் பல பேருக்கும் வாரி யிறைப்பார். அவருடைய தாராளத்தைப் பற்றிச் சொல்லும் போது நாங்கள் கண்டதை மட்டும் சொல்லுகிறோம். பஜனை கோஷ்டிகளும் பக்கிரிகளும் வருவார்கள். அவரவர்களுக்கு தாராளமாகக் கொடுப்பார்.

பாபாவுடைய மதக் கொள்கைகளும் பிறருக்கு அவர் பாரலௌகிக உதவி புரியும் மார்க்கங்களும் ஜனங்கள் அறிய முடியா. அதிகமாய்ப் பேசமாட்டார். பேசினால் பக்தியுடன் பேசுவர். தமது ஆசார அனுஷ்டானங்களை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

காலை வேளைகளில் (துனி) அக்னிக்கருகில் உட்கார்ந்து கைகளையும் விரல்களையும் அசக்குவார், சில சைகைகள் செய்

வார். "ஹக்" — கடவுள் என்று சொல்லுவார். என்ன செய்தாரென்று எங்களுக்கு புலப்படவில்லை.

சௌசம், பலம், ஒழுங்கு, தன் நலமறுப்பு, ஆகிய குணங்கள் எப்பொழுதும் அவரிடமிருக்கக் காணலாம். அவர் எப்பொழுதும் பிச்சை எடுத்தே சாப்பிடுவார். அவருக்கு வியாதி வந்தபொழுதும் படுக்கையாக இருந்ததேயில்லை. அப்பொழுதும்கூட எழுந்துபோய் பிச்சை வாங்கிக் கொண்டே வருவார். வழக்கப்பட்ட இடங்களில்தான், கொஞ்சம்தான், பிச்சை வாங்குவார், அப்படி பிச்சை புகினும், கிடைத்த உணவில் செய்வன-செய்து அதாவது ஐயமிட்டு மிகுதியான ஸ்வல்பத்தையே உண்பர்.

ஸாயி பாபாவுடைய சாமான்யப் பேச்சும்கூட அர்த்தமில்லாத பிதற்றல் என சிலர் கருதுவார். அவர்களுக்கு அப்படியே அதாவது அர்த்தப்படாமலே இருக்க வேண்டுமென்பதுதான் பாபாவின் கருத்து. "ஜயாமனீ ஜைஸா பாவ, தயா, தைஸா அனுபவ" (ஒருவனுக்கு மனோபாவம் எப்படியிருக்கிறதோ அப்படியே அனுபவமும் உண்டாகும்.) ஆனால் எந்தப் பேச்சினால் யாருக்கு நன்மை உண்டாக வேண்டுமென்று பாபா எண்ணினாரோ அதன் பூர்ண பொருளை அவர் அறிந்து கொள்வர். பாபாவுக்கு சௌக்யம் வேண்டுமென்று அவர் விரும்புவதேயில்லை. மசூதி ஒரு பழைய அழுக்கடைந்த, இடிந்துபோன இடமாக இருந்தது. அதை யிடித்துப் புதுப்பிக்கவேண்டும் என்று சொன்னபோது அவர் வேண்டாம் என்று தடை செய்துகொண்டே வந்தார். பக்தர்கள் வற்புறுத்தி அவர் சாவடியில் தூங்கும்போது இரவில் பழுது பார்த்ததால் அது அவசரமாக கட்டி முடிந்தது.

உபாசனி மகாராஜைத் தவிர சீர்டியில் அநேக பிரபலமான மனிதர்களை நாங்கள் சந்தித்தோம். ராதாகிருஷ்ண ஆயி

என்ற பிராமண விதவை ஸாயி பாபாவுடைய ஆரத்தி முதலி யவற்றை கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் ஜனங்களைச் சாமான்கள் கொண்டுவரச் சொல்லி உத்திரவிடுவாள். அவளுக்கு அதிக மதிப்புண்டு. 1915ம் வருஷம் நாங்கள் அங்கே போனபோது ஸாயி பாபா எங்களை ஆயி வீட்டுக்குப் போகச் சொன்னார். தங்குவதற்காக நாங்கள் அங்கே போனோம். ஆனால் ஆயி சொல்கிற எல்லா வேலையும் நான் செய்யவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவள் எங்களுக்கு இடம் கொடுத்தாள். நான் ஒப்புக்கொண்டு செய்து வந்தேன். என் பூர்வ ஜன்மத்தைப் பற்றி அவள் சொன்னாள். பிறர் மனதில் உள்ளதை அவள் அறியும் அபூர்வ சக்தியுள்ளவள். எதிர் பாராமல் பாபா ஏதாவது ஒரு ஆகாரம் வேண்டும் என்பார். அவள் அதை முன்னாடியே தயாரித்து வைத்துக்கொண்டிருந்து அதை உடனே கொடுத்து விடுவாள்.

எனக்கு ஒரு தூது வந்தது. அதற்கு நான் ஒரு பதிலை யோசித்துக் கொண்டிருக்கையில் அவள் என் மனதில் உள்ளதை யறிந்து அந்த பதிலை அவளே சொன்னாள். அவள் ஸாயி பாபாவிடத்தில் அதிக பக்தியுள்ளவள். அந்த சமஸ்தானத்திற்கு அதிக கைங்கர்யம் செய்து வந்தாள். ஆனாலும் நாக்கு துடுக்கானவள். அவளுடன் யாரும் குடித்தனம் செய்ய முடியாது. ஆனால் ஸாயி பாபா எங்களை அங்கே குடித்தனம் வைத்ததின் நோக்கம் எங்களுக்கு பொறுமை குணத்தை அதிகப்படுத்துவதற்காகத் தானிருக்கும்.

அவரிடம் வருகிற பக்தர்களுக்கு ஸாயி பாபா செய்த உதவி மற்ற ஸாதுக்கள் செய்யும் உதவிபோலன்று. அவரிடம் உபதேச மந்திரம் ஒன்றும் கிடையாது, யோகம் பிராணாயாமம், குண்டலி முதலியவற்றைப் பற்றி பேசுவதே இல்லை. ஆனால் ஏதாவது மார்க்கத்தைப் பின்பற்றி யாராவது கஷ்டப்

பட்டால் அவன் ஸாயி பாபாவிடம் வருவான். அவர் உதவி செய்வார். ஆஸனமும், பிராணயாமமும் அப்யாஸம் செய்து உடம்பு கெட்டுவிட்டு மூல வியாதியுடன் ஒரு யோகாப்யாசி, ஸாயி பாபாவிடம் வந்தான். அவனுக்கு தேகம் சௌஸ்தமா யிற்று.

ரகுவீர. B. புரந்தரே, வாந்தரா.

லேண்டி (வாய்க்கால்) தோட்டம்

இடத்திலிருந்து:—

(1) *ராவ்பகதூர்* M. W. *பிரதான்*, (2) S. D, *நாவல்கர்*
(3) *ராவ்ஸாயபு. ய. ஜ. கால்வண்கர்*, (4) S. N. *கர்கர்*

1936 மேமீ 4உ பூனு

ரகுவீர. B. புரந்தரே. பாஸ்கர புரந்தரே குமாரன் வயது 60. தேசஸ்த பிராமணன். சுக்ல யஜுர்வேதி. ரிடையர்ட் G. I. P. குமாஸ்தா. 59. B. பெர்ரி ரோட் பாந்தரா. "ஸாயி நாதர் ஆச்ரம"த்திலிருக்கிறார்.

முதலில் 1909-ல் ஸாயி பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அவரைப் பார்க்கப் போனேன். எனக்கு எப்பொழுதும் ஸாது ஸங்கத்தில் பிரியம். அவர் ஒரு ஸாது என்று கேள்விப்பட்டேன். ஆகவே அவரிடம் செல்லலானேன் அவர் என் கனவில் வந்து என்னை சீர்டிக்கு அழைத்தார். அந்தச் சமயம் ஆறுமாத வயதுள்ள என் பெண் குழந்தை மிக வியாதியாக இருந்தாள். ஆகையால் என் தாயார் நான் போகக் கூடாதென்றார். இருந்தும் நான் போகவேண்டுமென்று கட்டாயப்படுத்தி என் மனைவி அந்தக் குழந்தை என் தாயார் எல்லாரையும் சீர்டிக்கு அழைத்துப் போனேன். அந்தத் தடவை நான் அங்கே பதின்மூன்று நாட்கள் தங்கினேன். போய் மூன்றாவது நாள் குழந்தை சௌக்ய மடைந்தது. பதின்மூன்றாவது நாள் வரையில் எனக்குத் திரும்பிப் போக பாபா அனுமதி கொடுக்கவில்லை. ஒரு விஷயத்தையும் பற்றி நான் அவரைக் கேட்கவில்லை. அவர் என் தாயாரிடம், "நானும் அவனும் எழு நூற்றாண்டுகளாகச் சம்பந்தப்பட்டிருக்கிறோம்" என்று சொன்னார். "நான் அவனை மறக்க மாட்டேன். அவன் 2000 மைலுக்கு அப்பால் இருந்தாலும் அவனை எப்பொழுதும் நான் மறக்க மாட்டேன். அவனில்லாமல் ஒரு துளியும் கூட நான் புசிக்கமாட்டேன்" என்று பாபா சொன்னார். பிறகு அவர் அனுமதியின் பேரில் நான் நாசிக்குக்குப் புறப்பட்டேன். நாங்கள் வசித்துக்கொண்டிருந்த

தாதருக்குத் திரும்பினோம். என் மனைவிக்குக் காலரா வந்தது. வைத்தியர் அவள் பிழைப்பதரிது என்று கைவிட்டு விட்டார். நான் பாபாவின் உதியும் தீர்த்தமும் அவளுக்குக் கொடுத்தேன். தத்தமந்திரத்திற் கருகில் நான் பாபாவைப் பார்த்தேன். (அது என்னுடைய தாதர் வீட்டிக்கெதிரில் இருக்கிறது.) அவர் உதியையும் தீர்த்தத்தையும் அவளுக்குக் கொடுக்கச் சொன்னார். கொடுத்தேன். அரைமணி நேரத்தில் அவள் உடம்பில் போதுமான வெப்பம் உண்டாயிற்று. வைத்தியரும் அவள் பிழைப்பாளென்றார். அவளும் பிழைத்தெழுந்தாள். அது முதற்கொண்டு நான் பாபாவை அடிக்கடிப் போய்ப் பார்த்தேன். பாபாவின் உத்தரவின்மேல் சீர்டியில் அதிக நாள் இருந்தேன். சில வேளைகளில் H. S. தீக்ஷிதரை எழுதும்படி சொல்லி பாபா என்னை அங்கு வரும்படி செய்வார். நான் தீக்ஷிதருடன் அடிக்கடி பாபாவைப் போய்ப் பார்த்திருக்கிறேன்.

நான் லௌகீக லாபமடைவதற்காக பாபாவிடம் போகவில்லை. நான் ஏழை தான். இளவயதில் தந்தை யிழந்தவன்.

நான் முன் செய்து வந்த உபாஸனையைச் செய்து வரும்படி பாபா சொன்னார். எனக்கு விஷ்ணுவைப் பூசை செய்து பிரார்த்தனை செய்வதில் விருப்பமுண்டு. அதையே நான் செய்தேன். அவர் பலமுறை என்னை இரண்டு ரூபாய் கொடு என்று கேட்டு வந்தார். ஒரு முறை "எதற்காக எப்பொழுதும் இரண்டு ரூபாய் வேண்டும் என்கிறீர்கள்" என்றேன். அப்பொழுது அவர், "இந்த ரூபாய்களல்ல நான் வேண்டுவது. எனக்கு நிஷ்டையும் (நம்பிக்கை) பொறுமையும் வேண்டும்" என்றார். நான் நம்பிக்கையையும் பொறுமையையும் கொடுத்ததாகச் சொன்னேன். எனக்கு அவரிடம் பூரண நம்பிக்கையுண்டு. நான் முன்னேற்றத்திற்குப் பொறுமையாகக் காத்

திருந்தேன். "நம்பியிரு. நீ செய்த வாக்குகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதில் கண்டிப்பாயும் பொருப்பாயு மிரு" என்றார். "நீ எப்பொழுதும் உண்மையைக் கைக்கொள்ள வேண்டும் அப்படியிருந்தால், நான் உன்னிடமே இருப்பேன். நீ எங்கிருந்தாலும் எந்த வேளையிலும் நான் உன்னுடன் இருப்பேன்" என்றார். நான் என்னால் கூடியதைச் செய்வேன்" என்று வாக்குக் கொடுத்து, என் மனதை யடக்குவதில் அவர் உதவி வேண்டினேன். "அதை எனக்குச் செய்துவையும்" என்றேன். அவர் ஒப்புக்கொண்டார். இது எல்லாம் என்னுடைய முதல் தடவையிலேயே யாகும்.

பிறகு அவர் என்னை சொந்த வீடு வாங்கிக் கொள்ளச் சொன்னார். எனக்கு ரூ. 35 தான் சம்பளம். அவர் அருளால் மூன்று வருஷத்தில் எனக்கு ஒரு வீடு கிடைத்தது. வாங்கு என்று அவர் சொன்னவுடனேயே நான் நிலம் வாங்கி வீடு கட்ட ஆரம்பித்தேன். மூன்று வருஷத்தில் பண்ட்ராவில் வீடு கட்டி முடிந்தது. அதில்தான் இப்பொழுதும் நான் வசித்து வருகிறேன். "யாரிடமிருந்தும் ஒரு தம்பிடியும் கேட்காதே. நானே உனக்கு உதவுகிறேன்" என்றார். நான் கட்டுவதில் முதலில் தாமதமாக இருந்தேன். நான் தாமதம் செய்ததற்காக என்மீது கல்லெறிந்தார். நானு சாகிப் சந்தோர் கரும்—H. S. தீக்ஷித்தும் எனக்குக் கட்டிக் கொடுப்பதாகச் சொன்னார். ஆனால் பாபா அதற்கனுமதிக்கவில்லை. அப்பொழுது நான் ஆபீசிலிருந்து ரூ. 500 கடன் வாங்கி வீட்டைக் கட்டினேன். அது வயலில் தனி வீடு. அவர் அங்கே உட்கார்ந்துகொண்டு என்னையும் என் சிறு மனைவியையும் கார்த்துக் கொண்டிருக்கிறதாக பாபா சொன்னார். ஆகையால் நான் தங்கினேன். 1920-ல் என் மனைவியை நான் இழந்

தேன். அவர் அடிக்கடி உண்மையைக் கடைப்பிடி என்று வற்புறுத்தினார்.

இப்பொழுது நான் பாபா சமஸ்தானத்தில் கூட்டுப் பொக்கிஷதார். பாபா மறைந்த பிறகு அவர் என் முன் தோன்றி சீர்டிக்குப் போய் அங்கே இருந்து சமஸ்தான வேலைகளைக் கவனிக்கச் சொல்லுவார். நான் செய்ய வேண்டிய திலும் செய்து கொண்டிருப்பதிலும் அவர் என்னைக்கொண்டு காரியம் நடத்துவதை நான் காண்கிறேன்.

அவர் என்னை காகா சாகிப் தீக்ஷித் (அதாவது H.S.D.) உடன் ஒத்துழைக்கும்படி சொன்னார். காகா சாகிபை என் னுடன் ஒத்துழைக்கச் சொன்னார். நாங்கள் நெருங்கி வேலை செய்தோம்.

அவர் ஒருவனையும் தன்னை மாத்திரம் பஜிக்கும்படி சொன்னதில்லை. "சங்கரரையோ விஷ்ணுவையோ நீ வழக் கப்படி துதிப்பது போல வழிபட்டுவா, என்றார். சிவனோ விஷ்ணுவோ அல்லது அம்பிகையோ எந்த தெய்வத்தை பக்தர் பூசிப்பாரோ அந்த உருவத்தில் அவருக்கு பாபா தர்ச னம் கொடுப்பார்.

1913-ல் என் தாயார் என்னை பண்டரிபுரத்திற்குப் போகவேண்டும் என்று கட்டாயப்படுத்திக் கொண்டிருந்தாள். அதற்கு வேண்டிய அனுமதியைப் பெற நான் பாபாவிடம் பேசவில்லை. பாபாவே அந்த விஷயத்தைப் பற்றி கவலை யெடுத்துக்கொண்டு எப்பொழுது அவள் பண்டரிபுரத்திற்குப் புறப்படப் போகிறாள் என்று கேட்டார். அப்பொழுது அந்த மசூதியிலேயே என் மனைவிக்கும் தாயாருக்கும் தன்னையே ருக்குமணியாகவும் விட்டோபாவாகவும் தர்சனம் கொடுத்தார் பாபா. அவர்கள் அதனால் திருப்தி யடைந்ததால் பண்டரி புரம் போக விரும்பவில்லை. அதன் பிறகு அவர் அடிக்கடி

எப்பொழுது பண்டரிபுரம் போவாய் என்று அவளைக் கேட்பார். அதன் பிறகு அவள் எப்பொழுதும் அவளுடைய கடவுள் சீர்டியில் இருக்கிறதென்றும் அவளுக்கு சீர்டியே பண்டரிபுரம் என்றும் சொல்வாள். என் மனைவி பிரசவத்திற்கு முன் வியாதியாய் இருந்தாள். பாபா கனவில் தோன்றினர்; அவளுக்கு உதி கொடுத்தார். அவள் எழுந்திருந்து, "பாபா வந்திருக்கிருர். துனியிலிருந்து சுடச்சுட உதியை என்மீது தடவுகிருர். என் உடம்பு எரிகிறது. எழுந்திரு" என்ருர். அவள் வியாதி நீங்கிற்று. இது போல பாபா அநேக முறை தோன்றி இருக்கிருர்.

அதிக கஷ்டத்தில் இருக்கையில் அவர் படத்தின் முன் என் வீட்டில் நான் கதறுவேன். அவர் என் முன் தோன்றி எனக்குத் தேறுதல் சொல்வார்.

நானு சாகிப் சந்தோர்கர் எனக்கு இது சொன்னர். ஜாம்நரில் அவர் பெண் பிரசவ பீடையில் இருந்தாள். பாபா உதியை ஒரு மனிதனிடம் அனுப்பி யிருந்தார். ஒரு டாங்கா ஓட்டுபவனும் குதிரைகளும் (இவர் அனுப்பவில்லை) அந்த மனிதனை யழைத்து வந்து மறைந்து போயின. அந்த மனிதர் இராம்கிர் கோஸாவி இன்னும் சீர்டியில் உயிருடன் இருக்கிருர். பாபா அவரை பாபுகிர் என்று அழைப்பது வழக்கம். நாநாவுக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும். அவர்கள் பாபு, பாப்பு. அவர்கள் சந்தோர்கர்வாடா, கல்யாணில் இருக்கின்றனர். பெண் பூனுவில் இருக்கிருள். நாநாவுக்கு சம்ஸ்கிருத் பிரக்ஞை உண்டு என்ற கர்வம் இருந்தது. ஸாயி பாபா "தத்வித்தி" ப.கீ. (4) 34 முதலான அடிகளை விளக்கச் சொன்னர். அவர் விளக்க, பாபா அவரைத் திருத்தி நன்ருக விளக்கிக் காட்டினர்.

என் எதிரில் ஸாயிநாதர் அத்வைதம் முதலான விஷயம் பேசுவதில்லை. அவர் எப்பொழுதும் ' அல்லா காப்பாற்றுவார்.' கடவுள் நம்மை எல்லாம், ஏழை முதலானவர்களையும் காப்பாற்றுகிறார்." என்பார்.

உன் எதிரில் ஸாயி தாம் எல்லாவற்றிலும் இருப்பதாகச் சொன்னதில்லை. ஆனால் அவர் அடிக்கடி கடவுளுடன் ஒன்றாயிருப்பதாகக் காட்டி யிருக்கிறார்.

அவர் சொன்னார், "மசூதிக்குள் யார் வந்தாலும் அவன் கோரிக்கை நிறைவேறும்." "நல்ல வழியில் நடந்தால் உண்மையில் நல்லதே உண்டாகும்." அவர் பிராணாயாமம், குண்டலினி முதலியவற்றைக் குறித்துப் பேச நான் கேட்டதில்லை. நானு சந்தோர்கர் "பாபாவுக்கு சம்ஸ்கிருதம் தெரியும். பாகவதம் முதலிய புத்தகங்களை எடுத்து ஜனங்களுக்கு அவருக்குத் தகுதியான பாகத்தை எடுத்துக் காட்டுவதுண்டு." என்று சொன்னார்.

பாபாவின் முன்னறிவும் அவர் மரணமும்

1918 தஸராவுக்கு இரண்டு வருஷங்களுக்கு முன் அதாவது 1916 தஸராவில் பாபா அவருடைய எல்லாக் குப்னிகளையும், கைகுட்டைகளையும் எரித்தார். அப்பொழுது அவர் ' இது நான் எல்லையைக் கடக்கும் தினம்' என்றார். அந்த தினத்தில் ஜனங்கள் சமீவிருக்ஷத்தைப் பூசை செய்து சமீ இலையை ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொண்டு தங்கள் ஊர் எல்லையைக் கடப்பது வழக்கம்.

ஜனங்கள் இந்த விசேஷ தினத்தில் ஏன் உடைகளைக் கொளுத்த வேண்டும் என்று பாபாவைக் கேட்டனர். அவர் ' இது நான் எல்லையைக் கடக்கும் தினம்" என்றார். இரண்டு

மணி நேரம் கழித்து அவர் புது உடைகளை அதாவது குப்னி, லங்கோட், தலைக்குக் கட்டும் துணி, இவைகளை யணிந்தார்— எல்லா ஜனங்களும் அந்த தினத்தில் புதுத்துணி கட்டுவது வழக்கம். அவர் டஜன் கணக்காக அவைகளைத் தயாராக வைத்திருப்பார்.

இராமச்சந்திர தாதா படேல் அப்பொழுது வியாதியாய் இருந்தார். "அந்த வம்சத்து தலைவர் தாத்யா படேல் இந்தத் தினத்தில் இரண்டு வருஷம் கழித்து போய்விடுவார்" என்று பாபா சொன்னார். அதற்கு இரண்டு வருஷமான பிறகு தாத்யா அதிக வியாதியாய் இருந்தார். தஸராவுக்கு ஒரு வாரத்திற்கு முன் பாபாவும் வியாதியாய் இருந்தார். பாபா உடலை விட்டார். தாத்யா சொஸ்தமானார். ஆகையால் தாத்யாவைக் காப்பாற்றுவதற்கு பாபா தன் உயிரைக் கொடுத்தார் என்று ஜனங்கள் சொல்லுவர். மற்ற சாதுக்கள் வாழ்விலும் இந்த மாதிரி சம்பவங்கள் காணலாம். இப்பொழுதும் பாபா உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். இதோ ஒரு உதாரணம்.

1932-ல் எனக்கு கீல் வாயுவும் வந்து அதிக ஆபத்தாக இருந்தது. அப்பொழுது யமதூதர்கள் என்னருகில் வரக் கண்டேன். ஆனால் ஸாயி பாபா வந்தார். என் படுக்கைமீது உட்கார்ந்தார். என் முழங்கால்மீது கையை வைத்துக் கொண்டார். யம தூதர்கள் என் படுக்கையையாவது என்னையாவது தொடாமல் தடுத்தார். நான் பிழைத்தேன்.

நான் அதிக முன்கோபி. "யாராவது வந்து உன்னைத் திட்டினால் அல்லது தண்டித்தால் அவனோடு சண்டை போடாதே. உன்னால் பொறுக்க முடியாமற் போனால் இரண்டொரு வார்த்தை பேசு, அல்லது அந்த இடத்தை விட்டுப் போய்விடு. ஆனால் அவனோடு சண்டையிட்டு அது மாதிரி

நடவாதே. நீ மற்றவருடன் சண்டை செய்தால் எனக்குப் பிடிக்கவில்லை. மனம் வெறுக்கிறது" என்றார்.

இதை அவர் என்னிடமும் பலரிடமும் பல தடவை சொல்லி யிருக்கிறார்.

ஸாயி மரணத்திற்கு பன்னிரண்டு பதினைந்து நாட்களுக்கு முன் அவர் என்னையும் தீக்ஷித்தையும் பம்பாய்க்குத் துரத்திவிட்டார். அவர் "நான் அப்பாற் செல்லுகிறேன். நீங்களும் பின்னால் வாருங்கள்." என்றார். அவர் மசூதியில் இருந்து எனக்குப் போக அனுமதி கொடுத்தார். அப்பொழுது, "என் சமாதி பேசும், என் பெயரும் பேசும். என் களிமண் உனக்கு பதில் சொடுக்கும்" என்று சொல்லி போங்கள் போங்கள் என்றார். நாங்கள் மாட்டு வண்டியில் போனோம். அவருக்கு அப்பொழுது வியாதியே ல்லை.இ அவர் இறப்பார் என்று நாங்கள் நம்பவில்லை. அவர் முன்னாடியே இந்த வார்த்தைகளைப் பேசி யிருக்கிறார். அவற்றின் கருத்தை அப்பொழுது நாங்கள் அறியவில்லை. என் எதிரில் பாபா, வாழ்வின் நோக்கம், அல்லது முக்தி, அல்லது ஸ்வர்க்கம் என்று பேசியதில்லை.

அவர் ஒரு சமயம், "நான் என் காக்காவை விமானத்தில் எடுத்துப் போகிறேன்" என்றார்.

1926-ல் ஒரு ஏகாதசியில் பேசிக்கொண்டே மனச்சாந்தமாகவே காக்கா தீக்ஷித் திடீரென்று இறந்தார். பாபா அடிக்கடி என்னிடத்திலும் மற்றவரிடத்திலும் "நாம் ஒரு தூக்கணங் குருவியை நூலைக்கொண்டு அருகில் இழுத்துக் கொள்ளுகிறோம். அதேபோல ஆயிரம் மைலுக்கு அப்பால் இருந்த போதிலும் என்னுடைய மனிதன் இறந்தால் நான் அவனை என்னிடம் அழைத்துக் கொள்ளுவேன்" என்று சொன்னார்.

‘ஒரு மனிதனை என்னை விட்டுச் செல்லவிட மாட்டேன்’ என்று அவர் பலரிடம் சொல்லி யிருக்கிறார். ஷிர்டியில் சில பக்தர்கள் ஏகாதசியில் சாவதை நான் பார்த்திருக்கிறேன். இந்த மாதிரி அவர்களுக்கு சுவர்க்கம் கிடைத்திருக்க வேண்டும். எனக்குத் தெரிந்து, பாபா கைலாசம், வைகுண்டம், ஸ்வர்க்கம் அல்லது மோக்ஷம் என்பதை விவரித்ததில்லை.

1914, 16க்குள் ஒரு மாது பாபாவை எனக்கு எப்பொழுது நல்ல பிறப்பு’ என்று கேட்டாள்.

பாபா, ‘அடுத்த பிறவியிலாகும், என்றார். அடுத்த நாள் அவள் வாழ்வை முடித்துக்கொள்ளக் கிணற்றில் குதித்தாள். ஆனால் அவள் காப்பாற்றப் பட்டாள். சில சமயம் வரப் போகும் விஷயத்தைச் சொல்லுவார். என் வருங்காலத்தைப் பற்றி நான் ஒரு பொழுதும் கேட்டதில்லை. ‘விமானத்தில் எடுத்துப்போவது, என்றால் நற்கதியாகும்.

சகுன் மேரு நாய்க் என்பவரை சாதத்தில் கொஞ்சம் நெய்யைப் போட்டு அதில் கொஞ்சம் துனியில் போடும்படியும் மீதியைத் தம்மிடம் கொண்டுவரும்படியும் பாபா சொன்னார். அது ஸாயி இருக்கும்பொழுதேயாகும். அது முதற் கொண்டு அவர் அப்படியே செய்து கொண்டிருக்கிறார். பாபா அந்த உணவைச் சாப்பிட்டார்.

மேற்சொன்ன ஆகாரம் அவர் சொந்த வீட்டிலிருந்து கொண்டு வந்தது. அதற்கு முன் பாபாவின் நைவேத்யத்திற்கு நெய்கிடையாது. அந்த மனிதர் இன்றும் நைவேத்தியம் கொடுத்துக் கொண்டு வருகிறார். பாபா மாமிச உணவு கொள்ளுவதை நான் பார்த்ததில்லை. முஸ்லீம்கள் பிரார்த்தனை செலுத்தும்பொழுது பக்கிரிகளை விட்டு பாத்யா ஓதச் சொல்லுவார். ஒரு சமயம் அவர் என்னிடம் இருந்த எல்லாப் பழைய செப்புக் காசுகளையும் கொடுக்கச் சொன்னார்.

என்னிடம் இருந்த தெல்லாவற்றையும் நான் கொடுத்தேன். அவற்றை அவர் என்ன செய்தாரென்று தெரியாது.

சத்தம் பண்ணுமல் இருக்கும்படி கெட்டியாகத் துணியில் முடிந்து அவர் காசுகளையெல்லாம் ஜோபியில் வைத்திருந்தார். அவர் பக்கத்துப் பையில் வைத்திருந்தார்.

அவர் என்னை தக்ஷிணை கேட்டார். எல்லாவற்றையும் நான் கொடுத்துவிட்டேன். ஒரு சமயம் என் கையில் ஒரு காசும் இல்லை என்று நினைத்தேன். அப்பொழுது பாபா "உன் பையில் இன்னும் ஒரு இரண்டணு இருக்கிறது பார்" என்றுர், நான் பார்த்தேன். அதையும் கொடுத்துவிட்டேன்' இந்த மாதிரி பலருடைய காசுகளை அடியோடு ஒழித்து விடுவது அவர் வழக்கம். எந்த எண்ணத்துடன் அவ்வாறு செய்கிருரென்று எனக்குத் தெரியாது. சில மனிதர் என் இவ்வளவு பணம் கேட்கிறீர் என்று அவரைக் கேட்டார். பாபா "நான் எல்லாரையும் கேட்கிறதில்லை. பக்கிரி (கடவுள்) காண்பிக்கிறவரிடம்தான் நான் கேட்கிறேன். அதற்குப் பதிலாக அந்த மனிதனுக்கு பத்து மடங்காக நான் கொடுக்க வேண்டியிருக்கிறது. என் சொந்த உபயோகத்திற்காக நான் பணத்தை எடுக்கிறதில்லை. எனக்குக் குடும்பம் இல்லை" என்றுர். பாடகர்கள் பக்கிரி முதலியவர்களிடம் அவர் அந்தப் பணத்தை தாராளமாகக் கொடுப்பார். துவாரகா மாயியில் துனிக்காக ஏராளமான கட்டை கொண்டுவருவது வழக்கம்.

1909, 11, 12 களில் பிருந்தாவனம் மசூதியில் ஏற்படுத்தப்பட்டது. நாங்கள் எல்லாரும் அதில் உதவினேம்.

1912-ல் மசூதிக்கு எதிரில் உள்ள மண்டபம் கட்டப்பட்டது.

ஸாதேவாடாவில் G. S. கபர்தே பஞ்சதசி முதலிய நூல்களை வாசித்துப் பிரசங்கம் செய்தார். உபாஸனி பாபாவும்

அதற்கு வருவர். நான் போவதில்லை. எனக்கு வேறு வேலை யிருந்தது.

பல்வந்த் இராமச்சந்திர நூல்கர் ஒரு ரிடையர்டு ஸப்-ஜட்ஜ். அவர் சீர்டிக்கு வந்து அங்கேயே வசித்து அங்கேயே இறந்தார்.

1915-ல் ஸாயி பாபா வியாதியாய் இருந்தார். அவருக்கு காசநோய். அவர் அப்பொழுது ஒன்றும் சாப்பிடமாட்டார்.

அவர் கஷ்டப்பட்டு மூச்சு விட்டார். நான் அழுதேன். பாபா, "ஏன் அழுகிறாய்?" என்றார். உமது இந்த ஸ்திதியைப் பார்க்க முடியவில்லையே என்றேன். "பயப்படாதே. இரண்டு அல்லது 4 நாட்களில் எனக்கு சுகமாகும். அல்லா இந்த வியாதியை உண்டாக்கியிருக்கிறார். அதற்குள் அது சரியாகிவிடும். நீ அழவேண்டாம். இரண்டு மூன்று நாட்களாக உன்னை நினைத்துக்கொண்டிருந்தேன். உன்னை வரச் சொல்லி எழுதும்படி காகாவிடம் சொன்னேன்" என்று சொன்னார்.

காகா எழுதவில்லை. ஸாயி பாபா, நீ எழுதவேண்டாம். அவனே வருகிறான் என்றார். உண்மையில் அவர் வியாதியாய் இருக்கும்பொழுது அவர் வியாதியிலிருக்கிறார் என்று தெரியாமல் நான் போனேன்.

பொதுவாக அவர் வியாதிக்கு மருந்து எப்பொழுதும் சாப்பிடுவதில்லை. வியாதியில்கூட பக்தர் மீது சாய்ந்துகொண்டு அவர் பிச்சையெடுக்கும் வீட்டுக்குப் போவார். அவர் அங்கே பிச்சையெடுத்துவிட்டு வருவார். ஆனால் அதைச் சாப்பிடமாட்டார். அந்த வியாதியில்கூட அவர் பிச்சையெடுப்பது, கால்வாய்க்குப் போவது என்ற வழக்கத்தை விடவில்லை.

ஒரு நாள், அவர், வியாதியாய் இருக்கையில் படிக்கட்டு வழியாக ஒரு வீட்டு மெத்தையில் ஏறினார். அங்கிருந்து

அடுத்த வீட்டு மெத்தைக்கும், அங்கிருந்து இராதாகிருஷ்ண ஆயி வீட்டுக்கும் போனார். அங்கிருந்து மெத்தை விட்டு இறங்க ஒரு மனிதன் ஏணி ஒன்றை தூக்கிக்கொண்டு வந்தான். அதற்காக பாபா 3 அல்லது 4 ரூபாய் கொடுத்தார். பாபா அப்பொழுது, "ஒருவன் உழைப்பையும் கூலி கொடுக்காமல் வாங்கிக்கொள்ளக் கூடாது" என்றார். இதை யெல்லாம் நான் பார்த்தேன். நோயாளிநாற்காலிகூடக் கொண்டு வந்தனர். ஆனால் பாபா அதை உபயோகப்படுத்தவில்லை. மாலேகான்கர் பகீர் பாபா எல்லாப் பணத்தையும் பெற்றுக் கொண்டார்.

1920-ல் என் மனைவி இன்புளுயன்ஸாவால் அதிக வியாதியாய் இருந்தார். அவள் சீரடிக்கு இராம நவமிக்குப் போக முடியவில்லை என்று வருந்தினாள். அந்த இரவு பாபா அவர் கனவில் வந்தார். 'அழாதே' நான் இராம நவமிக்கு அழைத்துப் போகிறேன்" என்றார்.

அடுத்த நாள் அவள் கொஞ்சம் சௌக்கியமடைந்தாள். இந்தக் கனவை என்னிடம் சொன்னாள். வியாதி இன்னும் இருந்தது. இராம நவமி யன்று அவள், 'பாபா' 'பாபா' என்று கதறிக்கொண்டே இறந்தாள்.

இராம நவமி கொடி உற்சவங்களில் பகல் 10 முதல் 12 மணி வரையில் இராம ஜன்மத்திற்கு இந்தி கீர்த்தனையுடன் ஊர்வலம் ஆரம்பிக்கிறது. அதன் பிறகு கொடிகளை நாட்டுவார். பிறகு முஸ்லீம்கள் கொரானை வாசிப்பார். அவர்கள் ஸாயி பாபா செருப்புகளைத் தூக்கிக்கொண்டு ஊர் வலமாகப் போவர். இந்துக்களாகிய நாங்களும் அதன் பின் செல்வோம். நாங்கள் கொடி ஊர்வலம் போகும்பொழுது அவர்களும் வருவர். ஆகையால் ஆரத்தி காலத்தில் ஸாயி

பாபா இந்துக்களுக்கும், மகம்மதியருக்கும் உள்ள வித்தியாசத்தை ஒழிக்க ஜன்மமெடுத்திருக்கிறார் என்று பாடுகிறோம்.

அவர் காதில் தொளையிருந்தது. அவர் துணியில்லாமல் ஸ்நானம் செய்யும்பொழுது அவருக்கு ஸுந்நத் ஆகவில்லை என்று நான் கண்டேன்.

மேகா, ஸாயிநாதரை ஒரு காலில் நின்றுகொண்டு 'சங்கர், சங்கர்' என பூஜைசெய்தார். மேகா ஸாதேவாடாவில் குடியிருந்தார். பாபா அவர் கனவில் திரிசூலம் ஒன்றை அந்த வாடா சுவற்றில் போடச் சொன்னார். மேகா அப்படியே செய்தார். கொஞ்ச நாள் பொறுத்து அதனுடன் ஒரு லிங்கத்தைச் சேர்த்தனர். ஸாயி பாபா உத்தரவு கொடுக்க அது இன்னும் அங்கேயே இருக்கிறது. அதை மேகா பூஜை செய்தார்.

மேகா ஒரு சம்பவத்தைச் சொன்னார். அவர் ஸாயி பாபாவிற்கு கங்கா, அதாவது கோதாவரி ஸ்நானம் பண்ணி வைக்க எண்ணினார். பாபா, "இந்த தலையை மாத்திரம் நனை. தலைதான் முக்கிய அங்கம். அதன்மேல் கொஞ்சம் ஜலத்தைப் போடு" என்றார். மேகா கோபர்காமுக்கருகிலுள்ள கோதாவரிக்குப் போய் ஒரு குடம் நிறைய ஜலம் கொண்டுவந்தார். அதையெல்லாம் ஸாயி பாபாவின் பேரில் ஊற்றினார். இருந்தாலும் தலை மாத்திரம்தான் நனைந்தது. துணிகள்கூட நனையவில்லை. நான் இதைப் பார்க்கவில்லை.

ஸாயி பாபா ஒன்றிரண்டு முறை பாட்டு பாடுவதை கேட்டிருக்கிறேன். பாட்டைக் கேட்பதில் அவருக்குப் பிரியம்.

ஸாதேவாடாவில் பாபுஜோக் ஏகநாத் பாகவதம் வாசிப்பது வழக்கம். அங்கே நாங்கள் போவதுண்டு. ஆனால் சில சமயம் பாபா சொன்ன விஷயமே அங்கே பிரசங்கஞ் செய்யப்படும். இந்த விதமான அனுபவங்கள் எனக்குப் பல உண்டு. ஒரு சம்பவம்கூட எனக்கு ஞாபகம் இல்லை.

1936 மே மீ 5உ

அதிகாலையில் ஒரு கம்பத்தில் சாய்ந்துகொண்டு ஸாயி பாபா தெற்கே பார்த்துக்கொண்டு தூனி யருகில் நிற்பார். அவர் ஏதோ செய்துகொண்டிருப்பார். என்ன என்று சொல்ல முடியாது. ஐம்பதடிக்குக் கிட்டே கூட ஜனங்களைப் போக விடுவதில்லை. வேலைக்காரர்கள் சாம்பலை எடுத்து தூனியில் புது விறகு போடுவது முதலான வேலையை வழக்கம் போல் செய்வது. அவர்களைப் போல அருகில் வேறு ஒருவரும் போகக் கூடாது. 'யாதே ஹக்' போன்ற வார்த்தைகளை அவர் சொல்வது வழக்கம். கொஞ்ச தூரத்தில் அவைகள் காது கேட்காது.

அல்லா மாலிக் அல்லா வாலி ஹை அதாவது கடவுள் பிரபுவும், காப்பவரும் ஆவார் என்று அடிக்கடி பாபா சொல்வது வழக்கம். ஒரு சமயம் ஆபீஸி லிருந்தும் என் தாயினிடம் இருந்தும் சீர்டிக்குப் போக உத்தரவு பெற்றேன். அடுத்த நாள் சாயந்திரம் நான் சீர்டிக்குப் புறப்படவேண்டும். ஆனால் அன்று இரவு என் கனவில் ஸாயி பாபா வந்தார். 'வாதே' என்றார். நான் ஏன் என்று ஆச்சரியப்பட்டேன். நான் புறப்பட வேண்டியதற்கு அடுத்த நாள் ஒர்க் ஷாப்பில் கூலிகள் வேலை நிறுத்தம் செய்தனர். நான் முதலில் நினைத்தபடி முதல் நாள் இரவு ஊருக்குப் புறப்பட்டு இருந்தால் அந்த வேலை நிறுத்தத்திற்குக் காரணம் நான் என்று ஆபீஸர்கள் சந்தேகப்பட்டிருப்பர். எனக்குக் கஷ்டம் வந்திருக்கும். அதிலிருந்து ஸாயி பாபா என்னைக் காப்பாற்றினர்.

யசவந்த ராவ் என்பவன் இஞ்சினீயர் ரகுநாத் முகுந்தர் பேரப்பிள்ளை. 1911 அல்லது 1912-ல் ஆஷாடகுரு பௌர்ணமியில் அவன் என்னுடன் சீர்டிக்கு வந்தான். அப்

பொழுது சீர்டியில் காலரா அதிகம் இருந்தது. நான் வருவதற்கு முன் அவன் திரும்பி வர விரும்பவில்லை. ஆனால் பாபா அவனுக்கு உதியைக் கொடுத்து அவனைப் போகச் சொன்னார். அவன் புறப்படவில்லை. பாபாவின் அனுமதி கிடைத்தபடியால் போய்விடு என்று நான் சொன்னேன். இருந்தும் அவன் தயங்கினான். அன்றிரவு அவனுக்குக் காலரா உண்டாயிற்று. மறுநாள் காலையில் அவன் இறந்தான்.

மேகா இறக்கும்போது ஸாயி ப்பாபா அவரிடம் போனார். அங்கு அழுதார், பிணத்தின்மீது புஷ்பங்களைப் போட்டார். மேகாவின் பிணம் எரிக்கப்பட்டபொழுது பாபா ஸ்மசானத்திற்குப் போனார். சாவதற்கு முன் இரண்டு மூன்று நாட்கள் மேகா வியாதியாய் இருந்தார். பாபா அப்பொழுது அவருக்கு உதி கொடுப்பது வழக்கம்.

ஒரு சமயம் மாலை 4-30 மணியான பிறகும் பம்பாய்க்குப் போகக் கூடாதென்று என்னை தடுத்தார். கோபர்காமிலிருந்து மன்மாடுக்கு கடைசி வண்டி மாலை 6-30க்கு புறப்படுகிறது. அன்று சந்தை (திங்கள்). ஒரு மாட்டு வண்டியைப் பிடித்துக் கொண்டேன். 7-45 மணிக்கு கோபர்காமுக்கு வந்தேன். ரயில் போய்விட்டது. எப்படி இருந்தபோதிலும் 8-15 மணிக்கு அன்று மாத்திரம் ஒரு ரயில் வந்தது. அதில் நாங்கள் மன்மாட் போனோம். அங்கிருந்து வீடு போனோம். அந்தக் காலத்தில் மன்மாட்டிலிருந்து கோபர்காமுக்கு 6-30 மணிக்குமேல் வண்டிகள் கிடையா.

பாபாவைப் பார்த்த முதல்தடவையிலேயே அவர் 'சாலா'வுக்கு என்னைப் போகச் சொனார். தீக்ஷித் "சாலா", என்பது ராதாகிருஷ்ண ஆயி வீடு என்றார். நான் அங்கே போனேன். அவள் கதவைத் திறக்கவில்லை. ஆனால் நான் யார் என்பதையும் மற்ற சங்கதிகளையும் கதவு திறக்காமலே

அவள் விசாரித்தாள். நான் பதில் சொன்னேன். அவள் என்னை தமது சாலைக்குள் பிரவேசிக்க விடவில்லை. பத்து நிமிஷம் காத்திருந்தேன். பிறகு மசூதிக்குப் போனேன். சாலாவுக்குப் போனாயா என்று பாபா கேட்டார். நான் போனதும் ஆயி என்னைக் கதவைத் திறவாமல் வெளியில் நிறுத்தியதையும் சொன்னேன். என்னை மறுபடியும் போகச் சொன்னார் பாபா. நான் போனேன் ஆயி கதவைத் திறந்து என் பாதத்தில் விழுந்து கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அழுதுகொண்டிருந்தாள். எனக்குக் கலவரம் உண்டாயிற்று. அவள் குணம் அப்பொழுது எனக்குத் தெரியவில்லை. அந்த தினம் முதற்கொண்டு அவள் சாகிற வரையில் அவள் என்னை நேசித்துத் தாய்போல் அன்பாயிருந்தாள். அது முதற்கொண்டு அவள்தான் எனக்கு எல்லாமாய் இருந்தாள். ஆயி சொன்னபடி சீர்டியில் தங்கின ஒவ்வொரு நிமிஷமும் நான் பாபாவுக்குத் தொண்டு செய்வதில் கழித்தேன். அனேகமாக அவள் வீட்டிலும், அடிக்கடி மசூதியிலும் வேறு இடத்திலும் பகல் முழுவதும் கஷ்டப்பட்டு வேலை செய்யச் சொல்வாள்.

இராதாகிருஷ்ண ஆயி ஒரு விசித்திர மனுஷி. அதிக உருக்கத்துடன் மனதைக் கவரும்படி அவள் பாடுவாள். திடீரென்று அவள் சிரிப்பாள். அல்லது கண்ணீர் விட்டுக் கதறுவாள். தொண்டை கம்மி மெதுவாகப் பாடுவாள் அல்லது அழுதுகொண்டு அடியோடு பாட்டை நிறுத்தி விடுவாள்.

என் லீவு ஆன பிறகும்கூட பாபா என்னை சீர்டியில் இருக்கச் சொல்வர். 1912-ல் அவர் அது மாதிரி நிறுத்தினார். சாமா அல்லது யாராவது “அவர் எஜமான் கோபித்துக்கொள்ளப் போகிறார். அவர் போகட்டும்” என்பார். பாபா, ‘நான் தான் அவனுடைய எஜமான்’ என்பார். என்னை நிறுத்தி விடுவார். இந்த மாதிரி அந்த வருஷம் லீவுக்குமேல் அதிக

மாகவே நின்று வந்தேன். ஒரு தடவை அந்த மாதிரி நின்று விட்டு ஒரு வியாழக்கிழமை 1 மணிக்கு ஆபீஸுக்குப் போனேன். அந்தப் பட்டரை அதிகாரி லீவ் இல்லாமல் நின்றதற்காக என்னைக் கண்டித்தார். நான் நின்றதைப் பற்றி மேலதிகாரிக்கு எழுதி விட்டார். நான் என் வேலையை ராஜி நாமா செய்தேன். என் டிபுடி ஸுபரிண்டண்டு வில்ஸன் என்னைக் கூப்பிட்டார். போனேன். "எங்கு போயிருந்தாய்" என்று கேட்டார். நான் சீர்டிக்குப் போயிருந்ததாகச் சொன்னேன். அவருக்கு எல்லாம் தெரியும். அவர் என் ராஜிநாமா கடிதத்தைக் கிழித்து குப்பைக் கூடையில் போட்டுவிட்டார். பட்டரை அதிகாரிக்கு இதனால் அதிருப்தி. ஆனால் எனக்குக் கெடுதல் செய்ய அவருக்கு அதிகாரம் இல்லை. வில்ஸன் துரை அந்த அதிகாரியைப் பார்த்து நான் அவனுக்குக் கீழ்ப்பட்டவனில்லை என்றார். ஆறு மாத காலத்தில் என்னை வேறு வேலைக்கு உயர்த்தினார். அதில் அந்த அதிகாரி என் கீழ் அதிகாரியானார்

17உ அக்டோபர் 1936

ராவ் சகேப் யசவந்த் ஜனார்த்தன் கால்வன்கர், B. A., மிராசுதார், பம்பாய் சிக்ரடேரியட்டில் ஹோம் டிபார்ட்மெண்டு ஸூபரிண்டெண்டண்டு 51 வயது. பாண்ட்ரா, டர்ணர் ரோட்.

முதல் தடவை 1911-ல் நான் ஸாயி பாபாவைப் போய்ப் பார்த்தேன். என் மாமனார் தாபோல்கரும் மற்ற உறவினரும் போனதால் நான் போனேன். அவர் ஒரு சாது என்று எனக்குத் தெரியும். காம்யார்த்தமாக நான் போகவில்லை. 4 அல்லது 5 முறை போனேன். ஆனால் கொஞ்சங் கொஞ்சமாக எனக்கு உத்ஸாஹம் அதிகமாயிற்று. அவர் என் கனவில் தோன்றி இரண்டு ரூபாய் தக்ஷிணை கேட்டார். நான் விழித்ததும் அதை அனுப்புவதென்று தீர்மானித்தேன். பாபாவுக்கு இரண்டு ரூபாய் மணியார்டர் செய்தேன். அந்தக் கனவில் (1) நேர்மையையும் தூய்மையையும் கைவிடாதே. (2) அன்ய ஸ்திரீகளைக் காதலிக்காதே. பரிசுத்தனாயிரு என்று சொன்னார். அதிக ஜாக்கிரதையுடனும் ஊக்கத்துடனும் அந்த இரண்டு சாஸனத்தையும் கவனித்து வந்தேன். பிறகு 1917 லோ என்னமோ. நான் சீர்டிக்குப் போனபொழுது அவர் கையை என் தலைமேல் வைத்தார். அதனால் எனக்கு விசித்திரமான உணர்ச்சி உண்டாயிற்று. என்னையும் சுற்றியுள்ளதையும் நான் மறந்தேன், ஆனந்த ஸாகரத்திலாழ்ந்தேன். அங்குள்ள மற்றவர்களிடம் என்னைப் பற்றி பாபா சொல்லிக் கொண்டிருந்தாராம். "இவன் யோக்கியன் பரிசுத்தன். முன் ஜன்மங்களில் இந்த இந்த விதமாய் இருந்து வந்தான். இந்த ஜன்மத்தில் இந்தத் தாய் வயிற்றில் அவனை நானே அமர்த்தினேன். இப்பொழுதும் யோக்யனும் பரிசுத்-

தனுமாயிருக்கிறுன்" என பாபா சொன்னதாய் பிறகு மற்ற வர்களால் தெரியவந்தது. கிருஸ்மஸ் அல்லது வேறு விடு முறைகளில் நான் அவரிடம் போனேன். விடுமுறை முடிந்த தும் என்னை அவர் அனுப்பி விடுவார். அவரிடத்தில் எனக்கு பூர்ண நம்பிக்கை. நான் முன்னுல் சொன்னது தவிர அத் வைத அனுபவத்தையாவது, தார்மிக வைதிக் முறைகளில் வேறு போதனையையாவது அவர் எனக்குக் கொடுத்ததில்லை. நான் சீர்டிக்குப் போன ஒரு சந்தர்ப்பத்தில் "மூன்றரை முழ முள்ள இந்த உடலிற்குள் நான் அடங்கிப் போகவில்லை. நான் எங்கும் இருக்கிறேன். எல்லா இடத்திலும் என்னைப் பார்த்துவா" என்றுர்.

நான் படிப்பதெல்லாம் அவர் கட்டளைப்படிக்கே என நான் நம்புகிறேன். நான் கீதை அல்லது ஏகநாத் பாகவதத் தில் வதுஸ்கந்தம் படிப்பேன். ஆனுல் ஜோக், தீக்ஷித் முத லானவர்களை அவர் நேரில் படிக்கச் சொல்லியபடி இவைகளைப் படி என்று என்னிடம் பாபா சொல்லவில்லை. அவர் மகா சமாதியடையு முன் அவருடன் பழகி அதிகம் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்று நான் வருந்துகிறேன். அப்பொ ழுது நான் சிறுவனுயிருந்தேன். இப்பொழுது போல நான் அப்பொழுது அவ்வளவு தீவிரமாக இல்லை. அவரிடத்தில் வந் தவர்களில் ஆத்ம ஞானுனுபவம் பெறத் தகுந்தவர்களை நான் கண்டதில்லை. அத்துவைதநிலை யாரும் கோரவில்லை. அதற்கும் தாழ்மையான பதவிகளைக்கூட யடைய எவர் முயன்றுர்?

பிறகு தக்ஷிணை விஷயம். நான் முதல் அவரைக் கண்ட சமயம் அவருடைய மசூதிக்குப் போக வசதியிலிருந்து கிளம் பினேன். ஆனுல் வழியில் அவர் தக்ஷிணை கேட்பாரே என்று நினைத்துக் கொண்டேன். வசதிக்குத் திரும்பி அவருக்குக் குக் கொடுப்பதற்கு இரண்டு ரூபாய் எடுத்துக்கொண்டு

போனேன். நான் மசூதியில் அவருடன் இருந்தேன். அப்பொழுது அவர் தக்ஷிணே கேட்டார். நான் அந்த இரண்டு ரூபாயைக் கொடுத்தேன். அவர் அதற்குமேல் கேட்கவில்லே. நான் அவருக்கு சரியாய் இரண்டு ரூபாய் கொடுக்கச் சித்தமாய் இருந்தேன், என்பதை அறிந்த அவருடைய " அந்தர் ஞானத்தை "க் கண்டு களித்தேன். அவர் அந்தப் பணத்தை அன்புடன் ஏற்றுக்கொண்டதிலும் எனக்கு சந்தோஷம்.

பாபா என்னிடம் பட்சமாய் இருந்து வருகிறுர். அவர் என்னை வைத்திருக்கிற நிலேயில் இருக்க எனக்கு அதிக திருப்தி. " ஈசன் வைத்த நிலேயிலே யாமிருக்க வேண்டுமே" (கபீர்தாஸர் பாட்டு) (சுமார்) 1921-ல் என் குடும்பத்துடன் பிரயாகைக்கும் காசிக்கும் புறப்பட்டேன். பிராயகையில் என்னை எல்லாப் புண்ணிய ஸ்தலங்களுக்கும் அழைத்துப் போயினர். பாரத்வாஜாசிரமத்தில் என் மனம் உருகியது. " ஏதாவதொரு மஹான் தரிசனஞ் செய்துவை" என பாபாவை வேண்டினேன். என் வழி காட்டியிடம்கூட புண்ணிய ஸ்தலங்களேப் பார்ப்பதுடன் சாதுக்களேயும் காண வேண்டும் என்று சொல்லி யிருந்தேன். பாரத்வாஜர் ஆசிரமத்தை விட்ட கொஞ்ச நேரத்திற்கெல்லாம் எங்கள் வண்டிகளே வழி காட்டுபவன் நிறுத்திஞன். முதிர்ந்த வயதும் நீண்ட தாடியுமுள்ள மஹான் அங்கிருந்தார்.

"பல வருஷங்களுக்கு ஒரு முறை அந்த சாது பிரயாகைக்கு வருவார். அவர் மகாசாது என்று பலருக்கும் தெரியும். ஒருவரும் அவரிடம் போகக்கூடாது. அவர் பணமும் வாங்கிக் கொள்ளமாட்டார் என்று வழிகாட்டி சொன்ஞன். அப்படி சொன்னபோதிலும் என் பிரார்த்தனே இவ்வளவு சீக்கிரம் பலனடைந்ததால் எனக்கு சந்தோஷம். அதஞல் அவரருகிலேயே போனேன். அந்த சாது கோபமடையாமல் ஆசீர்வதிப்

பதுபோல கையை மேலே உயர்த்தி என்னை வரவேற்றினர். "குழந்தாய் வா" என்றார். என் வழிகாட்டி தடுத்தபோதி லும் என் மனைவி தாயார் மற்ற உறவினர் யாவரும் நெருங்கி வந்தனர். அவர்களையும் ஏற்றுக்கொண்டு ஆசீர்வாதம் செய் தார். நான் அவருக்கு என்ன கொடுக்கலாம் என்று யோசித் தேன். என் கையில் புஷ்பம், பழம் அல்லது வேறு ஏதாவது சாப்பிடக் கூடியது இல்லை. என் பையில் மூன்றணு இருந் தது. அதை அவரிடம் கொடுத்தேன். என் வழிகாட்டிக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் வழக்கத்திற்கு விரோதமாக அதை பெற்றுக்கொண்டார். அந்தக் காசுகளைப் பார்த்து சந்தோஷப்பட்டு பையில் வைத்துக் கொண்டார். ஸாயி பாபாவே இந்த வரவேற்பளித்து தக்ஷிணை வாங்கிக்கொண்ட தாக நான் எண்ணினேன்.

பாபாவின் அருளினுல் எனக்கு ஆரம்பத்தில் மனோ லபம் கிடைத்த முதல் பாரமார்த்தத்தில் அதிக கவனம் செலுத்த ஆரம்பித்தேன். 1932-ல் அதற்கு அடுத்த ஓய்வு கிடைத்தது. அப்பொழுது ஒரு கனவு கண்டேன். பாபா அந்தக் கனவில் தோன்றினுர். "உனக்கு என்ன வேண் டும் ?" என்ருர். "எனக்கு பிரேமை வேண்டும். அதுவே போதும்" என்றேன். எனக்குப் பிரேமை யுண்டாகும் என ஆசீர்வதித்து பாபா மறைந்தார். அது முதற்கொண்டு நான் தியானஞ் செய்கையிலும் வாசித்துக் கொண்டிருக்கை யிலும் மற்ற சமயங்களிலும் திடீரென்று என் உள்ளத்தில் பிரேமை பொங்கிப் பொங்கி வருகிறது.

1936 நவம்பர் மீ 5உ சீர்டி

அப்துல்லா ஜான், ஹஜாரா ஜில்லாவில் தார்பெல்லாவில் இருந்தவன், முகம்மதியன். பட்டானி சகோரிக்கு அருகில் கோராடே என்ற இடத்தில் இருப்பவன். வயது 40.

நான் பையனாய் இருக்கும்பொழுதே தார்பெல்லாவை விட்டவன். என்னை ஆதரிப்பார் யாருமில்லை. நான் வெளி நாடு சென்று மெக்கா முதலிய இடங்களைப் பார்க்க விரும்பி னேன். ஆகையால் மான்மாட் வரையில் நான் தெற்கு பக்கம் பிரயாணம் செய்தேன். அங்கிருந்து என் விஷயத்தில் சிரத் தைக் கொண்ட ஒருவர் சுலபமாக பம்பாய்க்குப் போய் அங் கிருந்து மெக்கா முதலிய இடங்களுக்குப் போகலாம் என்று சொன்னார். 1913ல் மான்மாட் போகிற வழியில் ஹரிபுரத் தில் நான் இருக்கும்பொழுது சீர்டியில் ஸாயி பாபா என்று ஒரு மகான் இருக்கிறார் என்றும் அவர் பக்கிரிகளுக்கு ஏராள மான பணம் கொடுக்கிறார் என்றும், எனக்கு விருப்பமிருந் தால் மெக்காவுக்கு அனுப்புவார் என்றும் சொன்னார். ஆகவே நான் அங்கு போனேன்.

மசூதி வாயிலண்டை நுழைந்ததுமே பாபா கட்டடத்தி லிருந்தார். அவரை நான் பார்த்தேன்; அவரும் என்னைப் பார்த்தார். எங்கள் கண்கள் சந்தித்தன. உடனே ஸாயி உண்மையில் என் குரு என்று நான் உணர்ந்தேன். நான் சீர்டியில் தங்கினேன். என்னையும் மற்ற பக்கிரிகளையும் ஏராள மாக அன்னம் கொடுத்து ஆதரித்தார். அவருடன் அங்கேயே இருந்து சுகஜீவனஞ் செய்ய நான் தீர்மானித்தேன். இது 1913ல். நான் அதிக சிறுவனானதால் வாழ்வைப் பற்றி அதிக கவலை கொள்ளவில்லை. என் மனோபாவத்தில் பாபா சகவாசத்

தால் சில மாறுதல்கள் உண்டாயின. சீர்டிக்கு நான் வரும்பொழுது இந்துக்களை என் பகைவர்களாக மதித்தேன். சற்றேறக்குறைய மூன்று வருஷ காலம் பாபாவுடன் தங்கினேன். இந்த துவேஷ புத்தி போயிற்று. பிறகு இந்துக்களைச் சகோதரரெனவே நான் மதித்துக்கொண்டு வருகிறேன். பம்பாயில் இந்துக்கள் முகம்மதியர்களையும் அவர்கள் மசூதிகளையும் அழிக்க விரும்புகின்றனர். முஸ்லிம்கள் இந்துக்களையும் அவர்கள் கோயில்களையும் அழிக்க விரும்புகின்றனர். இது விசனமான விஷயம். இருவரும் ஒருவரையொருவர் அழித்துக் கொண்டால் மற்றக் கொள்கைகளையுடைய வேறு ஜனங்கள் இந்த இருவருடைய ஸ்தானத்தையும் ஆக்ரமித்துக் கொள்வர்.

எனக்கு 22 வயது ஆனதும் பாபா மறைந்து விட்டார். ஒருவகையிலும் மத சம்பந்தமாக எனக்கு நன்மைபுரியவில்லை. நான் ஏமாந்ததாக உணர்ந்து பிரயாணஞ் செய்யப் புறப்பட்டேன். 1926-ல் நான் வடக்கு நோக்கித் திரும்பச் செல்ல விருந்தேன். மாலேகண்ட் ஏஜன்ஸியில் "ஸ்வாட்" பள்ளத்தாக்கில் அகூன் பாபா என்ற முகம்மது நபிகள் வமிசத்திலிருந்து வந்த சய்யது வகுப்பைச் சேர்ந்தவருடைய சமாதியைக் கண்டேன். லார்ட் ராபர்ட்ஸ் முஸ்லீம் கூட்டங்களையடக்க மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது அவரால் ஓரடியும் எடுத்து வைக்க முடியாமல் அகுன் பாபா தமது மந்திர சக்தியால் லார்ட் ராபர்ட்ஸை ஒரு மலையில் 3 மாதம் "நாள் பூட்டிவைத்து விட்டதாக அவருடைய சக்தியைப் பற்றி அந்தக் காலத்தில் வெகுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். நான் அவர் சமாதியண்டை ஓரிரவு படுத்தேன். ஸாயி பாபா என்னைக் கைவிட்டபடியால் அகூன் பாபா என்னை ஆதரித்து உதவவேண்டும் என்று

வேண்டிக்கொண்டேன். இரவில் எனக்கு ஒரு கனவு உண்டாயிற்று. அதில் நான் அகுன் பாபாவைக் காணவில்லை ஆனால் ஸாயி பாபாவையே கண்டேன். ஸாயி பாபா என் தலையண்டை நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். நான் படுத்திருந்தேன். பாபா என்னுடன் பேசவில்லை. நான் விழித்துக்கொண்டேன். இந்தக் கனவு என் ஞாபகத்திற்கு வந்தது. நான் இன்னும் ஸாயி பாபாவின் ஆதரவில் இருப்பதாகத் தெரிந்து கொண்டேன். அவரைத் துதியாமல் அகுன் பாபாவையே துதித்துப் படுத்தும், ஸாயி பாபா தானாகவே என் கனவில் வந்தார். 1500 மைல் தூரத்திலுள்ள பள்ளத்தாக்கில் இருக்கிறது. ஆகையால், நான் பாபா என்னை மோசம் செய்துவிட்டு நகர்ந்து விட்டாரெண்ணியது பிசகு என்று தெளிந்தேன். இங்கு திரும்பி வந்தேன். பாபாவிடம் அதிக நம்பிக்கை கொண்டேன். இப்பொழுதும் அவரிடம் எனக்கு பூரண நம்பிக்கை. 1924-ல் எனக்குக் கலியாணமாயிற்று. சீர்டியிலிருந்து நான்கு மைல் தூரத்தில் C. காராடே என்ற கிராமத்தில் என் குடும்பத்துடன் இருக்கிறேன். இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை பாபா என் முன் தோன்றுகிறார். நடந்த சம்பவங்களைப் பற்றி நான் யோசிக்கிறது. என் வாழ்வின் எளிமையைக் குறித்து நினைக்கிறது. அவர் வாழ்நாளில் பாபாவைக் கூட்டங்கள் சூழ்ந்திருக்கும். இந்தக் கும்பல்களால் மசூதியில் இடம்கூட இருக்கிறது. ஏராளமான நாய் முதலியன அவரைச் சூழ்ந்திருக்கும். இப்பொழுது அங்கு வெகு சிலர் இருக்கின்றனர். மசூதியருகில் நாய்களே காணப்படவில்லை. மசூதி காலியாயிருக்கிறது. பாபாவின் மகிமை இவ்வளவு சொற்பகாலமே இருந்து இவ்வளவு சீக்கிரத்தில் மறைந்துபோவதாய் இருந்தால், கொசுவுக்கு நிகரான என்னைப் பற்றி என்ன நினைப்பது?

பாபாவுடன் எந்த ரோகில்லாவும் இருந்ததாக நான் கண்டதுமில்லை கேட்டதும் இல்லை. பிறமதத்தினரை வெறுத்த சில பட்டாணியர் அவரிடம் வந்தார்கள், என கேள்விப்பட்டிருக்கிறேன். காலஞ்சென்ற பாபா ஸாகிப், R. A. தர்கட் அவர் கண்ட ஒரு சம்பவத்தைச் சொன்னார். ஒரு இரவில் பாபாவுக்கு பக்கத்தில் சாவடியில் அவர் தூங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது கண்டஹாரிலிருந்து மீர்ஜமான் என்பவர் அங்கு வந்திருந்தார். திடீரென்று விடியற்காலம் 3 மணிக்கு மீர்ஜமான் எழுந்திருந்தார், இந்துக்கள் அவரையும் மகம்மதிய மதக் கொள்கைகளையும் கெடுத்து விடுகிறார்கள் என்றும் பாபா உத்தரவு கொடுத்தால் கத்தியை எடுத்து எல்லா இந்துக்களுடைய கழுத்தையும் தான் அறுத்துவிட்டு பாபாவை விடுவிப்பதாகவும் சொன்னார். R. A. தர்கட் அதைக் கேட்டு பயந்தார். "நிரபராதிகளைக் கொலைசெய்ய எண்ணுகிறான பாபி" என்று ஆச்சரியப்பட்டார். ஸாயி பாபாவோ தானும் பைத்தியம் என்றும் அங்கே தன்னை பூசைசெய்யும் இந்துக்களும் பித்துப் பிடித்தவர் என்றும், அவர்கள் (முகம்மதிய மதக் கொள்கைக்கு விரோதமாக) தன்னை பூசிப்பது தன் பிழையால் தானென்றும், யாரையாவது கழுத்தை யறுக்க வேண்டுமானால், தன் கழுத்துதான் அறுக்கப்படவேண்டும். இந்துக்களுடையது அல்ல என்றும் சொன்னார். அதன்பிறகு மீர்ஜமான் பேசாமல் அடங்கி விட்டான்.

நாகப்புரியிலிருந்து இதர மததுவேஷி, அப்துல்லாகான் என்ற முகம்மதியன் ஒருவன் வந்து இருந்தான். அவன் பாபாவுடன் மூன்று நான்கு மாதங்கள் இருந்தான். அவன் பத்திரிகைக்கு சமாசாரம் அனுப்புகிறவன். மகாத்மா காந்தி, புட்டி முதலியவர்களைத் தெரியும். அவன் இந்துஸ்தான்வாசி

பட்டாணி. அவன் ரோகில்லா ஜாதி அல்ல. அவன் ஆமத் நகரில் இறந்தான். அவன் சீர்டியில் இருக்கும்பொழுது பாபா தன்னை ஏமாற்றியதாக சில சமயம் குற்றஞ் சொல்வான். ஒரு சமயம் இந்த மனிதன் நானுசோப்தாரை யடித்தான். அதற்காக கோபர்காம் மாஜிஸ்ட்ரேட்முன் குற்றஞ் சாட்டப்பட்டதில் 15 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அவனுக்கு அபராதத்தைக் கொடுக்கவாவது ஜாமீன் கொடுக்கவாவது வகையில்லை. கொஞ்சநாள் ஜயிலில் இருந்தபொழுது ஸ்ரீமான் புட்டி ரூபாய் 15 அனுப்பினுர். அது வேண்டாமென்றும் தன்னை "ஏமாற்றிய" பாபா ரூபாய் 15 கொடுக்கவேண்டும். வேறு எவரும் கூடாது" என்றும் அவன் சொன்னதில் தம் பையிலிருந்து பாபா ரூபாய் 15 அனுப்பி அவனை விடுவித்தார்.

இந்த மனிதன் ஒரு முறை பாபாவை நோக்கி "இங்கே நடப்பதைப் பார்த்தால் இஸ்லாம் கொள்கைகளை கெடுக்கிறுய் என எனக்குத் தெரிகிறது. உமது கழுத்தை வெட்ட வேண்டும்" என்றுன். அதைக் கேட்டதும் பாபா சிரித்தாராம். அப்பொழுது அந்த மனிதன் பாபாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதில் அதற்கும் அவர் சிரித்தாராம்.

பாபா உயிருடனிருக்கையில் யாரோ ஒருவர் பாபா போய்விடுவார். அவருடன் அவருடைய வேலையெல்லாம் போய்விடுமே என்று பயந்தார். அப்பொழுது பாபா "சமாதிக்குள் இருந்துகொண்டே நான் தடியடி யடிப்பேன்" என்றுர். அவர் இறந்ததால் அவருடைய சக்தி பிரவாஹமும் செயல்களும் நின்று போகாது என்பது இதன் கருத்து.

1936 அக்டோபர் மீ 20உ

சங்கரநாராயணன் கிருஸ்துவர். 50 வயது. தாணுவில் போலிஸ் டிப்டி சூபரிண்டேண்டேண்டுடைய "ரீடர்" குமாஸ்தா.

1918 (அக்டோபர்)-ல் பாபா வியோக காலத்தில் நான் கோபர்காமில் போலீஸ் பௌஜதார். பாபாவிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. எங்கள் மனிதர்களைக் கொண்டு நாங்கள் பாபாவைப் பார்வையில் வைத்துக் கவனித்துக்கொண்டிருந்தோம். நான் சந்தேகத்துடன் அவரைப் பார்த்தபோதிலும் எனக்கு அவரிடம் அதிக மதிப்புண்டாய்விட்டது. பணமாவது பெண்ணாவது அவரை அசைக்க முடியாது என்பது முதல் விஷயம். பல பெண்பிள்ளைகள் அவரிடம் வந்து தங்கள் தலையை அவர் பாதத்தில் வைத்து எதிரில் உட்காருவர். ஆனால் அவர் மனம் கலங்கவில்லை. ஆசையான பார்வையாவது அவரிடம் கிடையாது. அவர் ஒன்றிலும் பற்றற்றவர் என்பதற்கு சந்தேகமேயில்லை. பணத்தைப் பற்றியும் நாங்கள் அவரைக் கவனித்தோம், ஜனங்கள் தாங்களே பணம் கொடுத்தனர். யாராவது பணம் கொடுக்காமற் போனால், பாபா அவனைத் திட்டுவதில்லை வெறுப்பதில்லை அதிருப்தி யடைவதுமில்லை. அன்னம் பிக்ஷை யெடுப்பதிலும் அவர் அப்படியே. கிடைத்த சாமான்களை துரும்பாக வெண்ணினர். கிடைத்த பொருள்களனைத்தையும் தாராளமாக வாரி வாரி யிறைத்தார். அவர் காலமானபொழுது அவருடைய சொத்தை நாங்கள் கைப்பற்றினோம். பதினாறு ரூபாய்தானிருந்தது. இருந்தாலும் தினமும் அவர் பல நூறுகள் கொடுத்து சிலவிடுவார். அவர் வருமானத்தைவிட

செலவுகள் அதிகமாக இருப்பதாக நாங்கள் அடிக்கடி கண்டோம். அப்படிக் கொடுப்பதற்கு எங்கிருந்து அதிகப் பணம் வந்தது என்பது எங்களுக்கு விளங்கவில்லை. அதனால் அவருக்கு தைவீக சக்தியிருக்கிறதாக நாங்கள் முடிவுசெய்தோம். மேலும், எல்லாமதங்களையும் அவர் பெருந் தன்மையாகப் பார்த்தார். எந்த ஜாதி, நிலைமை வகுப்புக்களிலுள்ள எந்த மனிதனையும் அவர் குறைவாக மதிக்கமாட்டார். நான் அங்கு போனபொழுது "பௌஜதார் ஒரு கிருஸ்தவர்" என்று அவரிடம் சொன்னார்கள். அவர் "அதனாலென்ன? அவர் என் சகோதரர்" என்றார். அவருடைய சக்தி ஆச்சரியமானது. ஒரு போலீஸ் அதிகாரி அவரிடம் போனார். பாபா அவரை தக்ஷிணை கேட்டார். அதிகாரி தம்மிடம் ஒன்றுமில்லை என்றார். பாபா "உன் பையைப் பார் அதில் ஐம்பது ரூபாய் நோட்டு இருக்கிறது" என்றார். உடனே அந்த நோட்டை எடுத்து பாபாவுக்குக் கொடுக்க நீட்டினார்.

பாபா அதில் கொஞ்சம் கொடுக்கச் சொன்னார். மீதியை வைத்துக்கொள்ளச் சொன்னார். "வெகு சீக்கிரத்தில் உனக்கு ஆபத்து வரும் அதற்கு செலவுக்கு வேண்டியிருக்கும்" என்றார். பாபா சொன்னபடிக்கு ஆபத்து வந்தது. அதிலிருந்து தப்பித்துக்கொள்ள அதிகாரி மீதிப் பணத்தை யுபயோகப்படுத்த வேண்டியிருந்தது. இம்மாதிரி கஷ்டத்திலிருந்து தப்பிய பிறகு அவர் மீதிப் பணத்தை சீர்டிக்கு அனுப்பிவிட்டார்.

பாபா காலமானதும் அவருடைய சொத்துக்களை சர்க்கார் ஜப்தி (பறிமுதல்) செய்தார்கள். அந்த சமயம் நான் உதவி செய்தேன். அந்தச் சொத்து எவருக்கு சேருவது என்று நிச்சயிப்பதற்கு பொது ஜனங்களிடமிருந்து வாக்கு மூலங்கள் வாங்கினேன். அந்த வாக்குமூலங்களிலிருந்து

தாம்லட்தார் மாஜிஸ்ட்ரேட் ஸமஸ்தானத்துக் கனுகூலமாய் உத்தரவிட்டார். இதனால் சமஸ்தானத்திற்கு அதிக தொந்தரவு நீங்கிற்று. பாபாவின் உதி அனேக வியாதிகளைத் தீர்த்திருக்கிறது.

1936 ஸெப்டெம்பர்மீ 26வ பண்ட்ரா

ஜோஸப் பௌஜதார், (ரிடைர்ட்) கிருஸ்தவர், 46, டர்னர் ரோட், பண்ட்ரா.

நான் எப்பொழுதும் சீர்டிக்குப் போனதில்லை. இங்குள்ள நண்பர்களிடமிருந்து அவரைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அவருடைய படத்தை என்னுடன் இங்கு வைத்திருக்கிறேன். படத்தையாவது ஸாயிபாபாவையாவது நான் பூசை செய்கிறதில்லை. நான் அவரை ஒரு மஹானாக மதிக்கிறேன். அவருக்கு அபார சக்தியிருந்தது.

1917-ல் நார்வேகர் (கஜானன்) வியாதியாய் இருந்தார். அவர் பிள்ளை ரூபாய் 500 எடுத்து பாபாவிடம் கொடுத்தார். பாபா அதைப் பெற்றுக்கொண்டதும் ஜுரத்தால் நடுங்கினார். "ஏன்" என்று கேட்டதும் பாபா "எவருக்காவது ஏதாவது செய்ய நினைத்தால் அந்த பாகங்களையும் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்றார். கொஞ்ச நாள் கழித்து கஜானன் நார்வேகருக்கு ஜுரம் போய்விட்டது.

ஒரு சமயம் கஷ்டமான குற்றத்தை புலன் வைத்து கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. நான் உதவி வேண்டும் என்று வேண்டினேன். ஸாயி பாபா கனவில் வந்து நான் எப்படி போகவேண்டும் என்று வழிகளைச் சொல்லிக்கொடுத்தார். அவர் சொன்னபடி செய்து அந்த குற்ற சங்கதிகளைக் கண்டுபிடித்தேன்.

1916-ல் பயங்கரமான பட்டாணிய கொள்ளைக்காரரிருவர் இருந்தனர். நானும் சிப்பாய்களும் அவர்களைப் பிடிக்க முயன்றோம். பட்டாணி என் சிப்பாயைக் கொன்றான். எனக்கும் காயம் பட்டு ஆஸ்பத்திரிக்குப் போனேன். இந்த விஷயத்தை பாபா ஒருவகையாகத் தெறிவித்தார்.